யுனெஸ்கோ

உலகைக் காட்டும் ஜன்னல்

# கூரியர்

மே 1968
ஆண்டுச் சந்தா ரூ. 10.50.
தனிப்பிரதி ரூ. 1.00



## எழுத்தறிவு

வளர்ச்சிக்குப் படிகல்

# வேண்டுகோள்

**யுனெஸ்கோ உறுப்பு நாடுகளுக்கு**
**எழுத்தறிவு இயக்க சர்வதேச ஆலோசனை—இணைப்புக்**
**குழுவினால் விடுக்கப்படுவது**

நாம் வாழும் காலத்தின் மிக முக்கியமான அவசரக் கடமைகளில் ஒன்று செல்வமிக்க நாடுகளுக்கும் வளம் குறைந்த நாடுகளுக்குமிடையேயுள்ள இடைவெளியை அகற்றுவதாகும். வளர்ச்சிக்குப் பயனுள்ள விதத்தில் உதவவோ அல்லது அதனால் பயனடையவோ முடியாத விதத்தில் 100 கோடிப் பேர் உள்ளனர் என்பதும் பயங்கரமாகத் தெரியும் உண்மையாகும். இந்த மாபெரும் மகத்தான கடமையை மேற்கொள்வது இருபதாவது நூற்றாண்டைச் சேர்ந்த நமது தலைமுறையினர் பொறுப்பாகும். மனித உரிமைகள் ஆண்டு விழாவின்போது இதன் வரலாற்று முக்கியத்துவம் நன்கு தெளிவுபடுத்தப்படும்.

1965 செப்டம்பர் 8 முதல் 19ந் தேதி வரை டெஹ்ரானில் நடைபெற்ற எழுத்தறிவின்மையை அகற்றுவதற்கான கல்வி மந்திரிகளின் உலக மாநாட்டில் எழுத்தறிவின்மை மனித குலம் முழுவதையும் பாதிக்கும் ஒன்றென்றும், மனிதனுடைய கௌரவத்துக்கு ஊறு விளைவிப்பது என்றும் வளர்ச்சிக்குத் தடை கல் என்றும் அங்கீகரிக்கப்பட்டது. எழுத்தறிவின்மையை அகற்றுவதற்கு சர்வதேச ஒருமையுணர்வும் ஒத்துழைப்பும் மிக முக்கியமானவை என்பதை மாநாடு பலமாக வற்புறுத்தியது.

இந்தப் பணிக்கு தேவையான சாதனங்களுக்கும் இப்போதுள்ளவற்றிற்குமிடையே ஏணி வைத்தால் கூட எட்டாத நிலையிலிருந்த போதிலும் நம்பிக்கை தரும் சில அம்சங்கள் புதிதாகத் தோன்றியுள்ளன.

சர்வதேச சமுகத்தின் மதம் மற்றும் தார்மிகத் தலைவர்களின் வேண்டுகோள்களும், எழுத்தறிவு இயக்கத்துக்கு முனைந்து பாடுபடுவதென பல நாட்டு சர்க்கார்கள் கொண்டுள்ள உறுதியும், சர்வதேச ஒருமையுணர்வுத் துறையில் புலப்படும் அறிகுறிகளும் இப் பணி எல்லா நாடுகள் மீதும் சுமத்தும் புனிதமான கடமையும் யுனெஸ்கோவின் உலக எழுத்தறிவு இயக்கத்தின் தொடக்கமும் புதிய வாய்ப்புக்களுக்கு வழி செய்து நம்பிக்கையையும் உறுதியையும் ஊட்டுவதாக உள்ளன.

யுனெஸ்கோவின் எழுத்தறிவு இயக்கத்துக்கான சர்வதேச ஆலோசனை-இணைப்புக் குழுவின் சார்பில் யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகளின் சர்க்கார்களை யுனெஸ்கோ எழுத்தறிவுப் பணிக்கான விசேஷ நிதிக்கு ஏற்கனவே தாமாக முன் வந்து நிதி உதவியுள்ள நாடுகளின் உதாரணத்தைப் பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன். இதற்குப் பொதுமக்களும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும் கூட உதவ முன் வர வேண்டும்.

உலகம் முழுவதும் எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கு சர்வதேச ஒருமையுணர்வு உதவ முடியும். அதை ஏற்படுத்துவதற்கான பரவலான இயக்கம் ஒன்றை நடத்த உகந்த நேரம் இது என்று குழு கருதுகிறது. 19, 20ம் நூற்றாண்டுகளில் பல ஜனநாயக உரிமைகளைப் பெற்றுள்ள நாம் எல்லோருக்கும் கல்வி பெற வாய்ப்பு அளிப்பதும் சாத்தியமேயாகும்.

மனிதகுல கௌரவத்துக்கும் முன்னேற்றத்துக்கும் இவ்வளவு பெரும் முக்கியத்துவம் வாய்ந்த முயற்சியின் வெற்றிக்கு எல்லா நாட்டு சர்க்கார்களும் உதவ விரும்பும் என்று கமிட்டி நிச்சயமாக நம்புகிறது.

பாரிஸ்,
செப்டம்பர் 7, 1967.

**அஷ்ரா:ப் பஹ்லாவி**
**தலைவர், எழுத்தறிவு இயக்க சர்வதேச**
**ஆலோசனை—இணைப்புக் குழு.**

உலகைக் காட்டும் ஜன்னல்
யுனெஸ்கோ
# கூரியர்

மே 1968

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினுல் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினுல் பதினேரு பதிப்புகளாக வெளியிடப்படுகிறது**

ஆங்கிலம்
ஃபிரெஞ்சு
ஸ்பானிஷ்
ரஷ்யன்
ஜெர்மன்
அராபிக்
அமெரிக்க ஐக்கிய நாடு
ஜப்பானிஸ்
இத்தாலியன்
ஹிந்தி
தமிழ்

விற்பனை, வினியோக அலுவலகம் :
441, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50

**யுனெஸ்கோ கூரியர்**, செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர் அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) காப்பிரைட் அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் **யுனெஸ்கோ கூரியரிலிருந்து** எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு பிரசுரித்துக் கொள்ளலாம். அவ்வாறு பிரசுரித்த இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். காப்பிரைட் அல்லாத போட்டோக்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது **யுனெஸ்கோ கூரியர்** ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம் :
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7, ஃபிரான்ஸ்.
பிரதம ஆசிரியர் :
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர் :
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள் :
ஆங்கிலப் பதிப்பு : ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு : ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு : அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு : விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு : ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு : அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு : ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்யோ)
இதாலியப் பதிப்பு : மரியா ரெமிட்டி (ரோம்)
இந்திப் பதிப்பு : ஏ. சந்திரஹாஸ் (டில்லி)
தமிழ் பதிப்பு : எஸ். கோவிந்தராஜுலு (மதரூஸ்)
ஆராய்ச்சி : ஒல்கா ரோடல்
அமைப்பு, சித்திரம் : ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier
MAY 1968 No. 11

**இதழ் 11.**

1968
மனித உரிமைகளுக் கானசர்வதேச ஆண்டு

பக்கம்

2 வேண்டுகோள்
எழுத்தறிவு இயக்க சர்வதேச ஆலோசனை - இணைப்புக் குழு

4 எழுத்துக்கு அப்பால்
பெர்னண்டோ வால்டர்ரம்மா

9 எழுத்தறிவு இயக்கத்தை அணுகும் முறை
—அச்சர் டெலியான்

13 எழுத்தறிவு : வளர்ச்சிக்கு முதல்படி

17 மாபெரும் மாற்றத்துக்கு அடிகோலிய சுருக்கெழுத்து வகுப்பு
—பிரான்ஸெஸ்கோ சாலிஸ் & லூஸியோ அடினெல்லி

18 கவிதைப் போட்டிகள் நடத்தும் தீவு

23 ஈரானிய இளவரசி அஷ்ராஃபுடன் ஒரு பேச்சு

26 எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கான நமது ஒரே நம்பிக்கை
—சர். சார்லஸ் ஜெஃப்ரிஸ்

32 மனித உரிமைகளுக்கான சர்வதேச ஆண்டு
—யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் ரெனி மாஹி செய்தி

Photo © Jean Suquet



No 4 - 1968 MC 68 - I - 234

**அட்டைப் படம்**

எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கான போராட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, இன்று வரை அடைந்துள்ள முன்னேற்றம், உலகின் பல பகுதிகளில் இன்னமும் நாம் சமாளிக்க வேண்டியிருக்கும் ஏராளமான பிரச்னைகள் பற்றி இந்த இதழ் ஆராய்கிறது. எழுத்தறிவற்றவர்களாக 100 கோடி மக்கள் இருக்கும் உலகின் அவல நிலையை அண்மையில் எடுத்துரைத்த யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் இவ்வளவு பெரிய தீமைக்கு எதிரான போராட்டத்தை மனித குலம் முழுவதும் ஒத்துழைத்து நடத்த வேண்டும் என்ருர்.

# எழுத்துக்கு அப்பால்

**பெர்னாண்டோ வால்டெர்ரம்மா**



பிரேஜில் நாட்டு சிறு நகரமொன்றின் கடைத்தெருவில் ஒரு புத்தக விற்பனையாளர் கையில் ஒலிபெருக்கியுடன் கவனமாகக் கேட்கும் மக்களுக்குப் படித்துக் காட்டுகிறார். பெரும்பாலானவர்கள் படிப்பு வாசனையில்லாதவர்கள். படிக்கப்படும் கதைகளுக்கு எல்லோரும் காசு கொடுப்பார்கள். பேச்சின் மூலமே அறிவு பெற வாய்ப்புள்ள 70 கோடிப் பேருக்கு மேல் உலகில் உள்ளனர்.

Photo © Holmes-Lebel, Paris - Claude Jacoby

எழுத்தறிவின்மையும் அறிவின்மையும் ஒரே நிலையைக் குறிக்கின்றனவென்று பொதுவாக மக்கள் நினைக்கிறார்கள். எழுத்தறிவின்மை சில சமயங்களில் இழிவையும் குறிக்கிறது. ஆனால் எழுத்தறிவில்லா மக்களிற் பெரும்பாலோர் தம் நிலையை நினைத்து வெட்கப் படுவதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு எழுத்தறிவில்லாததால் அவர்கள் அக்குறையை உணர்வதில்லை. எழுத்தறிவுடையோர் அவ்வறிவினைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிவதில்லை. அதனால் தம் நிலையில் மாறுதல் தேவையென்பதையும் அவர்கள் உணர்வதில்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குச் சில நாடுகளில் முழுக்குடியுரிமையில்லை; அரசியல் துறையில் அவர்களுக்கு வாக்குரிமையில்லை; சமுதாயத்தின் எல்லையில் வாழ்பவர்கள் என்று அவர்கள் கருதப்படுகிறார்கள். எனினும், சில கணக்கெடுப்புக்களின்படி. எழுத்தறிவில்லாதவர்களுள் அறுபது எழுபது சதவிகிதத்தினர்க்கு எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளும் விருப்பம் இல்லையென்று தெரிகிறது.

எழுத்தறிவின்மை பிளேக் போன்ற ஒரு கொடிய நோயென்றே இப்போது கருதப்படுகிறது. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் நம்மீது பகை கொண்டுள்ள ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களை நாம் பூண்டோடு அழித்துவிட வேண்டும் என்றும் எண்ணும் நிலைக்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். நாம் இப்போது பயன்படுத்தும் சொற்களும் சொற்றொடர்களுமே இந்த நிலையை விளக்குகின்றன. எழுத்தறிவின்மையின் மீது ''போர்'' தொடுக்கவேண்டும், ''சண்டை'' செய்யவேண்டும், ''கடைசித் தாக்குதலை'' தொடங்கவேண்டும், அதனை ''அழிக்க'' வேண்டும், ''ஒழிக்க' வேண்டும் என்றுதான் நாம் இப்போதெல்லாம் பேசுகின்றோம். இவையெல்லாம் போர்க்களச் சொற்களல்லவா?

இந்தக் கோணத்திலிருந்து நோக்கும் போது எழுத்தறிவில்லாதவன் மனிதனாகவே தோன்றவில்லை. நம்முடைய உதவி அவனுக்குக் கிட்டுமானால் அவன் தானும் உயர்ந்து சமுதாயத்திற்கும் நல்ல பயன் தரும் மனிதனாவான். அதற்கு மாறாக அவன் இப்போது வேட்டைக்காரனால் துரத்தப்படும் விலங்கு போல் காட்சியளிக்கிறான். ஆதலால், நாம் முன் காட்டிய சொற்களுக்குப் பதிலாக நம்பிக்கையூட்டும் நல்ல உடன்பாட்டுச் சொற்களைப் பயன்படுத்துவதே அறிவுடைமையாகும்.

இவ்விஷயத்தில் ஒரு புதிய கருத்து உருவாகி மெதுவாகப் பரவிக் கொண்டு வருகிறது. தனித்து வாழும் மக்கள் கூட்டங்கள் எழுத்தறிவில்லாமலிருப்பது தங்களுடைய அறியாமையாலன்று என்றும் வரி வடிவம் பெற்ற சொற்களஞ்சியத்தின் எல்லைக்கு வெளியில் அவர்கள் இருப்பதால்தான் என்றும்

---

**பெர்னாண்டோ வால்டெர்ரம்மா:** யுனெஸ்கோ எழுத்தறிவு பிரிவில் பணியாற்றும் இவர் வட மொரோக்காவில் 20 ஆண்டு காலம் கல்வி ஆலோசகராக இருந்தவர். ஸ்பெயினில் பிறந்த இவர் இஸ்லாம் மதவியல் நிபுணர். மாட்ரிட் பல்கலைக் கழகத்தில் சமுகவியல் மற்றும் அரபு மொழிப் பேராசிரியராக இருந்தவர்.



இப்போது பலர் எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். இப்புதிய கருத்தை ''வரி வடிவம் பெற்ற சொற்களஞ்சிய எல்லைக்கு அப்பால் வாழும் சமுதாயம்'' என்று விளக்கலாம்.

எழுத்தறி வில்லாதவன் அறிவில்லாதவன் அல்லன். வயதுவந்தவர் அனைவர்க்குமே வாழ்க்கையனுபவம் ஓரளவிருக்கின்றது. அவர்களுள்ளும் மூத்தவர்களுக்கு இவ்வனுபவம் இன்னும் சிறிது அதிகமாகவே யிருக்கிறது. அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் உய்வு தேவையல்லவா? அதனால், அவர்கள் வேலை தேடி, கிடைத்த வேலையைச் செய்து, அந்த அளவுக்குப் பொறுப்புக்களை ஏற்கப் பயின்றவர்கள்.

எழுத்தறிவில்லாதவன் பெற்றுள்ள கணக்கறிவு இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக விருக்கின்றது. ஒரு குழந்தை கணக்குக் கற்கும்போது பத்து வரையில் எண்ணுவதற்கே முடியாமல் திணறுகிறது. மேலும் அந்த எண்களெல்லாம் வெறும் எண்களாக இருக்கின்றனவே யொழிய ஐம்பொறிகளுக்கெட்டுகின்ற எந்தப் பொருளையும் குறிப்பதில்லை. பள்ளியில் குழந்தை ஒன்று, இரண்டு என்று எண்ணவும், அவ்வெண்களை எழுதவும், அவ்வெண்களை வைத்துக்கொண்டே கூட்டல் கழித்தல் முதலிய அடிப்படைத் திறன்களைப் பெறவும், அவற்றின் உதவியால் கணக்குகளைப் போடவும் பயில்கிறது. ஏனைய பாடங்களைப் போலவே, கணிதமும் குழந்தையை அது முன்னர் அறியாத புதியதோர் உலகிற்கு இட்டுச் செல்கிறது. குழந்தை பள்ளிப்பாடங்களைப் பயில்வதன் மூலமும் இயற்கை வளர்ச்சியின் மூலமும் இப்புதிய உலகத்தை நாளடைவில் நன்கு தெரிந்துகொள்கிறது.

எழுத்தறிவில்லாத வயது வந்த மனிதன் நிலை வேறு. அவனுக்குப் பொது அறிவு இல்லை. நிலநூல், வரலாறு, அறிவியல் முதலிய பொது அறிவுத் துறைகள் அவன் மன உலகில் இல்லை. எனினும், அவன் பல பொருள்களை விற்றிருக்கிறான்; இன்னும் பல பொருள்களை வாங்கியும் இருக்கிறான்; தன் உழைப்புக்குரிய ஊதியத்தைப் பெற்றிருக்கிறான். அவ்வாறு அவன் சம்பாதிக்கும் பணம் சரியாக இருக்கிறதா என்று கணக்குப் பார்த்திருக்கிறான். எனவே, சிறு கணக்குகளைப் போடுவதற்கு அவன் சில தொடக்க நிலை முறைகளைக் கையாண்டிருக்கிறான். அவன் பிறருக்குப் பணங்கொடுத்திருக்கிறான்; எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்பதை அவன் முன்கூட்டியே கணக்கிட்டிருக்கிறான்; அவனிடமிருந்து அல்லது அவனுக்கு கிடைக்குமென்று எதிர்பார்த்த பணத்தின் அடிப்படையில் அவன் திட்டங்களை வகுத்திருக்கிறான்; யாதேனும் ஒரு துண்டு நிலத்தை அவன் அளந்து பார்த்திருக்கவும் கூடும்.

எனவே அவனுடைய வாழ்க்கையில் பல பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. அவற்றைத் தன்னுடைய ஆற்றலுக்கேற்ற முறையில் அவன் சமாளித்திருக்கிறான். ஆதலால் அவன் எழுத்தறிவுப் பள்ளியில் சேர்கின்ற போது கணிதம் அவனுக்குப் புதிதாகத் தோன்றுவதில்லை. வரிவடிவம் பெற்ற எண்களை அவன் அறிந்ததில்லை யென்பது உண்மைதான். ஆனால்



Photo Unseco - Dominique Roger

### தீப்பெட்டிகளில் நெடுங் கணக்கு

**வலது:** எழுத்தறிவை வளர்க்க தீப்பெட்டிகளும் கூட உதவ முடியும். ஈக்வேடரில் இவை போதிப்பதற்கான சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் ஒரு பொருளின் படமும், பெயரும் அதன் முதல் எழுத்தும் உள்ளன. L - லூனா (சந்திரன்) E - எஸ்கோபா (துடைப்பம்) S - சாபோ (தவளை) - இவ்வாறு.

**இடது:** கற்பதற்கு வயது கிடையாது என்ற பழமொழிக்கேற்ப ஈக்வேடர் பண்ணைத் தொழிலாளி நடக்கிறார். 16000 முதியோர்களுக்கென நடத்தப்படும் எழுத்தறிவு வகுப்பில் அவர் படிக்கிறார். உலகின் எல்லாப் பகுதிகளிலும் லட்சக்கணக்கான முதியோர் இன்று எழுத்தறிவு பெற்று வருகிறார்கள்.

# பெயரில்லாத தெருக்கள் திறந்த புத்தகங்களாக நகரங்கள்

8 என்று எழுதப்பழகிய உடனே அந்த எண்ணின் நடைமுறை மதிப்பு என்ன என்பது அவனுக்கு விளங்கிவிடுகிறது.

எழுத்தறிவில்லா விட்டாலும் அவன் யாதேனும் ஒரு தொழில் தெரிந்தவனாக இருக்கின்றான். அவன் ஓர் உழவனாகவோ கருமானாகவோ தச்சனாகவோ தொழில் புரிகிறான். அந்தத் தொழிலில் அவனுக்குள்ள அறிவு அந்தத் தொழில் தெரியாத ஒரு படிப்பாளியின் அறிவை விட அதிகமானது.

ஆனால் புதிய முறைகளில் பொதுவாக அவனுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. வெளியிலிருந்து வருகின்ற கருத்துக்களும் திறன்களும் நல்ல பலனை அளிக்கக்கூடும் என்பதில் அவன் ஐயப்படுகிறான். எழுத்தறிவைப் பற்றியும் அவனுக்கு இத்தகையதொரு மனப்பான்மை யிருக்கக்கூடும். தலைமுறை தலைமுறையாக வந்த அவனுடைய வாழ்க்கைமுறை அவன் நன்கு அறிந்த ஒன்றாகும், மேலும், அது ஓரளவு வெற்றிகரமாகவும் இருந்திருக்கிறது.

ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த முதியவள் ஒருத்தி ஒரு சமயம் பின்வருமாறு சொன்னாள்: ''எங்களுக்கு ஒன்றுமே தெரியாதென்று நீங்கள் நினைக்கிறீர்கள். நீங்கள் சொல்கிறவாறு நாங்கள் இதுவரையிலும் உடல் நலத்தைக் கெடுக்கும் உணவையே உண்டும், தவறான முறையில் பயிர்த்தொழிலை செய்தும், உடல் நல விதிகளுக்கெல்லாம் மாறாகக் குழந்தைகளை வளர்த்தும் வந்திருந்தால் நாங்கள் அனைவரும் இறந்து போயிருப்போம். ஆனால் நாங்கள் உயிரோடு தானே இருக்கின்றோம்?''

கிராமவாசி பரம்பரைப் பழக்க வழக்கங்களில் மிகுந்த நம்பிக்கையுடையவன். ஆதலால் அவனுக்கு நகர வாழ்க்கை முறையில் நம்பிக்கையில்லை. மூட நம்பிக்கைகளும் கடவுள் வழிபாட்டு முறைகளும் பின்னிப் பிணைந்த பலமான அடிப்படையில் அவனுடைய சமுதாய வாழ்க்கை அமைந்திருப்பதால், அவ் வாழ்க்கையில் புதியன புகுவது எளிதாக இல்லை. புதிய சாலை போடுதல், சுரங்கத் தொழிலையோ வேறொரு தொழிலையோ புதிதாகத் தொடங்குதல் போன்ற கிராம மக்கள் இதுவரை கண்டிராத முக்கிய நிகழ்ச்சி யாதேனும் இருந்தாலன்றி, கிராமவாழ்க்கை சுவையில்லாத தனது பழைய வழியிலேயே நகர்ந்து கொண்டிருக்கும். ஆனால், மாறுதல் ஒன்று ஏற்பட்டு, அதன் மூலம் தனக்கும் தன் குடும்பத்திற்கும் நன்மையுண்டாகும் என்பதை உழவன் அறிகின்ற நிலைமை தோன்றினால், கிராம வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அந்த மாறுதலே சிறந்த ஊக்கியாக இருக்கும்.

கிராமவாசி எழுத்தறிவு பெற்ற பின்னர் அவன் படிப்பதற்கு அவன் வாழும் கிராமத்தில் என்ன இருக்கிறது? உள்நாட்டுக் கிராமங்கள் சிலவற்றில் தெருக்களே யில்லை. தெருக்கள் இருந்தாலும் அவற்றிற்குப் பெயரில்லை. கிராமத்தின் நுழை வாயிலிற்கூட ஒரு பெயர்ப்பலகையில்லை. அங்கே செய்தித்தாள்கள் செல்வதில்லை. ஆதலால் அங்கு வாழ்பவர்கள் முன்னேற்ற விருப்பமும் நம்பிக்கையு மில்லாத சுவையற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

நகரவாசி எழுத்தறிவு பெற்றவுடன் அவன் திரும்புகிற இடத்திலெல்லாம் படிப்பதற்கேற்ற வசதிகள் இருக்கின்றன. கடைகளிலும், சுவர்களிலும் சுவரொட்டிகளிலும் பல்வேறு செய்திகள் எழுதப்பட்டிருக்கின்றன. நகரமே ஒரு விரித்த புத்தகத்தைப் போலிருப்பதால் அவன் தொடர்ந்து கல்வியறிவு பெற முடியும்.

எந்த நாட்டில் வாழ்பவர்களா யிருந்தாலும் எழுத்தறிவில்லாத மக்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்:

முதற்பிரிவைச் சேர்ந்தவர்கள் நகரங்களில் வாழ்கின்ற எழுத்தறிவில்லா மக்கள். இவர்கள் படிப்பதை ஒரு சாதாரண விஷயமாக நினைக்கின்ற தொழிலாளிகள் போர் வீரர்கள் போன்ற எழுத்தறிவுள்ளவர்களோடு கலந்து பழகவேண்டிய இன்றியமையா நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளுவதால் ஏற்படுகின்ற நன்மைகளை உணர்ந்தவர்கள்; கல்வியறிவு பெற்றால் தங்கள் நிலை உயருமென்பதை அறிந்தவர்கள். ஆதலால் எழுத்தறிவு பெறுவதற்குரிய முயற்சியைச் செய்வது இவர்களுக்கு எளிது. இத்துறையில் இவர்களுக்கு வெளியார் ஊக்கந்தர வேண்டிய




Photo Unesco - R. Lesage

தில்லை. இவர்கள் எழுத்தறிவு பெறுதற்குரிய வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்கள்.

இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் சமுதாயவளர்ச்சித் திட்டம் செயல்படுகின்ற இடத்திலோ புதிய தொழில் நிறுவனம் ஒன்று அண்மையில் தோன்றிய இடத்திலோ வாழ்கின்ற எழுத்தறிவில்லா மக்கள். இவர்கள் நகரங்களிலுமிருக்கிறார்கள், கிராமங்களிலும் இருக்கிறார்கள். தொழிலுக்கும் எழுத்தறிவுக்குமுள்ள தொடர்பை இவர்கள் இன்னும் அறிந்துகொள்ள வில்லை. ஆதலால் இவர்களுக்கு வெளியார் தரும் ஊக்கம் தேவையாகிறது.

அனைவருமோ பெரும்பாலரோ எழுத்தறிவு பெறாத இத்தகைய சமுதாயங்களில் தொடங்கப் பெற்றுள்ள வளர்ச்சித் திட்டங்கள் புதியதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றன. இந்தப் புதிய சூழ்நிலையின் இயல்புகளை வரையறுக்கவேண்டும். அதனால் விளையக் கூடிய பயன்களை உண்மையாக மதிப்பிட வேண்டும். எழுத்தறிவுடைய தொழிலாளிகளின் பொருளுற்பத்தி, அஃதில்லாத் தொழிலாளிகளின் பொருளுற்பத்தியைவிட மிகவும் அதிகம் என்பதை உணர்ந்திருக்கும் முதலாளிகள் எழுத்தறிவில்லாத் தொழிலாளிகள் அவ்வறிவினைப் பெறுவதற்கு உதவ வேண்டும். இந்தத் தலைவர்கள் இப்பணியில் உண்மையாக ஈடுபட்டால் புத்திசாலித்தனமான திட்டங்களின் மூலம் தொழிலாளிகளின் நீண்ட நாளைய சோம்பலை நீக்கவும் அவர்கள் எழுத்தறிவு பெறுவதால் அடையக்கூடிய நன்மைகளை எடுத்துக் காட்டவும் முடியும்.

மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் உழைப்புக்குரிய கூலியை ரொக்கமாகப் பெறாமல் தானியமாகப் பெறுகின்ற பயிர்த் தொழிலாளிகள். இத்தகைய உரிமை குறைந்த மக்கள் சில நாடுகளில் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவர்களுடைய நலனில் இவர்களுடைய முதலாளிகள் கவனம் செலுத்துவதில்லை. இந்தத் தொழிலாளிகள் கல்வியறிவும் முன்னேற்றமும் அடைவதற்கு உதவக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு முதலாளிகளை இசைய வைக்க அங்குள்ள அதிகாரிகளால் முடியவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்குப் போதுமான நிருவாக அதிகாரம் இல்லாமைதான். வசதிகள் கிடைத்தால் இந்தத் தொழிலாளிகள் விரைவில் சமுதாய முன்னேற்றம் அடைந்து உணவுப் பொருளுற்பத்தியைப் பெருக்கும் நிலையினை எய்துவார்கள்.

நான்காம் பிரிவைச் சேர்ந்தவர்கள் நாகரிகத்திற்கு எட்டாத இடங்களில் தனியாக வாழ்கின்ற மக்கள். அவர்கள் வாழ்கின்ற இடங்களில் போக்குவரத்து வசதிகளேயில்லை. வரி வடிவம் பெற்ற எழுத்து அங்கிருப்போர்க்குத் தெரியாத ஒன்று. பொருளாதார—சமுதாய மாற்றம் ஏற்படாத வரையில் அங்கு எழுத்தறிவு பரவாது. இரண்டும் ஒருங்கு நடைபெறவேண்டும். பல நூற்றாண்டுத் தேக்கத்தை நீக்கி, அந்த மக்களுக்குப் புதிய வாழ்வில் நம்பிக்கையூட்டி, புதிய துறைகளில் ஊக்கத்தையும் எழுச்சியையும் உண்டாக்குவது மிகவும் கடினமான வேலை.

எழுத்தறிவில்லா மக்களை இந்த நான்கு வகைகளாகத்தான் பிரிக்கலாம் என்று சொல்லமுடியாது. அவர்களுள் இன்னும் பலவகையினரும் இருக்கிறார்கள். எனினும், இவ்வாறு வகைப்படுத்திப் பார்ப்பது எழுத்தறிவுத் திட்டத்தை வகுப்பதற்கு அடிப்படையாக உதவக்கூடும். மேற்கூறிய ஒவ்வொரு பிரிவிலும் எத்தனையெத்தனை பேர் இருக்கிறார்கள், இவர்கள் எங்கெங்கு வாழ்கிறார்கள், இவர்களுள் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர், இவர்களுடைய எழுத்தறிவின்மையின் அளவு என்ன என்பன போன்ற செய்திகளெல்லாம் எழுத்தறிவுத் திட்டம் வகுப்பவர்களுக்குத் தெரியவேண்டும்.

இந்தத் திட்டத்தில் முதலிரண்டு பிரிவினர்க்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். நகரங்களிலும் நகர்ப்புறங்களிலும் இருப்பவர்களுக்கு எழுத்தறிவூட்டும் வேலையை உடனே தொடங்கலாம். இத்துறையில் அவர்களை ஊக்குவது மிக எளிது. அவர்கள் படிப்பதற்குப் பழகிக் கொண்டால் போதும். அதன்பின் அவர்கள் மிகவேகமாக முன்னேறுவார்கள். நகரங்களில் திரும்பிய இடங்களிலெல்லாம் படிப்பதற்குரிய வசதிகள்

# அறிவுபெறப் படிப்பதற்காக படிக்கக் கற்றுக்கொள்ளுதல்

இருக்கின்றன. எழுதவும் படிக்கவும் அறிந்தபின்னர் அவர்களுக்குத் தங்கள் தொழில் திறன்களை வளர்ப்பதற்குரிய கல்வியைப் புகட்டவேண்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் தங்களுக்கும் சமுதாயத்திற்கும் பயன்தரக் கூடிய திறமையான தொழிலாளிகளாக மாறுவார்கள்.

இரண்டாம் பிரிவைச் சேர்ந்த எழுத்தறிவில்லா மக்கள் தங்களுடைய சமுதாய அமைப்பில் மாறுதல் ஏற்படுவதைக் காண்கிறார்கள். சில இடங்களில் இந்த மாறுதல் இப்போதுதான் முதன்முதலாக ஏற்படுகின்றது. எழுத்தறிவு பெறுவதில் அவர்களை ஊக்கவேண்டுமானால் இந்த மாறுதலைத் தான் நாம் தொடக்க நிலையாகப் பயன்படுத்த வேண்டும். எழுத்தறிவு பரப்பும் திட்டத்தை வகுப்பதில் நாம் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் அது தனி மனித வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் ஒருங்கே பயன்படும். இவ்விஷயத்தில் எவ்விதச் சிக்கலும் இல்லை. வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன. வேலை தேடுவோரின் தகுதிகளுக்கேற்ப வேலை தரப்படுகின்றது. அதனால் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு நல்ல வேலையும் உயர்ந்த ஊதியமும் கிடைக்கின்றன.

கடைசி இரண்டு பிரிவினரும் வாழ்க்கை வசதிகள் சமுதாய அமைப்பு ஆகியவற்றில் ஒரே வகையாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இவர்களிடையில் ஒரு மிக முக்கிய வேறுபாடு இருக்கிறது. மூன்றாம் பிரிவினரின் உழைப்பைப் பயன்படுத்தும் முதலாளிகள் எழுதப்படிக்கத் தெரிவதன் நன்மைகளை நன்றாக உணர்ந்தவர்கள். எனினும், அவர்கள் தங்கள் தொழிலாளிகளுக்கு இவ்விஷயத்தில் உதவி செய்வதில்லை. ஆனால் நான்காம் பிரிவைச் சேர்ந்தவர்கள் பின்பற்றக்கூடிய முன்மாதிரியும் இல்லை. அவர்களுக்கு வழி காட்டக்கூடியவரும் இல்லை. இவ்விரண்டு வகையினரிடையிலும் சமுதாய மாறுதல்களையும் பொருளாதார மாறுதல்களையும் புகுத்த வேண்டுமென்பது கண்கூடு. அப்படிச் செய்தால்தான் முன்னேற்றத்தில் ஆர்வமில்லாமல் சோம்பியும் தேங்கியும் கிடக்கும் மக்கள் விழிப்படைவார்கள். இவ்வெல்லா விஷயங்களையும் மனத்திற்கொண்டே எழுத்தறிவுத் திட்டத்தை வகுக்கவேண்டும்.

எழுத்தறிவுத் திட்டம் உண்மையான பயன்தர வேண்டுமானால் அதன் நோக்கங்கள் தெளிவாக இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் இதுவரையில் கவனம் செலுத்தப் படாததால் சில நாடுகளில் நகரப்பள்ளிகளும் கிராமப் பள்ளிகளும் ஒரே பாடத்திட்டத்தைப் பின்பற்றுகின்றன. பிரதேச இயல்புகள் உள்ளூர் இயல்புகள் ஆகியவற்றுக் கிடையிலுள்ள வேறுபாடுகளுக் கேற்ற முறையில் பாடத்திட்டங்களும் வேறுபட வேண்டுமல்லவா?

சில இடங்களில் இரண்டொரு வகுப்புக்களையுடைய கிராமப்பள்ளிகள் எல்லா வகுப்புக்களையுமுடைய முழு வளர்ச்சிபெற்ற நகரப் பள்ளிகளின் அண்மையில் அமைந்திருக்கின்றன. தேவையான பாடப்புத்தகங்கள் உள்ளூரில் வெளிவராததால் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள சில பள்ளிகள் ஐரோப்பியர்களுக்காக எழுதப் பட்ட புத்தகங்களைப் பயன்படுத்துகின்றன. இப்பாட நூல்களிலுள்ள செய்திகள், பெயர்கள், படங்கள் முதலியவற்றிலும் உள்ளூர் நிலைமைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. சரியான படி திட்டமிடப் படாததாலோ பொருள் வசதியின்மையாலோ சில ஆசிரியர்கள் குழந்தைகளுக்காக எழுதப் பட்ட பாட நூல்களை வயதுவந்தோர்க்குக் கற்பிப்பதற்கும் பயன்டுத்துகிறார்கள். அதனால் வயது வந்தோருடைய ஊக்கம் விரைவில் குன்றிவிடுகிறது.

எட்டாத கையில் தனியாக வாழும் கிராமவாசிகள் எழுத்தறிவற்றவர்களாகவும், வறுமையில் வாடுபவர்களாகவும், நோயிற் சிக்கியவர்களாகவும் இருக்கிறார்கள். இம்மூன்று குறைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவையாதலால் எதனை முதலில் போக்குவதற்குத் திட்டமிடுவதென்றே தெரிவதில்லை. மண் அரிப்பைத் தடுப்பதற்குத் திட்டம் வகுக்காமல் உடல் நலம் பேணுந்திட்டத்தில் மிகுந்த கவனம் செலுத்துவதாக வைத்துக் கொள்வோம். மண் அரிப்பால் விளைவு குறையும். விளைவு குறைந்தால் வறுமை பெருகும். வறுமை பெருகினால் ஊட்டங்குறையும். ஊட்டங் குறைந்தால் உடல் நலங்கெடும்.

கல்வி கற்பதற்குரிய ஊக்கத்தைத் தராமலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் புதிதாகக் கைவந்த அறிவைப் பயன்படுத்தும் வாய்ப்பை அளிக்காமலும் கல்வியறிவைப் பரப்ப முயல்வது பேதைமை.

நோயாலும் எழுத்தறிவின்மையாலும் உழவன் மனச்சோர்வடைந்திருக்கின்ற போது பயிர்த்தொழில் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவதும் பயன் தராது.

ஆதலால் பலதுறைகளிலும் உள்ள வல்லுநர்கள் ஒருங்கிணைந்த திட்டங்களை வகுத்து, எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரே சமயத்தில் தீர்வுகாண முயல்வதன் மூலம், வளர்ச்சிபெறாத மக்கள் தங்கள் வாழ்க்கைத்துறைகள் பலவற்றிலும் முன்னேற்றங் காண்பதற்கு உதவவேண்டும். உழவுத் தொழில் சீர்திருத்தம், கூட்டுறவுச் சங்கங்களின் பெருக்கம் முதலியவற்றோடும், சமுதாய முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றோடும், சில சமயங்களில் அரசியற் சூழ்நிலையோடும் எழுத்தறிவு பரப்பும் திட்டத்தின் வெற்றி இணைந்து பிணைந்திருக்கிறது.

எழுத்தறிவுப்பயிற்சி ஓர் இலக்கையடைவதற்குரிய கருவியே தவிர அதுவே இலக்காகாது. வளர்ச்சியில் அதுவோர் இன்றியமையாத கூறாகும். இவ்வுண்மையின் அடிப்படையில், ஆங்காங்கே காணப்படும் நிலைமைகளுக்கேற்றவாறு தெளிவாக வரையறுக்கப்பட்ட நோக்கங்களோடு நாம் திட்டங்களை வகுக்க வேண்டும். திட்டம் தேவையில் தோன்றி, தேவையை நிரப்பவேண்டும்.

எழுத்தறிவு பெறுவது நல்லது என்று உணர்ந்து அதனைப் பெறுதல் ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்டு மக்கள் அம்முயற்சியில் ஈடுபட்ட காலம் மலையேறிவிட்டது. அதனால் ஏனைய வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்பில்லாத எழுத்தறிவுத் திட்டத்தைத் தொடங்குவது அறிவுடைமையாகாது. போதுமான அளவில் முன்னாலோசனை செய்யவும், எதிர்காலத்தில் என்னவெல்லாம் தேவைப்படும் என்று எண்ணிப்பார்க்கவும், பல்வேறு நோக்கங்களைக்கொண்ட பரந்த இயல்புடைய திட்டத்தை வகுக்கவும் தவறிவிட்டால் நாம் தோல்வியைத்தான் அடைவோம்.

ஒரு நாட்டுமக்கள் தங்களுடைய சமுதாய அமைப்பிலும் வளர்ச்சித் திட்டங்களிலும் மாறுதல்களை ஏற்படுத்தும் ஆக்க வேலையில் ஈடுபடாமலிருக்கின்ற நேரத்தில் நாடு முழுவதற்கும் ஏற்ற பெரியதோர் எழுத்தறிவுத் திட்டத்தைத் தொடங்குவது மிகவும் தவறான முயற்சியாகும். அவ்வாறு செய்வது தீர்க்க முடியாத புதிய ஆசைகளைத் தூண்டி விடுவதாக முடியும். இத்தகைய நிலையில், வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறையில் இருக்கும் பகுதிகளிலும் அவை விரைவில் தொடங்கவிருக்கும் பகுதிகளிலும் மட்டும் எழுத்தறிவுத் திட்டத்தைப் புகுத்த வேண்டும். உழவு, தொழில், உறையுள், உடல்நலம் முதலிய எந்தத்துறையில் சமுதாய வளர்ச்சித் திட்டத்தைத் தொடங்குவதாயிருந்தாலும் அத்திட்டத்தில் எழுத்தறிவுப் பெருக்கம் இடம் பெறவேண்டுமென்பதைப்பொதுவான விதியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேற்கூறியவாறு தெரிந்தெடுத்த பகுதிகளில் சிறிய திட்டங்களின் மூலம் எழுத்தறிவைப் பரப்பும் முயற்சி அரசியல் வாதிகளை எளிதில் கவராது. அவர்கள் விரும்புகின்ற ஆடம்பரம் அதில் இராதல்லவா? ஆனால் அத்தகைய திட்டங்கள்தான் உண்மை நிலைக்கு ஏற்றவையாக இருக்கும். அவை நல்ல பயன் தரும்; அந்தப் பயனும் நிலைத்து நிற்கும்.

எழுத்தறிவுத் திட்டத்தால் பயன் பெறும் மக்கள் வயது வந்தவர்கள். அவர்கள் பெறுகின்ற எழுத்தறிவு அவர்களுடைய வேலைத்தரத்தை உயர்த்துகின்றது. ஆதலால் வாழ்க்கைப் பணிகளோடிணைந்த எழுத்தறிவுத் திட்டம் விரைவில் பயன்தரக் கூடியது. ஆனால் தொடக்கக் கல்விக்காகச் செலவாகும் பணம் நீண்ட நாளைக்குப் பின்னரே லாபந்தரக் கூடியது.

எழுத்தறிவு தொழிற் பயிற்சிக்குப் பெரிதும் உதவக்கூடியது. சமுதாயச் சூழ்நிலையை மாற்றுவதில் அதுவோர் அடிப்படைக் காரணமாக இருக்கும். அறிவுக் கருவூலத்திற்கு அது திறவுகோலாகிறது. எனவே, எழுத்தறிவுடைய வயது வந்தோர் நல்ல செய்தியறிவுடைய குடிமக்களாகவும் உற்பத்தியாளர்களாகவும் இருப்பார்கள்.

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

# எழுத்தறிவு இயக்கத்தை அணுகும் முறை

**எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கான போராட்டத்தில் யுனெஸ்கோவும், பல நாடுகளும் அண்மையில் ஒரு புதிய முறையைக் கையாளுகின்றன. பொருளாதார வளர்ச்சி விடுக்கும் சவாலை ஏற்கக் கூடியதாக அது உள்ளது. உலக அளவில் இப்பிரச்னையைத் தீர்க்க முயலும் பழைய நடைமுறையிலிருந்து விலகி நாடுகள் தேர்ந்தெடுத்த பகுதிகளில் இப்பணியைத் தீவிரமாகச் செயல்படுத்தும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. யுனெஸ்கோ எழுத்தறிவுத் திட்ட இயக்குநரான அச்சர் டெலியான் இங்கு, உலகின் பல பகுதிகளிலும் அமுல் நடத்தப்பட்டு வரும் புதிய பரிட்சார்த்தத் திட்டங்கள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.**



**அச்சர் டெலியான் 1963-லிருந்து யுனெஸ்கோவின் முதியோர் கல்வி, இளைஞர் நடவடிக்கைகள் பிரிவு இயக்குநராக இருந்து வருகிறார். யூகோஸ்லாவ் தொழிற் சங்கங்களின் மத்தியக் கவுன்சில் முன்னாள் செயலாளரான இவர் முதியோர் கல்விக்கான யுனெஸ்கோ சர்வதேச ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக 1953 முதல் இருந்து வருகிறார்.**



Photo Unesco - Marc Riboud

**கேள்வி: டெலியான் அவர்களே, எழுத்தறிவின்மையை எதிர்த்து நடக்கும் போராட்டம் இன்று எந்த நிலையில் இருக்கிறது?**

**பதில்:** இப்போது நாம் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்திருக்கிறோம். உலக நாடுகள் சமீபகாலம் வரை இயந்திரங்களிலும், நிர்வாகப் பொறுப்பு வகிப்பவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் ஏராளமாக பணத்தை செலவிட்டு வந்தன. இவை இன்று தங்களுடைய பெரும் ஜனத்தொகைகளை உபயோகித்துப் பயன்பெற விரும்புகின்றன. நீதி, மனித உரிமை ஆகியவற்றின் பெயரால் முன்பு எழுத்தறிவு இயக்கத்தின் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் இப்போது கல்விக்காக நாம் செலவழிக்கும் பணம் பொருளுற்பத்தி, வேலைத்திறனில் முன்னேற்றம் ஆகியவைகளுக்கு—அதாவது, பொருளாதார வளர்ச்சிக்கு—உதவ வேண்டுமென்று நினைக்கிறோம்.

**கேள்வி: அப்படியானால், எழுத்தறிவு இயக்கத்திற்கு இனி நீதி, மனித உரிமை முதலியவை முக்கிய அம்சங்கள் அல்லவென்று பொருள் கொள்ளலாமா?**

**பதில்:** அப்படியல்ல ஆனால் மனித சுதந்திரத்திற்குப் பொருளாதார விடுதலை இன்றியமையாததென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**கேள்வி: எழுத்தறிவு இயக்கத்தில் யுனெஸ்கோவின் சமீபகால சாதனைகள் என்ன?**

**பதில்:** யுனெஸ்கோ, பொதுமாநாடு 1964 நவம்பரில், தொழிலுக்குத் தகுந்த எழுத்தறிவுத் திட்டத்தை சோதனை முறையில் துவக்கியது. குறிப்பிட்ட இடங்களில் மட்டும் தீவிரமாக அமுலுக்கு வரும் ஐந்தாண்டுத் திட்டம் இது. சில நாடுகளில் மட்டும் இது துவக்கப்பட்டிருக்கிறது என்பதுடன், அங்கும் முக்கிய சமூக, பொருளாதாரத் துறைகளிலேயே அமுல் நடத்தப்படுகிறது. பழைய முறைக்கும் இதற்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. எழுத்தறிவூட்டுவதுடன் நின்றுவிடாமல், பிரச்சினையை அடிப்படையாகத் தீர்க்க இத்திட்டம் உதவுகிறது. உற்பத்தித் திறனை உயர்த்துவது, தொழிலாளருக்குப் பயிற்சியளிப்பது போன்றவையும் இத்திட்டத்தின் பகுதிகள்.



Photo Shell

# ஓரினோகாவில் வைர வேட்டையாளர்கள்



Photo © Paul Almasy

"கிளை நதிகள் பல இடங்களில் ஒன்றோ டொன்று கலக்கின்றன. எல்லாமே பெரியதாகவும் அழகாகவும் உள்ளன. எது பிரதான நதி, எது கிளை நதி என்றே கூற முடியாத விதத்தில் இவை சேருவதும் பிரிவதுமாக உள்ளன. பூமியில் இப்படி எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று 1595ல் ஓரினோகா டெல்டாவைப் பற்றி சர் வால்டர் ராலே எழுதினார். தென் அமெரிக்காவின் மிகவும் நீளமான நதிகளில் ஒன்றான ஓரினோகா அட்லாண்டிக் கடலில் கலப்பதற்கு முன்பு வெனிஸுலாவின் மத்திய பகுதியில் மேற்கிலும், வடக்கிலும், கிழக்கிலுமாக வளைந்து செல்கிறது. இப்பகுதியில் வெனிஸுலா நாட்டு சர்க்கார் சுரங்க, வன வளத்தையும் நீர் மின்சாரத்தையும் அபிவிருத்தி செய்ய மாபெரும் திட்டங்களை வகுத்துள்ளது. யுனெஸ்கோவின் ஒத்துழைப்புடன் மக்களுடைய கல்வி, மற்றும் தொழில் நுணுக்கத் தரத்தை உயர்த்தவும் ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. மேலே : ஓரினோகாவின் கிளை நதியான கரேனி நதிக்கரையில் வைர வேட்டையாளர்கள். இவர்கள் யுனெஸ்கோவின் பரிட்சார்த்த எழுத்தறிவு இயக்கத்தில் பங்கு கொண்டுள்ளனர். வலது: உலக பாங்க் நிதியிலிருந்து நிர்மாணிக்கப்படும் கூரி நீர்மின் நிலையத்திட்டம். இடது : வெனிஸுலாவின் தலை நகரான காராகாஸில் ஒரு தெரு. மிகவேகமாக வளர்ந்து வரும் இந் நகரில் பழைய வீடுகள் மறைந்து பல மாடிக் கட்டிடங்கள் தோன்றி வருகின்றன.



Photo Wold Bank - Yukata Nagata

# எழுத்தறிவுக்கு முதன்முறையாக அபிவிருத்தி நிதி

இதனாலேயே இதைத் தீவிர திட்டம் என்று கூறினேன். அந்தந்த நாட்டின் முக்கிய பொருளாதாரத் துறைகளுக்குப் பயன்படும் முறையில் இது செயல்படுகிறது. நாடு விரைவாக வளர்ச்சி பெற வேண்டுமென்றும், அதன் எல்லாப் பகுதிகளும் ஒரே மாதிரி முன்னேற வேண்டுமென்பதற்காகவும் இப்புது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதைச் சோதனை முறையில் அமுல் நடத்திப் பார்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடங்கள் நாட்டின் பொது நிலையை எடுத்துக் காட்டுபவை யல்ல. தொழிலுக்கு ஏற்ற எழுத்தறிவுத் திட்டம் என்ற பெயரைப் பார்த்தவுடன், இது குறிப்பிட்ட ஓரிடத்துக்கே ஏற்றது என்பது நன்ருகத் தெரியும்.

எழுத்தறிவுக்கும் வளர்ச்சிக்குமுள்ள உறவு இன்னும் சரியாக விளங்கவில்லை. எனவே இத்திட்டத்தின் நன்மைகளை மதிப்பிடுவதில் நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அங்குள்ளவர்களுடைய எழுத்தறிவைப் பொறுத்தது என்று நிரூபிக்கப்பட்டு விட்டால், எப்படி, எந்த அளவுக்கு அது பயன்படுகிறது என்பதை விரிவாகவும் திட்டவட்டமாகவும் பிறகு ஆராயலாம்.

அவ்வளர்ச்சி பல துறைகளிலும் பரவலாக நடப்பதற்கு எந்த அளவு எழுத்தறிவு உதவும் என்று பார்ப்பது நமது திட்டங்களின் மற்ஜெரு நோக்கம்.

**கேள்வி: அப்படியானல் தொழிலுக்கு ஏற்ற எழுத்தறிவுத் திட்டம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இருக்காதா?**

**பதில்:** இருக்காது. நாட்டின் வளர்ச்சிக்கும், தொழிலாளருடைய நிலை உயருவதற்கும் இத்திட்டம் உதவுகிறது என்பதைத்தவிர, மற்ற வகைகளில் இது இடத்துக்கு இடம் மாறுகிறது. எழுத்தறிவின்மையால் அபிவிருத்தித் திட்டமொன்று தடைப்பட்டு நிற்குமானல், உடனே அதையே முதல் வேலையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும். எழுத்தறிவூட்டுவது மட்டுமே ஒரு முடிவாகிவிடாது. வயது வந்தவர்களுக்கு எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக்கொடுப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடுவதில்லை. புதிதாகப் பெற்ற கைத்திறனை உபயோகித்துக் கொள்ள உதவுவதே இப்புதிய திட்டத்தின் நோக்கம்.

**கேள்வி: நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால், இதன் வேலை அங்கங்கே உள்ள நிலைமையைப் பொறுத்ததாக இருக்குமென்று தோன்றுகிறது.**

**பதில்:** ஆமாம். படிப்பதற்குப் போதிய நூல்கள் இல்லாததால், புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அதை இழந்து விடுகிருர்கள் என்று முன்பு கூறப்பட்டது. பிரச்னை அவ்வளவு சுலபமானதல்ல. எழுத்தறிவு அபிவிருத்தி ஒரு பகுதியிலுள்ள பொது நிலவரத்தைப் பொறுத்திருக்கிறதென்று இப்போது தெரிகிறது. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் தங்களுடைய தொழிலறிவையும், கைத்திறனையும் நன்ருக உபயோகித்துக் கொள்வதற்கு ஏற்ற முறையில் அங்குள்ள நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

**கேள்வி: தொழிலுக்குத்தகுந்த எழுத்தறிவு திட்டத்தில் போதனு முறைகூட இடத்துக்கு இடம் மாறும் போலிருக்கிறது. முன்னெல்லாம் இப்படி இல்லையே?**

**பதில்:** உண்மைதான். திட்டத்தின் அளவும், நிறைவேற்றும் காலமும், ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும் அல்லவா? பஞ்சாலைத் தொழிலாளி, நெல் சாகுபடி செய்யும் விவசாயி, வேர்க்கடலைப் பயிரிடுபவர், மீனவர், இளைஞர், முதியோர், ஆண், பெண், நகரத்திலிருப்போர், கிராமவாசிகள்—இப்படிப் பல் வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, வெவ்வேறுவித திட்டம் வகுக்க வேண்டும்.

**கேள்வி: ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் எழுத்தறிவுக்குப் பாடுபட்டு வருகிறதே, அதற்கும் யுனெஸ்கோ திட்டங்களுக்கும் சம்பந்தம் என்ன?**

**பதில்:** இதைப்பற்றி இரண்டுவித கருத்துக்கள் இருக்கின்றன. யுனெஸ்கோவின் சோதனைத் திட்டங்களும், தேசிய திட்டங்களும் இணைந்து வேலை செய்யவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். சிலர் இவை இரண்டும் தனியாக இயங்கவேண்டுமென்று கருதுகின்றனர். உண்மையில் இவ்விரு கருத்துகளும் முரண்பாடுடையவையல்ல. இந்த இரண்டு திட்டங்களும் இணைந்து போகாவிட்டாலும், நாளடைவில் ஒன்றுக்கொன்று பயனுள்ளதாகவே இருக்கும். அதனதன் நோக்கங்களும், தனித்தன்மையும் நல்ல பயனளிக்கும். அத்துடன், கடைசியாகப் பார்க்குமிடத்து சோதனைத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் தேசிய அரசாங்கங்களுடையதுதான்.

**கேள்வி: இந்தத் திட்டங்களுக்குப் பணம் எப்படிக் கிடைக்கிறது?**

**பதில்:** வளர்ச்சிப் பிரச்னைகளை கவனிக்கும் ஐ.நா. பிரிவினர் 1966 ஜனவரியில், தொழிலுக்குத் தகுந்த எழுத்தறிவு இயக்கத்துக்கு 38 லட்சம் டாலர் அளித்தது. வேலை தொடங்குவதற்கு அல்ஜீரியா, ஈரான், மாலி—இம்மூன்று நாடுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. அந்த ஆண்டு ஜூன் மாதத்தில் ஈக்வடாரிலும், டான்ஜானியாவிலும் கூட இவ்வேலையைத் தொடங்கவேண்டுமென்று, மேலும் இருபத்து மூன்றரை லட்சம் டாலர் ஒதுக்கப்பட்டது. கினியில் இவ்வேலை செய்வதற்காக 1967 ஜனவரியில் 12 லட்சத்து 73 ஆயிரமும், எதியோப்பியாவில் ஆரம்பிப்பதற்கு 1968 ஜனவரியில் 15 லட்சத்து 86 ஆயிரம் டாலரும் ஐ.நா. வளர்ச்சிப் பிரிவினர் அனுமதித்தனர். சர்வதேச நிதியிலிருந்து எழுத்தறிவு இயக்கத்துக்குக் கணிசமான உதவி கிடைத்தது இதுவே முதல் தடவை. யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் ரெனே மாஹ்யூ அப்போது பின்வருமாறு கூறினர். ''எழுத்தறிவுக்கும் வளர்ச்சிக்கும் உறவு என்பது யுனெஸ்கோவின் அடிப்படைக் கொள்கை. அது அதிகாரபூர்வமாக இப்போது ஏற்கப்பட்டு, ஐயப்பாடுக்கு இடமின்றி ஊர்ஜிதமும் செய்யப்பட்டிருக்கிறது.''

**கேள்வி: அரசாங்கங்களும் இதற்கு நிதி உதவுகின்றனவா?**

**பதில்:** செலவின் பெரும் பகுதியை அவைதான் ஏற்கின்றன. அல்ஜீரியா 29 லட்சத்து 60 ஆயிரம் டாலர், ஈரான் 17 லட்சம், மாலி 30 லட்சம், ஈக்வடார் 17 லட்சத்து 40 ஆயிரம், டான்ஜானியா 52 லட்சத்து 16 ஆயிரம், கினி 12 லட்சத்து 20 ஆயிரம், எதியோப்பியா 20 லட்சத்து 57 ஆயிரம் டாலர்கள் அளித்திருக்கின்றன.

எழுத்தறிவு போதனையும்கூட ஒரு சமூக, அரசியல் பிரச்சினையே. அதை விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் நிறுவுவதற்கு ஒப்பிட முடியாது. அந்நிலையங்களுக்குக் கருவிகளும், நிபுணர்களும் இருந்தால் போதும்.

எழுத்தறிவுப் பயிற்சியளிப்பதற்குக் கொஞ்சம் பகுத்தறிவு இருந்தால்போது மென்றும், அதில் சிக்கலே இல்லை என்றும் கருதுபவர்கள் இருக்கின்றனர். அவர்கள் நினைப்பது தவறு. முன்பு அதைப்போன்ற கருத்துக்களால் பேராபத்துக்கள் வந்திருக்கின்றன. தொழிலுக்குத் தகுந்த எழுத்தறிவூட்டுவதற்கு, கவனத்துடனும், சிக்கல்களையெல்லாம் மனதிற்கொண்டும் திட்டம் வகுக்கவேண்டும். எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தால் மட்டும் போதாது என்பதை ஏற்கனவே எடுத்துரைத்து விட்டேன்.

**கேள்வி: இப்போது நீங்கள் நடத்தும் சில திட்டங்களை விவரிக்க முடியுமா?**

**பதில்:** அல்ஜீரியாவை எடுத்துக் கொள்வோம். அங்கு 15 வயதுக்கு மேற்பட்டவர்களின் ஜனத்தொகை 55 லட்சம். இவர்களில் 44 லட்சம் பேருக்கு எழுத்தறிவு இல்லை. தொழில், விவசாயத்துறைகளை வளர்க்க உறுதி கொண்டுள்ள இந்நாட்டுக்கு எழுத்தறிவின்மை மிகப்பெரிய இடையூருக இருக்கிறது. பயிற்சிபெற்ற ஆட்கள் அவசரமாகத்தேவை. எனவே தொழிலுக்குத் தகுந்த மூன்று எழுத்தறிவுத் திட்டங்களை அங்கு ஆரம்பித்திருக்கிறோம். முதலாவது, ஆல்ஜீயர்ஸை அடுத்து, நிலவளமிக்க ஸ்டவூலியில் நடக்கிறது. சுதந்திரமாக உள்ள வெவ்வேறு பண்ணைகளிலிருந்து வந்துள்ள 5000 பேருக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இரண்டாவது திட்டம், ஈரானுக்கு அருகில் ஆர்ஜு என்ற தொழிற் பகுதியில் நடக்கிறது. மூன்ருவது, ஆல்ஜியர்ஸுக்குக் கிழக்கே, அன்னுபா ஜில்லாவில் நடக்கிறது. ரசாயனப் பொருள்கள், பெட்ரோல், இரும்பு, எஃகு தொழில்களில் அங்கு 70 ஆயிரம் தொழிலாளர் வேலை செய்கின்றனர். இவர்களுக்குப் பயிற்சியளித்தாக வேண்டும்.

ஈரானில் இரண்டு இடங்களில் யுனெஸ்கோ திட்டம் தொடங்கியிருக்கிறோம். மேற்கில் சூஸா அருகிலுள்ள கிராண்ட் டெஸ் அவற்றில் ஒன்று. இங்கு பெரிய அணையொன்று கட்டியிருப்பதுடன், நவீன விவசாய முறைகளையும் கையாளுகின்றனர். இரண்டாவது திட்டம், மூன்று லட்சம் பேரைக் கொண்ட இஸ்பஹான் பகுதியில் நடக்கிறது. இது ஈரானின் புராதன தலை நகர், கம்பளித் தொழிலுக்குப் பேர் போனது. இப்போது இங்கு வேலை செய்து வரும் 26 ஆயிரம் ஆலைத்

# பரிட்சார்த்தத் திட்டத்தில் சேர 50 நாடுகள் அழைப்பு

தொழிலாளருக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

மாலியில் முக்கிய விவசாயத்திட்டம் ஒன்றிலும், தொழில் திட்டம் ஒன்றிலும் எழுத்தறிவுப் பணியைத் துவக்கியிருக்கிறோம். ஸெகு, பராக்யூலி, தமானி பகுதிகளில், பருத்தி, நெல் சாகுபடிகளில் ஈடுபட்டிருக்கும் ஒரு லட்ச மக்களுக்கு அது உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது. பமாக்கோ பகுதியில் அரசாங்கத்தொழிற்துறையிலுள்ள, எழுத்தறிவற்ற, 6 ஆயிரம் தொழிலாளருக்கு உதவும் திட்டமும் நடந்து வருகிறது.

**கேள்வி : இத்திட்டத்தின் வேலைகள் என்னென்ன ?**

**பதில்:** எழுத்தறிவிப்பு முறைகளையும், பாடங்களையும் கவனமாகத் தயாரிக்கும் இடம் இது என்று கருதலாம். இரண்டாவது, இத்திட்டத்துக்குத் தேவையான பயிற்சியாளருக்கு இவ்விடத்திலேயே பயிற்சியளிக்கப்படுகிறது. ஆனால் இதற்கு இடம் முக்கியமல்ல. பெரும்பாலும் வேலை வெளியிலேயே நடக்கிறது. விவசாயிகளும், தொழிலாளரும் வேலை செய்யும் இடங்களுக்குச் சென்று, எழுத்து, படிப்பு, வேலைப் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

டான்ஜானியா உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம். அதன் ஜனத்தொகை ஒரு கோடி. பெரும்பாலோர் விவசாயிகள். பொருள்களில் 85% வாங்குவது அவர்களே. ஆனால் நாட்டின் உற்பத்தியில் 45 சதவிகிதத்தையே அவர்கள் செய்கிறார்கள். எழுத்தறிவு, தொழிற்பயிற்சி ஆகிய இரண்டையும் இணைக்கும் திட்டமொன்று, விக்டோரியா ஏரிக்குத் தெற்கிலுள்ள பருத்தி, காபி உற்பத்தியாகுமிடங்களில் நடக்கிறது. இது மேற்கு ஏரி, ம்வான்ஸா, மாரா, ஷின்கங்கா என்று நான்காகப் பிரிக்கப்பட்டு இயங்குகிறது. பருத்தி சாகுபடியில் புது முறைகளைப் புகுத்தியதால், 1955ல் 38 ஆயிரம் பேல்களாக இருந்த உற்பத்தி 1960ல் 161 ஆயிரம் பேல்களாக உயர்ந்தது. 1980ல் 10 லட்சம் பேல்களுக்கு மேல் உயருமென்று தோன்றுகிறது.

பிரிட்டனைவிடப் பெரிய நாடு ஈக்வடார். இயற்கை வளம் மிகுந்த நாடு. ஆயினும் அவ்வளத்தை இன்னும் அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. விவசாயம், மீன்பிடித்தல், கைத்தொழில், தொழிற்சாலை நிறுவுதல் போன்ற எல்லா பொருளாதாரத் துறைகளிலும் வளர்ச்சிபெற்று திட்டத்தை ஈக்வடார் வகுத்திருக்கிறது. ஆனால் பயிற்சிபெற்ற தொழிலாளா அங்கு குறைவு. தொழிலாளரில் 30% எழுத்தறிவற்றவர்கள். ஜனத்தொகையில் 65 சதம் கிராமங்களில் இருக்கின்றனர். இவர்களில் 43% எழுத்தறிவற்றவர்கள். நகரப்புறங்களிலுள்ள தொழிலாளரிடையில் எழுதறிவின்மை 15லிருந்து 17 சதம் வரை இருக்கிறது.

இந்நாட்டில் புதிய எழுத்தறிவுத் திட்டத்தை அமுல் நடத்த மூன்று பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. கியூன்கா பகுதியில் வயது வந்த 6 ஆயிரம் பேருக்கு எழுத்தறிவு திட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உற்பத்தியாளரின் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வந்த 9 ஆயிரம் கைத்தொழிலாளருக்கு இங்கு தொழிற் பயிற்சியளிக்கிறார்கள். இரண்டாவது திட்டம், மிலாக்கிரா பகுதியில் நடக்கிறது. 16 ஆயிரம் விவசாயிகளுக்கு எழுத்தறிவும்,தொழிற் பயிற்சியும் அளிக்க ஏற்பாடாகி வருகிறது. மூன்றாவது, பைசில்லோ ஜில்லாவில் ஓரிடத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. இங்கு 2000 மக்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு வேண்டிய உணவு அங்கேயே உற்பத்தியாகிறது. ஏறக்குறைய எல்லோரும் அங்கு எழுத்தறிவு இல்லாதவர்களே. அடிப்படை எழுத்தறிவு, உள்நாட்டுச் செல்வத்தைப் பெருக்க வழி ஆகிய இரண்டையும் இவர்களுக்குக் கற்பிக்க இப்போது திட்டம் போடப்பட்டிருக்கிறது.

**கேள்வி : இப்போது வெனிசுலாவில் நடக்கும் திட்டம் இதைப்போன்றது தானா ?**

பதில்: எழுத்தறிவு இயக்கச் சோதனையின் ஒரு பகுதிதான் வெனிசுலா திட்டம். ஆனால் இதற்கான செலவுகளை அந்நாட்டு அரசே ஏற்கிறது; ஐ.நா. அல்ல. லத்தீன் அமெரிக்க நாடுகளிலே அமுலுக்கு வந்திருப்பவைகளில் அதுவே மிக முக்கியமான திட்டம். அங்கு 1958ல் சுமார் 6100 எழுத்தறிவு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்தொண்டில் பங்கெடுத்துக்கொள்ள 40 ஆயிரம் பள்ளி ஆசிரியர்கள் முன்வந்தனர். வயது வந்த ஒரு லட்சம் பேருக்கு எழுத்தறிவு அளிக்க, ''எழுத்தறிவுப் படைகள்'' துவக்கப்பட்டன. ஆயினும் கல்விநிலை அந்நாட்டுப் பொருளாதார சமூக முன்னேற்ற திட்டங்களுக்குப் போதுமானதாக இல்லை.

உதாரணமாக, வெனிசுலாவின் எண்ணெய் தொழிலை எடுத்துக்கொள்வோம். இது இப்போது நல்ல வளர்ச்சி பெற்று இருக்கிறது. தேசீய மொத்த உற்பத்தியில் 20% இதுவே. மொத்த வருமானத்தில் 60 சதமும், ஏற்றுமதியில் 90 சதமும் எண்ணெயிலிருந்தே கிடைக்கிறது. ஆயினும் பயிற்சி பெற்ற தொழிலாளர் இல்லாததால், இந்நாட்டுத் தொழிலாளரில் 2 சதவிகிதத்தினரே அதில் வேலை செய்கின்றனர். இரும்பு, கனிப்பொருள் தொழில்களிலும், விவசாயத்திலும் கூட இதேநிலை தான்.

சமூக, பொருளாதார நிலை மாறுபட்ட மூன்று பகுதிகளை வெனிசுலா தேர்ந்தெடுத்திருக்கிறது. தொழிற்பெருக்கப்பகுதி, விவசாயப்பகுதி, கிராமமாக இருந்து இப்போது நகரத்தோற்றம் பெற்று வரும் பகுதி ஆகியவையே இம்மூன்று பகுதிகள். கிழக்கில் பொலிவர் மாநிலத்திலிருக்கிறது தொழிற்சாலைப்பகுதி. இங்கு மகாகுவா என்ற இடத்தில், கரோனி ஆற்றையொட்டி, ஒரு பெரிய மின்சார உற்பத்திநிலையம் கட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ள ஓரிநோக்கோ எஃகுத் தொழிற்சாலையில் உற்பத்தி பிரமாதமாக இருக்கிறது. அதில் பெரும் அளவு ஏற்றுமதியாகிவிடுகிறது.

எழுத்தறிவுத் திட்டம் அமுலுக்கு வந்துள்ள இரண்டாவது பகுதி போர்ச்சுகீஸா மாநிலத்திலுள்ளது. நீர்ப்பாசன அபிவிருத்தியினாலும், யந்திரங்களை உபயோகிப்பதாலும் நெல், எள், பருத்தி உற்பத்தி ஏற்கனவே பெருகிவிட்டது. மூன்றாவது இடம், லாரா மாநிலத்தில் ஆண்டீஸ் அருகில் உள்ளது. சில வருஷங்களாக வளர்ச்சிபெற்று இது இப்போது ஒரு நகரத்தைப்போல் இருக்கிறது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வந்து மக்கள் இதைப் போன்ற நகரங்களில் குடியேறி விடுகிறார்கள். நகர சுற்றுப்புறங்களில் சிறுசிறு ஊர்கள் காளான்கள் மாதிரி தோன்றிவிடுகின்றன. இதனால் வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னையும் தோன்றுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு கைத்தொழில்கள் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**கேள்வி : இத்திட்டங்களில் எவ்வளவு பேர் ஈடுபட்டிருக்கின்றனர் ?**

பதில்: சுமார் 3 லட்சம். வெனிசுலா தொழில் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் முறையில், அங்குள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையமும், மற்ற முதியோர் கல்வி சங்கங்களும் வேலைசெய்கின்றன. 1962ல் பயிற்சி பெற்ற ஊழியர் 4 லட்சத்து 70 ஆயிரம்பேரே இருந்தனர். 1970ல் இதை 9 லட்சமாகவும், 1975க்குள் 13 லட்சமாகவும் உயர்த்தத் திட்டம் போட்டிருக்கின்றனர்.

**கேள்வி : தொழிலுக்கேற்ற எழுத்தறிவு இயக்கத்தை ஒரு நாட்டில் நடத்துவதற்கு, இப்போது கூறிய இயக்கத்தை ஒரு நாட்டில் நடத்துவதற்கு, இப்போது கூறியவற்றைத் தவிர வேறு முறையில் பணஉதவி கிடைக்குமா ?**

பதில்: ஐ. நா. உதவி சொந்த அரசுகளின் உதவி ஆகிய இரண்டைத் தவிர, பரஸ்பர உதவிமுறையில் நாடுகள் ஒத்துழைப்பதையும் நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம். இப்போது கூட சிலநாடுகள் உதவியளிக்கத் தயாராக இருக்கின்றன. சிலநாடுகளுக்கு உதவி தேவையாக இருக்கிறது. இவ்விரண்டு வித நாடுகளும், யுனெஸ்கோ மூலம் பேச்சு வார்த்தை நடத்துகின்றன.

தொழில், விவசாய வளர்ச்சியின் ஒரு பகுதியாக எழுத்தறிவு இயக்கம் இருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களும் இருக்கின்றன. சிரியாவில் கப் பள்ளத்தாக்குத் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.வளர்ச்சித் திட்டங்களுக்கு ஐ. நா. அளிக்கும் நிதி உதவியுடன், உணவு, விவசாய ஸ்தாபனத்தினரின் உதவியும் அதற்கு கிடைக்கிறது. அத்திட்டத்தில் தொழிலுக் கேற்ற எழுத்தறிவு அளிப்பதும் ஒரு முக்கிய பகுதி.

**கேள்வி : இப்போது நாம் பார்த்த திட்டங்களை ஒப்பிட்டு, மதிப்பிடுவதற்குப் பொதுவான அளவுகோல் ஏதேனும் இருக்கிறதா ?**

பதில்: எந்த அளவுக்கு இவை, நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகின்றன என்று பார்ப்பதே பொதுவான அளவுகோல். அது அந்தந்த நாட்டுப் பொருளாதார, சமூக நிலையையும், அங்கு கையாளப்படும் முறைகளையும் பொறுத்திருக்கிறது. இவ்விவரங்களை எல்லாம் திரட்டிப் பார்த்தால், பெரிய

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

கடந்த 15 ஆண்டுகளில் உலகின் எழுத்தறிவற்றவர்கள் விகிதம் குறைந்துள்ள போதிலும் ஜனத் தொகைப் பெருக்கத்தின் விளைவாக படிப்பு வாசனையில்லாதவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கிராமப் புறங்களில் தான் எழுத்தறிவின்மை அதிகம் நிலவுகிறது. படம்: தென்னமெரிக்க வர்ழைத் தோட்டம் ஒன்றின் தொழிலாளர்கள் வாழுமிடம்.



Photo © Paul Almasy, Paris

# எழுத்தறிவு: வளர்ச்சிக்கு முதல் படி

**1965லிருந்து எழுத்தறிவு புகட்டும் துறையில் உலகில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து யுனெஸ்கோ ஒரு விசாரணை நடத்தியுள்ளது. "எழுத்தறிவு 1965-67" என்ற விசேஷ அறிக்கையில் அதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பல்வேறு நாடுகள் இத்துறையில் கையாண்ட முறைகளையும் 1965லிருந்து உலக நடவடிக்கையை உருவாக்கிய புதிய முறையையும் அறிக்கை விவரிக்கிறது.**

சமீபகாலம்வரை, வயது வந்தோரின் எழுத்தறிவின்மையைப் போக்க அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களே பெரும்பாலும் பாடுபட்டுவந்தன. தனிப்பட்டவர்களும் இவ்வேலையில் உதவினர். மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு, தாழ் நிலையிலிருந்தவர்களை உயர்த்துவதே இவர்களுடைய நோக்கம். இதை எல்லோரும் சமூகப் பிரச்னையாகக் கருதினார்களே தவிர, பொருளாதாரத் துறையுடன் இதை இணைத்துப் பார்க்கவில்லை.

இன்று பெரும்பாலான அரசுகள் முதியோர் கல்வி தங்களுடைய பொறுப்பு என்று கருதுகின்றன. அதில் தொழில் முதலாளிகளுக்கும், வர்த்தக சமூகத்தினருக்கும் ஏற்பட்ட அக்கறைக்குறைவை இட்டு நிரப்புவதற்கு, நாட்டின் பொருளாதார முன்னேற்றப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் இப்போது முன் வந்திருக்கின்றனர். டெஹ்ரானில் நடந்த உலகக் கல்வி மந்திரிகள் மகாநாட்டின் முடிவுகள் அவர்களுக்குப் புது வழி காட்டியிருக்கின்றன.

கல்வி வளர்ச்சித் திட்டங்களில் இப்போது எழுத்தறிவு இயக்கத்தையும் இணைக்கத் தொடங்கியிருக்கின்றனர். எழுத்தறிவுப் பிரச்னை, பொருளாதார, சமூக வளர்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாக கருதப்பட்டு வருகிறது.

எழுத்தறிவூட்டுவதை பொருளாதார வளர்ச்சியுடன் இணைக்கவேண்டுமென்று டெஹ்ரானில் உருவாகிய கருத்தின் காரணமாக பொருளாதார திட்டங்களில் எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்ற பிரச்னை மீண்டும் தோன்றியிருக்கிறது. கல்வி மந்திரிகளும் பொருளாதாரத்திட்டம் வகுப்பவர்களும், மற்ற அதிகாரிகளும் கூடிப் பேசி, விரிவாகவும், இசைவுடனும் நடவடிக்கை எடுக்கக் கூடிய நிலை உண்டாகியிருக்கிறது.

பிரச்னையைத் தீர்ப்பதற்கு இப்படி விரைவாக முன்னேறும், இணைப்புத் திட்டங்கள் பலநாடுகளில் அமுலுக்கு வந்திருக்கின்றன. பெட்ரோல், ரசாயனப் பொருள்கள் உற்பத்தியாகும் ஆர்ஜூ பகுதி நீர்வளம் மிகுந்த பூநமூஸா ஆகிய இடங்களை அல்ஜீரியா



Photo Unesco - P. Bertelsen

## ஓவியம் தீட்டிய சுவர்களில் கிராமத்தின் வாழ்க்கை



Photo Unesco - Eric Schwab

தேர்ந்தெடுத்திருக்கிறது. சில பகுதிகளை மட்டும் பொறுக்கி எடுத்துத் தொழிலுக்கு ஏற்ற கல்விமுறைத் திட்டத்தை டெஹ்ரான் அரசு அமுல் நடத்துகிறது என்பதற்கு ஸ்டலுலியில் சுதந்திரமாக இயங்கும் பண்ணைகளில் முன்னோடித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதே போதிய சான்று.

ஐக்கிய அராபியக் குடியரசிலும், சிரியாவிலும் உள்ள பஞ்சாலைகளுடன் இணைந்து இப்புதுமுறை எழுத்தறிவுத் திட்டம் வேலை செய்கிறது. சவூதி அரேபியா, குவாயிட் ஆகிய இடங்களிலுள்ள எண்ணெய் தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. கட்டாரில் அது மீன் பிடித்தலுடன் இணைந்திருக்கிறது. டூனிசியாவில், வளரும் கிராமப் பகுதியான தாசர்க்கா என்ற மாவட்டத்தில் இப்புதுத்திட்டம் வேலை செய்கிறது.

செனகல் நாட்டில் காப்வெர்ட் என்ற இடத்திலுள்ள யந்திரசாலைகளிலும், லைபீரியா நாட்டில் மன்ரோலிவியாவிலுள்ள துறைமுக, ரப்பர் தொழிற்சாலைகளிலும், காங்கோ குடியரசிலுள்ள 'கூட்டுறவு கிராமங்'களிலும் துருக்கியில் சில சுரங்கப் பகுதிகளிலும் இலங்கையில் இளைஞர் குடியேற்றத் திட்டங்களிலும், லாவோஸ், பிரேசில் ஆகிய இடங்களில் அணைகட்டும் இடங்களிலும், சிலி, குவாதிமாலா ஆகியநாடுகளில் விவசாயச் சீர்திருத்தங்கள் நடக்கும் கிராமங்களிலும் தொழிலுக்கேற்ற கல்வி முறை அமுலுக்கு வந்திருக்கிறது.

எழுத்தறிவை வளர்க்க மிகவும் முக்கியமான நடவடிக்கைகளை பல நாடுகள் எடுத்திருக்கின்றன. சமுதாய அமைப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுவதால், அங்கு அமுலுக்கு வரும் திட்டங்களும் மாறுபடுகின்றன. ஆயினும் திட்டங்களில் வேகம் இருக்கவேண்டும் என்பதிலும், குறிப்பிட்ட சில ஆண்டுகளில் அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்பதிலும் எல்லா நாடுகளும் ஒன்றுதான்.

உதாரணமாக, குறிப்பிட்ட வயதுக்குள் இருப்பவர்கள் அடுத்த 10 வருஷங்களில் எழுத்தறிவு பெற வேண்டுமென்று கருதி, சில அராபிய நாடுகள் வேலை செய்து வருகின்றன. வேறு சிலர் அதை 15 வருஷங்களில் அடைய முயற்சிக்கிறார்கள். முறையான ஆறு ஆண்டு எழுத்தறிவுத் திட்டத்தை (1966-1972) பிலிபைன்ஸ் அரசாங்கம் அமுல் நடத்திவருகிறது. பர்மா இதைவிட விரைவாகத் தனது இலக்குகளை அடைய விரும்புகிறது. ஈரானின் நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1967-1972) எழுத்தறிவின்மையை 30% வீதம் குறைக்க நினைக்கிறது. இத்தாலி, மெக்ஸிகோ, துருக்கி முதலிய நாடுகள் அமுல் நடக்கும் இடத்திற்குத் தக்கவாறும், அங்குள்ள ஜனத்தொகைக்குப் பொருத்தமாகவும், தங்களுடைய எழுத்தறிவு இயக்கத்தை உருவாக்கியிருக்கின்றன.

குறிப்பிட்ட பகுதியிலுள்ளவர்கள் கட்டாயமாக எழுத்தறிவுத் திட்டங்களில் பங்கு கொள்ளவேண்டுமென்று பல நாடுகள் சட்டமியற்றியிருக்கின்றன. லிபியாவிலும், ஈராக்கிலும், வயது வந்தவர்களில் எழுத்தறிவற்றிருப்போர் வகுப்புகளுக்குக் கட்டாயமாகச் செல்லவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் லாபத்தில் ஒரு பங்கை தங்கள் தொழிலாளரின் எழுத்தறிவுக்கு பயன்படுத்த வேண்டுமென்று குவாதிமாலா வெனிசுலா போன்ற இடங்களில் புதுச்சட்டங்கள் வந்திருக்கின்றன. படித்தவர்கள், படிக்காதவர்களுக்கு எழுத்தறிவூட்ட முன்வரவேண்டுமென்று கம்போடியா, ஈக்வடார் நாட்டு சமீப கால சட்டங்கள் கூறுகின்றன.

எழுத்தறிவு வளர்ச்சியின் தேவைகளுக்கு ஏற்றவாறு நிர்வாகத்துறையில் செய்ய வேண்டிய மாறுதல்கள் பற்றியும் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. புதிதாக தேசீய எழுத்தறிவுத்துறை, அர்ஜன்டைனா, காங்கோ குடியரசு, டஹோமி, எத்தியோபியா, கொரியா, மரிடானியா, வியட்நாம் குடியரசு போன்ற நாடுகளில் நிறுவப்பட்டிருக்கிறது.

இந்தோனேசியா, மடகாஸ்கர், மரீஷியஸ், பராகுவே, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய இடங்களில் ஏற்கனவே இருந்த எழுத்தறிவுத் துறை புதுமுறையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. பலநாடுகள் புதிய பகுதி வாரி, மாகாண, நகராட்சி நிறுவனங்களை எழுத்தறிவு வளர்ச்சிக்காக உண்டாக்கியிருக்கின்றன.





Photos Unesco - P. Bertelsen

டாரஸ் ஸலாம் அருகிலுள்ள இந்த டான்ஸேனியக் கிராமத்தின் பெரும்பாலான வீட்டுச் சுவர்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களில் கிராம வாழ்வின் பல காட்சிகளை காணலாம். டான்ஸேனியா ஓவியர் அலிபங்கா சமூக நடவடிக்கைகள் பலவற்றை சித்திரித்துள்ளார். படகில் செம்படவர்கள், வயலில் வேலை செய்பவர்கள் (மேலே) கிராமக் கூட்டம் (இடது கோடி) கல்வி புகட்டும் வகுப்பு (இடது) அண்மைக் காலத்தில் எழுத்தறிவு இயக்கம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளில் டான்ஸேனியா ஒன்றாகும். ஸ்காண்டிநேவிய நாடுகளின் நன்கொடையான நடமாடும் நூலகங்கள் புத்தகங்களை கிராமங்களுக்குக் கொண்டு வருகின்றன. முதியோர் கல்வி, எழுத்தறிவு இயக்கத் திட்டங்களுக்கு யுனெஸ்கோ உதவுகிறது. விக்டோரியா ஏரியருகே தொடங்கப்பட்ட ஒரு பெரிய எழுத்தறிவு இயக்கத் திட்டம் ஸ்தல நீர்ப்பாசன வேலைகளை அபிவிருத்தி செய்யவும் பருத்தி, காப்பித் தோட்டங்களை நவீன மயமாகச் செய்யவும் பயன்படுகிறது.

டெஹ்ரான் மகாநாடு ஒரு முக்கிய சிபாரிசு செய்திருக்கிறது. பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக பல்வேறு வளர்ச்சி முறைகள் வகுத்து வேலை செய்வதுபோல, இதிலும் செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறது. இதன் விளைவாக, தேசீய எழுத்தறிவு ஸ்தாபனங்களை பல்வேறு அமைச்சகங்களுடன் இணைந்து வேலை செய்யும் நிறுவனங்களாக்கியிருக்கின்றனர். இது மிகவும் முக்கிய மாறுதல்.

பர்கா, சிலி, கொலம்பியா, கிரீஸ், நேபாளம், செனகல் போன்ற சில நாடுகளில் இந்த எழுத்தறிவு ஸ்தாபனங்களும், ஆலோசனைக் குழாங்களும் பல்வேறு அமைச்சக இணைப்பு வேலைகளைச் செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகின்றன. ஐவரிகோஸ்ட் இந்தியா, மாலி, தாய்லாந்து போன்ற நாடுகளில், பலதுறைகளில் வேலை செய்து அனுபவமிக்க உறுப்பினரைக் கொண்ட தேசீயச் கமிட்டிகள், நாட்டின் எழுத்தறிவு கொள்கையை வகுக்கின்றன.

இக்கமிட்டிகளில் அரசாங்க, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டுமின்றி, இத்துறையில் வேலை செய்யும் பெரிய சங்கங்களில் பிரதிநிதிகளும் உறுப்பினராயிருக்கின்றனர். (உதாரணம், அல்ஜீரியா, இராக், அரபு நாடுகள், டூனிசியா) எழுத்தறிவு இயக்கத்தின் அவசியத்தை எல்லோரும் உணருகிறார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

சிலநாடுகளில் இவ்வியக்கம் பல அதிகாரிகளின் கையிலிருக்கிறது. ஆப்கானிஸ்தானத்தில் கல்வி, உள்நாட்டு நிர்வாகம், ராணுவம் ஆகியவை ஒரே சமயத்தில் எழுத்தறிவு வகுப்புகள் நடத்துகின்றன. சமூகநல சங்கம் பெண்களுக்குத் தனியாக வகுப்புகள் நடத்துகிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் தனிப்பட்டவர் நடத்தும் ஸ்தாபனங்களும், தொழிற்பயிற்சி நிலையங்களும் கூட்டாக இவ்வியக்கத்தை நடத்துகின்றன. ஆனால் இதன் பொது நிர்வாகம் கல்வி மந்திரியின் கையிலேயே இருக்கிறது. அவர் இதற்கு வழி வகுத்துக் கொடுப்பதுடன், திட்டங்களை இணைக்கும் அதிகாரியாகவும் இயங்குகிறார்.

சில ஆப்பிரிக்க நாடுகளில் எழுத்தறிவு வேலையை கல்வி மந்திரியைத் தவிர, மற்ற மந்திரிகளே கவனித்துக் கொள்ளுகின்றனர். ஜாம்பியாவில் இப்பொறுப்பு சமுதாய அபிவிருத்தி மந்திரி கையிலும் கீனியாவில், கூட்டுறவு, சமூக நல மந்திரி கையிலும் இருக்கிறது.

இந்த இயக்கத்துக்கு டெஹ்ரான் மகாநாடு புதுபலம் அளித்திருக்கிறதென்பது, பல நாடுகளின் பட்ஜெட்டுகளில் எழுத்தறிவுக்கு ஒதுக்கியிருக்கும் நிதியைப் பார்த்தாலே தெரிகிறது.

கல்விக்கு ஒதுக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியே எழுத்தறிவுக்குப் போகிறது. இதனால் அரசாங்கங்களுக்கு உண்டாகும் சுமை அதிகமல்ல. ஆயினும் பட்ஜெட்டுகளில் இதற்கு அதிக இடம் கிடைத்திருப்பது; எழுத்தறிவின்மையை எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் ஒரு முக்கிய முன்னேற்றத்தை குறிக்கிறது.

தொழிலுக்குத் தகுந்த எழுத்தறிவுத் திட்டத்தில் தொழிலாளரின் வேலைக்கும் முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. எனவே முதலாளிகள், குறிப்பாக உற்பத்திப் பகுதிகளில் உள்ளவர்கள், இவ்வியக்கத்தில் நெருங்கிய தொடர்புகொள்ளக்கூடும். எனவே இதற்கான செலவுகளை இனி அரசாங்கம் மட்டுமே மேற்கொள்ள வேண்டுமென்பதில்லை.

எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 1965-1967ல் திடீரென்று உயர்ந்திருக்கிறது. நாட்டின் மொத்த ஜனத்தொகையுடன் ஒப்பிடும்போது அங்கங்கே புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களின் சதவிகிதம் மிகக் குறைவாகவே இருக்கிறது. இயக்கம் முன்னேறி வருகிறதென்றாலும், இப்போதுள்ள நிலைக்கு அது போதியதல்ல என்பதே இதன் பொருள்.

எழுத்தறிவின்மையால் நாட்டின் வளர்ச்சி தடைப் படுகிறது. இதைப் புரிந்து கொண்டதன் விளைவாக கல்வி கற்பிக்கும் முறையே மாறி வருகிறது. பொருளாதார வளர்ச்சிக்காகப் போடப்படும் திட்டங்களில் எழுத்தறிவு வேலையை இணைப்பது பற்றி இப்போது கருத்துத் தெளிவு ஏற்பட்டிருக்கிறது.

# ரேடியோ, டெலிவிஷன் மூலம் எழுத்தறிவு புகட்டுதல்

உலகத்தின் பல பகுதிகளில் தொடங்கியிருக்கும் இப்புதுமுறைத் திட்டம் அந்தந்த நாட்டு பொருளாதார, சமூக லட்சியங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது.

காபன் நாட்டில், குறிப்பிட்ட தொழில்களில் நடக்கும் முக்கிய வேலைகளுக்குத் தக்கவாறு எழுத்தறிவுத் திட்டங்கள் வகுத்துக் கொடுக்க ஒரு தேசீயக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. நைஜீரியாவில் புகையிலைத் தொழிலாளருக்காகவும், பிரசீலில் மின்சாரம், அணைபோடுதல் போன்றவற்றிலுள்ள தொழிலாளருக்காகவும், படிப்புத் திட்டங்கள் உருவாகியிருக்கின்றன. இந்தியாவில் விவசாயத்துறையில் அதிக விளைச்சல் திட்டம் ஹைதராபாத் அருகே நடக்கிறது. அவ்விடத்திற்குத் தகுந்த திட்டம் அங்கே இயங்குகிறது. யுகோஸ்லாவியாவில் தொழிலாளர் எழுத்தறிவு, தொழிற்பயிற்சிப் பொறுப்புகளை தொழிலாளர் சபைகளே ஏற்றிருக்கின்றன.

தொழிற்பயிற்சி, அரசியலறிவு, பொதுக் கல்வி ஆகியவற்றுடன் எழுத்தறிவளிப்பதையும் இணைக்க இப்போது அதிக முயற்சிகள் நடந்து வருகின்றன. பழைய முறையிலுள்ள பள்ளிக்கூட வாசனை இதிலும் அடிக்கத்தான் செய்யும். இதைக் கொஞ்சம் கொஞ்சமாகவே அகற்றவேண்டும்.

புதுமுறை எழுத்தறிவு வேலை சில நாடுகளில் (மடகாஸ்கர், நைஜர், செனகல்) கிராம முன்னேற்ற இயக்கத்துடனும், மற்ற இடங்களில் (கானா, மாளவி, நைஜீரியா, இந்தியா, மலேசியா, பாகிஸ்தான், வியட்நாம், ஹைட்டி, டொமினிகன் குடியரசு) சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. டுனீசிய விவசாய, தொழில் திட்டங்களில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதும் ஒரு பகுதி, அவற்றில் உள்ள தொழிலாளருக்கு, பொருளாதார, சமூக பிரச்னைகள், அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு கற்பிக்கப்படுகிறது. இதனால் வளர்ச்சியில் உள்ள பிரச்னைகளை உணர்ந்து அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளுகிறார்கள்.

இந்தோனேசிய ''ஐந்துவழி'' திட்டம் எழுத்தறிவை, நீண்டகால பொருளாதார வளர்ச்சியுடன் இணைத்திருக்கிறது.

கியூபாவில் 1961ல் அமுல் நடத்திய திட்டங்களின் தொடர்ச்சியாக, இப்போது முதியோர் ஆறு வருஷப் படிப்புப் படிக்கவேண்டுமென்று முடிவாகியிருக்கிறது. இதனால் நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் அவர்கள் முழு மூச்சுடன் பங்கெடுத்து வேலை செய்ய முடிகிறது. விவசாயச் சீர்திருத்தக் கழகம், தொழில் மந்திரி இலாகா, தொழிற்பயிற்சி வேலை ஆகியவற்றுடன் எழுத்தறிவு இயக்கம் இணைக்கப்பட்டிருப்பதால், தொழிலுக்கு அது முக்கிய இடம் அளிப்பதை எல்லோரும் நன்றாக உணருகின்றனர்.

சிலி நாட்டில் இவ்வியக்க வளர்ச்சிக்கு மனோதத்துவ அறிவைப் பயன்படுத்துகின்றனர். தொழிலாளரை சிறு பகுதிகளாகப் பிரித்து, கேள்வி-பதில் மூலமாக அவர்களுடைய அறிவை வளர்க்க முயலுகின்றனர். இதனால் நாட்டின் பிரச்னைகளையும் அவர்கள் நன்கு உணர முடிகிறது.

புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் படிக்கவும், அவர்களுடைய ஆசிரியர்கள் உபயோகிக்கவும் பல நாடுகளில் நூல்கள் 1965க்குப் பிறகு எழுதப்பட்டிருக்கின்றன.

அவர்களுக்காகத் தனி பத்திரிகைகளே வெளியாகின்றன. மற்றவைகளில் சில பக்கங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. கவர்ச்சியான விஷயங்களை, அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் அவை பிரசுரிக்கின்றன.

இதைப் போன்ற பத்திரிகைகள் காமரூன், குவாதிமாலா, ஹைட்டி, கினியா, மடகாஸ்கர், நேபாளம், ஸ்பெயின் நாடுகளில் வெளியாகின்றன. இவற்றுடன் இலங்கை, காங்கோ குடியரசு, ஈக்வடார், மாலி, பராகுவே சிரியா நாடுகளில், பொதுவாக எல்லோரும் படிக்கும் பத்திரிகைகளில் எழுத்தறிவு பகுதிகளும், இயக்க வளர்ச்சிக்கான கட்டுரைகளும் வெளியாகின்றன.

எழுத்தறிவு வளர்ச்சிக்கு பழைய முறைகளுக்கு பதிலாக சினிமா, கிராமபோன் போன்ற வசதிகளை கையாளுகின்றனர். சாதாரண சுவரொட்டி முதல் டெலிவிஷன் வரையில் பலவித சாதனங்கள் இப்போது உபயோகிக்கப்படுகின்றன. இவ்வியக்கத்துக்கு மக்களின் ஆதரவு தேடவும், பிறகு இதில் பங்கு கொள்வோருக்கு உற்சாகம், எழுத்தறிவு அளிக்கவும் ரேடியோ விரிவாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

எத்தியோப்பியாவில் 1965ல், சோதனை முறையில், ரேடியோ மூலம் எழுத்தறிவு இயக்கம் துவக்கப்பட்டது. நைஜர் நாட்டிலும் இது நடக்கிறது. இதைப்போன்ற நிகழ்ச்சி, பம்பாரா மொழி பேசுபவர்களுக்காக, மாலியில் ஒவ்வொரு நாள் மாலையும் ஒலிபரப்பாகிறது. இதற்கு ''ரேடியோ பள்ளி'' என்று பெயர். மடகாஸ்கரில் எழுத்தறிவு நிலையங்களுக்கு நூற்றுக்கணக்கான ரேடியோக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

ஈரானில், காஸ்வின் மாவட்டத்தில், எழுத்தறிவூட்டுவதற்காக ஒரு ஒலி பரப்பியே வேலை செய்கிறது. இலங்கையிலும், மலேசியாவிலும் ஆயிரக் கணக்கான ரேடியோக்கள் எழுத்தறிவு நிலையங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. நேபாளத்தில் வாரமொரு முறை முதியோர் கல்வி ஒலிபரப்பு நடக்கிறது.

அர்ஜெண்டைனா, குவாதிமாலா, மெக்சிகோ நாடுகளில் இவ்வியக்கத்துக்கு ரேடியோவை விரிவாக உபயோகிக்கின்றனர். எழுத்தறிவு வகுப்புகள் நடத்துவதற்கு பெரு நாட்டில் 1300 ரேடியோக்கள் பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜமைக்கா, ஸ்பெயின், அமெரிக்க நாடுகளிலும் இதற்கு ரேடியோ பயன்படுகிறது.

இதைப்போலவே சினிமாவும் எழுத்தறிவு வளர்ச்சிக்கு மிகச்சிறந்த சாதனம். எல் ஸால்வடார், டுனீசியா நாடுகள் இந்த சாதனத்தை உபயோகித்து பெரும் அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றன.

ஒரு சில நாடுகளிலேயே இப்போது டெலிவிஷன் மூலம் எழுத்தறிவு இயக்கம் நடத்தப்படுகிறது. அதுவும் சோதனை. ஆனால் கல்வித்துறையில் சக்தி வாய்ந்த கருவியாக இருக்கப் போகிறதென்று இப்போதே தெரிகிறது.

இப்போது டெலிவிஷனை இதற்கு உபயோகித்து வரும் நாடுகள்: பிரேசீல், ஐவரி கோஸ்ட், செனகல், கானா, இத்தாலி, ஈரான், ஜமைக்கா, மெக்ஸிகோ, பெரு, அரபு குடியரசு, அமெரிக்கா, சிலி, எத்தியோப்பியா. இந்தியா, யுகாந்தா நாடுகளும் உபயோகிக்கப்போகின்றன.

படிக்கவும், எழுதவும் கற்பிப்பதே எழுத்தறிவு இயக்கமென்பது பழைய காலக்கருத்து. இப்போது தொழிற்பயிற்சியுடன் கலந்த எழுத்தறிவு என்ற முறை அமுலுக்கு வந்திருக்கிறது. இந்த மாறுதலின் விளைவாக, இதற்கேற்ற ஆசிரியர்களையும் கண்டுபிடித்து, பயிற்சியளிக்க வேண்டும்.

அனேகமாக எல்லா நாடுகளிலும் முதியோர் கல்வித்திட்டத்தை பள்ளி ஆசிரியர்களே நடத்தி வருகின்றனர்.

பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்கள் பழைய முறைகளைக் கையாளவே விரும்புகின்றனர். எனவே இதற்கு மற்ற தொழில்களிலிருந்து வருபவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. நைஜர் நாட்டில் விவசாய போதகர்களையும் நர்ஸ்களையும் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. லாவோஸில் கிராம முன்னேற்றத் தலைவர்களும், செனகலில் தொழிற் பயிற்சிப் பள்ளிகளிலுள்ள உபாத்தியாயர்களையும், டுனீசியாவில் தொழிற்சாலை ஃபோர்மென்களையும் எழுத்தறிவு ஆசிரியர்களாக உபயோகித்து வருகின்றனர்.

அல்ஜீரியா, மரிடானியா, மொராக்கோ போன்ற நாடுகளில், புதுத் தொழிற் சாலைகளில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இதற்குக் கிடைக்கவில்லை. எனவே அத்தொழிற் சாலைகளிலுள்ள ஓவர்சியர்களைக் கொஞ்சநாள் பயிற்சியளித்து, இதற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

ஒரு சமூகத்தில் நல்ல கல்வியறிவுள்ளவர்கள் -பள்ளி ஆசிரியத்தொழிலில் இல்லாதவர்கள்- தாமாக முன்வந்து, எழுத்தறிவிக்கும் இம்மாபெரும் பணியில் ஈடுபடவேண்டும். அப்படிச் செய்பவர்கள் பெரும்பான்மையாக உள்ள நாடுகளில் புதியமுறை நன்றாக வேலை செய்கிறது.

எழுத்தறிவுப்புத்துறையில் சர்வதேச ஒத்துழைப்பு உண்மையான பலனை அளித்திருக்கிறது என்பதற்கு, இதுவரை ஒவ்வொரு நாட்டிலும் தோன்றியுள்ள வளர்ச்சி போதுமான சான்று. உலக நாடுகளின் உதவியால்தான் இயக்கம் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது.

தமிழில்: பி. வி. சுப்பிரமணியன்



Photo © Pablo Volta

சார்டினியா (இத்தாலி) கிராமங்களில் அந்த இடத்துக்கேயுரிய உடை வகைகள் இன்னமும் இருந்து வருகின்றன. எல்லா விதமான நுட்ப வேலைகளிலும் தேர்ந்த பெண்கள் தங்கள் உடையைத் தாங்களே தயாரித்துக் கொள்கின்றனர். (மேலேயுள்ளது போல) கடந்த 20 ஆண்டுகளில் பெரிதும் நவீன மயமாகி வந்த போதிலும் சார்டினியா கிராமங்களில் பல தங்கள் புராதன மரபைப் போற்றி வருகின்றன.

# மாபெரும் மாற்றத்துக்கு அடிகோலிய சுருக்கெழுத்து வகுப்பு

**பிரான்ஸிஸ்கோ ஸாலிஸ்**

**பிரான்ஸிஸ்கோ ஸாலிஸின் அருமையான கதையையும் சார்டினியா கிராமம் ஒன்றை மாற்றியதில் அவர் ஆற்றிய பணியையும் இங்கே தருகிறோம். இன்று இத்தாலி ஐரோப்பாவின் வளர்ச்சிபெற்ற நாடுகளில் ஒன்றாக இருந்தபோதிலும் தெற்கே அதன் சில பகுதிகளும் சார்டினியா போன்ற தீவுகளும் இந்த அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை. அண்மையில் வளம் குறைந்த இப் பகுதிகள் நவீன மயமாகி முன்னேற உறுதியுடன் பாடுபட்டு வருகின்றன. 1967 செப்டம்பரில் பிரான்ஸிஸ்கோ ஸாலிஸுக்கு மகமது ரேஸா பஹ்லாவி பரிசு வழங்கப்பட்டது சார்டினியாவிலுள்ள ஸான்டுலுஸ்ஸுர்கியு நகரில் பல ஆண்டுகள் அவர் பணியாற்றியதின் விளைவாக எழுத்தறிவின்மை 37%லிருந்து 4.5%ஆகக் குறைந்தது. 'யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த லூஸியோ அடினெல்லி ஒத்துழைப்புடன் இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.**

ஸார்டினியா தீவில் காக்லியரி மாகாணத்திலே இருப்பது ஸாண்டு லூஸுர்கியூ. கடல் மட்டத்துக்கு 600 மீட்டர் உயரத்தில் ஃபெர்ரோ மலையின் கிழக்குச் சரிவில் அமைந்தது அந்தச் சிற்றூர். கடந்த பத்து ஆண்டுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அங்கிருந்து அர்ஜண்டினா, ஆஸ்திரேலியா, ஃபிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து ஆகிய நாடுகளுக்குக் குடியேறினார்கள். ஒவ்வோர் ஆண்டும் சிலர் தம் விடுமுறை நாட்களைக் கழிக்க, அந்தத் தீவுக்கு வருவார்கள். தமக்குப் பிடித்த பெண்ணைப் பார்த்து மணந்து தாம் குடியேறிய நாடுகளுக்குத் திரும்புவார்கள்.

# கவிதைப் போட்டிகள் நடத்தும் தீவு

மிகப் புராதன மத்திய தரைக் கடல் நாகரிகத்தின் பிறப்பிடமான சார்டினியா இன்று மாறிக் கொண்டு வந்த போதிலும் அவ்வப்போது அதன் பழமைச் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது. மலைப் பகுதிகளில் வாழும் மக்களிடையே இதை நன்கு காணலாம். (கீழே: ஆட்டுத்தோல் கோட்டணிந்த வயதான ஆடு மேய்ப்பவர்)













சார்டினியாவின் மரபு வழி வந்த பண்டிகை 'சாக்ரா'. அப்போது நாடோடிக் கவிஞர்கள் கிராமம் கிராமமாகச் சென்று கவிதைப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள்." 'பலுடுண்டு' எனப்படும் 'லானெட்டா' இசைக்கேற்ப ஆடப்படும் நடனம் (மேலே) அல்லது முகமுடியணிந்த இடையர்களின் ஊர்வலம் (இடது) ஆகியவற்றுக்குப் பிறகு கவிதைப் போட்டி நடைபெறும். போட்டியில் இளைஞர், முதியோர், தொழிலாளி, விவசாயி ஆகிய யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். பாராட்டுப் பெற்ற கவிதைகள் அச்சிடப்பட்டு விற்கப்படுகின்றன. 1926ல் நோபல் பரிசுபெற்ற சார்டினியா நாவலாசிரியர் கிரேஸியா டெலடாவை மக்கள் பெரிதும் போற்றுகின்றனர்.



Photo © Pablo Volta

# கவிதைகளைப் புரிந்து கொள்ளும் அதிசய ஆற்றல்

சார்டினியாவின் கிராமங்களிலுள்ள பலர் இங்கு காட்டப்பட்டுள்ளது போன்ற மரபு வழி உடைகளை இன்னமும் அணிகின்றனர். கறுப்புக் கோட்டும் குட்டையான கால் சட்டையுமே அது. பின்னணியில் தெரியும் சிறுமி வளர்ந்து வயதடைவதற்குள் ஒரு வேளை இந்த ஆண்கள் பழைய ஆடை வகைகளை விட்டுவிடக் கூடும்.

Photo © Pablo Volta



ஸாண்டுலூஸுர்கியூவில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் செம்மறியாட்டுப் பண்ணை நடத்தியோ, கால் நடைகளைப் பெருக்கி வளர்த்தோ வாழ்பவர்கள். ஸார்டினியப் பொருளாதார அமைப்பின் அடிப்படையே சில ஆண்டுகளுக்கு முன் இப்படித்தான் இருந்து வந்தது. 1840 முதல் நடுத்தரப்பள்ளி ஒன்று இருந்து வருகிறது என்னும் பெருமை பெற்றது, அந்த ஊர்; ஸார்டினிய நகரங்களுக்குள்ளேயே அது ஓரளவு கௌரவமான பண்பாட்டுக்குப் பெயர் பெற்று விளங்கிறது. இருந்தும் அங்கே எழுத்தறிவின்மை எங்கும் பரவலாக இருந்து வந்தது; அதிலும், முக்கியமாக லூஸுர்கியூவில் இந்தச் சீர்கேடு குறிப்பிடக் கூடிய அளவுக்கு இருந்தது. இந்த நிலையில் 1951-இல் பொதுப் பண்பாட்டுக்கென்று ஒரு கேந்திரம் முதல் முதலாக அந்த ஊரில் நிறுவப் பெற்றது.

இந்தப் பொதுப் பண்புாட்டுக் கேந்திரம் 'எழுத்தறிவின்மையை எதிர்த்துப் போரிடும் இத்தாலியத் தேசீய நிறுவனம்' என்பதன் ஓர் உறுப்பாகும். இது 1947-இல் தெற்கு இத்தாலியின் சில பகுதிகளில் எழுத்தறிவையும் சமுதாய அபிவிருத்தியையும் வளர்ப்பதற்காக ஏற்பட்டது; மக்களின் பண்பாட்டு நிலையையும், சமூக—பொருளாதார நிலையையும் சீராக்கும் முறையில் அமைந்தது அது.

இன்று இப்படித் தொண்ணுறு கேந்திரங்கள் தெற்கு இத்தாலியில் உள்ளன; தாங்களாகவே முன்வந்து உதவ 800 தொண்டர்களும், 30,000க்கு மேற்பட்ட மாணவர்களும் கொண்டவை இவை. சென்ற பதினேழு ஆண்டுகளாக என் பொறுப்பில் இருந்து வரும் ஸாண்டுலூஸுர்கியூ கேந்திரத்தின் வரலாறு இது.

1951-இன் தொடக்கத்தில் முதனிலைப்பள்ளி ஆசிரியர்களும். பல்கலைக் கழக மாணவர்களும் நல்ல நிலையில் உள்ளவர்களுமான ஒரு சிறு குழுவினர் ஒரு பிரச்னை குறித்துக் கலந்து பேச வேண்டி ஒன்று கூடினுர்கள். சிறிது காலமாக அது பற்றியே நாங்கள் எண்ணிவந்திருக்கிறேம். 'வறுமை பீடித்த எங்கள் சமுதாயத்தில் ஆடு மேய்ப்போர், கால்நடை வளர்ப்போர், குடியானவர்கள், கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் இவர்களைக் கவனிக்க வேண்டியது நம் கடமையும் பொறுப்புமாகும்' என்பதே அது.

நாங்கள் அனைவரும், ''இப்படி நாம் சீட்டாடி வீண்பொழுது போக்கிக் கொண்டு இருப்பதோ, சிற்றுண்டி விடுதிகளில் பலவகைப் பானங்களை பருகக் கூடுவதோ, நாங்கள் ஏதோ 'தீவிர அறிவாளிகள்' என்று மனப்பிராந்தி கொள்ள வைக்கும் நவநாகரிக நாவல் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதோ இனி நடக்காது'' என்பதை ஒருமிக்க உணர்ந்தோம். 'நம், ஊரின், நலனுக்காக நாம் ஏதேனும் செய்தேயாக வேண்டும்' என்று கருதுவோர் இருபது பேருக்கு இருந்தோம்.

முதல்முதலாக ஒரு கணக்கு எடுத்துப் பார்த்ததில் மொத்தம் 4000 பேர் கொண்ட எங்கள் ஊர் மக்கள் தொகையில் குறைந்தபட்சம் 1,100 பேர் (37 சதவிகிதம்) அறவே எழுத்தறிவில்லாதவர்களாகவோ (எழுதவோ

படிக்கவோ, கற்காதவர்களாகவோ), (முந்தி எழுதப்படிக்கக்கற்று) அதை மறந்துவிட்டவர்களாகவோ இருந்தது தெரிந்தது. இதற்குக்காரணம் எங்கள் ஊரில் பண்பாடு, கல்விபற்றிய அலுவல்களுக்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யாதிருந்தது தான்.

இப்படி ஒரு பிரச்னை இருப்பது தெரிந்ததும் நாங்கள் இதைச் சமாளிக்க முயற்சி எடுத்தாக வேண்டும் என்று முடிவு செய்தோம். ஊராருடன் நேரடித் தொடர்பு கொள்ளும் வகையில், முதலாவதாகச் சில அலுவல்களைத் துவங்குவது, இவற்றின் மூலமாக அவர்களுடைய நட்பையும் நம்பிக்கையையும் பெறுவது என்று தீர்மானித்தோம். இதனால் ஏற்பட்டதுதான் ஸாண்டுலூஸர்கியூவில் தோன்றிய பொதுப் பண்பாட்டுக் கேந்திரம். இது நாளடைவில் இத்தாலியிலேயே மிகவும் முக்கியமான நிறுவனமாக வளர்ந்துவிட்டது.

உற்சாகம் பொங்க நாங்கள் இதில் முனைந்தோம். 'இவ்வளவு சிக்கல்கள் எங்களுக்கு எதிராகத் தோன்றும்' என்று அப்போது எங்களுக்குத் தெரியாது. 'முதனிலைப்பள்ளியில் போதிக்கும் பழைய ரீதியான பயிற்சியிலே தான் நமக்கு அநுபவம் உண்டே; அதே மாதிரிதான் முதியோருக்கும் கல்வி கற்பிக்கவேண்டியிருக்கும்' என்று ஏதோ சாமானியமாக எண்ணிக் கொண்டு விட்டோம்.

அப்புறந்தான் எங்களுக்குத் திடுமென்று நிலைமை புரியலாயிற்று. குழந்தைகளைப்போல் கருதி நடத்தவோ, குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறையிலோ முதியோர்க்குப் போதிக்க முடியாது என்பதை விரைவில் உணர்ந்தோம்: அந்த மாதிரி தங்களைச் சிறுபிள்ளைகளாகக் கருதித் தங்களுக்குப் போதிப்பதை முதியவர்கள் ஏற்கத் தயாராயில்லை. 'தன்மதிப்பு' என்பது ஒருபுறம் இருக்க, வகுப்பில் கலந்து கொள்ளும்போது அவர்களுக்கு கேள்வி ஞானமும் அநுபவமும் வேறே உண்டு என்ற உண்மையும் ஒருபுறம் இருக்கிறதல்லவா?

ஆகவே, நாங்கள் எங்கள் போதனை முறையையே மறு பரிசிலனை செய்வதோடு, பழைய வகுப்பறையமைப்பு முறையில் அடியோடு மாற்றங்களும் செய்ய வேண்டியதாயிற்று. 'பெஞ்சிகள்' கூடாது 'ஆசிரியர்-மாணவர்' என்ற தோரணையில் பழகுவதற்கில்லை. இவற்றுக்கு மாறாக, செயல்முறைப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் தேவையாயின; கற்க வரும் அம்முதிய (மாண)வர்களுக்கும் கற்பிக்கும் ஆசானுக்குமிடையே பழுத்த நட்புறவு அவசியம் என்பதும் தெரிந்தது.

இப்படி எங்கள் சமுதாயத்தில் எழுத்தறிவூட்டும் முயற்சியிலும், பண்பாடு கல்வி மறுமலர்ச்சியிலும் ஈடுபடத் தொடங்கினோம்.

முதலில் ஓ ர ள வு க் குட் பட் டே தொடங்கினாலும் இந்தப் பண்பாட்டுத் திட்டத்தினால் நன்மை இருப்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்தாலும், நாங்கள் யாரைக் குறித்து இதெல்லாம் செய்தோமோ அந்த முதியவர்கள் எங்கள் உற்சாகத்தில் பங்கு கொள்ளவில்லை. எங்கள் முயற்சிகளில் ஆர்வம் காட்டாமலோ சும்மா தலையை ஆட்டிவிட்டு இது எங்கே நடக்கப்போகிறது என்ற பாவனையோடோ இருந்து வந்தார்கள். இது ஒன்றும் அதிசயமில்லை. புதிய கருத்து என்றால் வயதானவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். அவர்களை வசப்படுத்துவதற்கு வழக்கமான வழிகளைக் கடைப்பிடிக்காமல் புது முறைகளைக் கைக்கொண்டோம். அதிசயிக்கத் தக்க வகையில் இவற்றில் சில முறைகள் நன்கு பயன் அளித்தன.

சுருக்கெழுத்துக் கற்றுக் கொடுப்பது என்று ஒரு யோசனை தோன்றியது; இதில் அபாரமான வெற்றி கிட்டியது. முதலில் பார்க்கும்போது பண்பாட்டை இப்படி வளர்ப்பது விநோதமாகப் படலாம்; ஆனால் எங்கள் ஊரில் இது ஏதோ மந்திர சக்தியால் ஏற்படுவது போல் உடனடியாகப் பலித்துவிட்டது.

ஸாண்டுலூஸர்கியூவில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு இப்படி ஓர் ஆளின் பெயரைத் தலைதெறிக்கும் வேகத்திலே—பேசுகிற அளவு வேகத்தில்—எழுதுவது ஏதோ ஜாலவித்தை போல் பட்டுவிட்டது. சுருக்கெழுத்து வகுப்பு நடைபெறும் என்று தெரிவித்ததுமே ஏராளமான பேர் அதில் கலந்து கொள்ள முன் வந்தார்கள்.

**ஸாக்ரா** விழாவின்போது நடக்கும் 'கவிதைப் போட்டியில் பாடும் பாடல்களை அப்படியே எழுதிக்கொள்ள வேண்டுமென்றுதான் இப்படி எல்லாரும் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டார்கள். பிரபலமான இந்த **ஸாக்ரா** விழாக்கள் இன்னும் ஸார்டீனியாவெங்கும் நடைபெற்று வருகின்றன; அப்போது இசைவாணர்கள் கிராமங் கிராமமாகப் புதிய புதிய பாடல்களை மெட்டுடன் அமைத்துப் பாட பெரிய போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள்.

நான் இருக்கும் இடத்தில் **ஸாக்ரா** விழா நடைபெறும்போதெல்லாம் தற்காலத்துக்கேற்ற கேளிக்கைகளுடன் கிராமிய நடனம், கால்பந்துப்போட்டி, கவிதைப்போட்டி போன்ற அம்சங்களும் இராமற் போவதில்லை.

இந்தப்போட்டிகள் தனிச் சிறப்புள்ளவை. காபிடோலைன் மலையில் ஆதிகால ரோமாபுரியை நினைவூட்டும் முறையில் வாகையிலைத் தோரணங்கள் அலங்கரித்திருக்கும். ஊர் ஊரார்கச் செல்லும் இசைவாணர்கள் தாம் கட்டிய எண்சீரால் அமைந்த பாடல்களை அங்கே நாலுபேருடன் இசையும்படி பாடிக் காட்டுவார்கள். இந்தப் பாடல்களின் கருத்துக்கள் சமயச் சார்பானவை. வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என இப்படிப் பல வகையில் அமைந்திருக்கும். விவிலிய சம்பந்தமானவையாயும் இருக்கும்; தற்காலச் சமூக சம்பந்தமானவையாகவும் இருக்கும். இக்கவிதைகள் இன்னது பற்றி இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானித்து முடிவு தெரிவிப்பதற்கென்றே ஒரு சிலரை இச்சந்தர்ப்பத்தில் தேர்ந்தெடுத்து நியமனம் செய்வார்கள்.

இந்தப் பாட்டுப் போட்டிகள் மிகவும் பிரபலமானவை; வாலிபர்களுக்கும் சரி வயோதிகர்களுக்கும் சரி பிடித்தவை. இந்தக் கவிஞர்கள் மொத்தத்தில் தொழிலாளிகளாகவும், ஆடுமாடு வளர்க்கும் குடியானவர்களாகவும், உழவர்களாகவும் இருப்பார்கள்; இயல்பாகவே கவி பாடுவதோடு, அதே ரீதியில் கதை பாடும் பேராற்றலும் இவர்களுக்கு உண்டு. அப்போது கல்வியறிவே இல்லாத இரண்டொருவர் இப்படிப் பாட முன் வருவார்கள். ஆனாலும், கேட்கக் கூடியிருக்கும் ம்க்களுக்கு அவர்கள் நல்ல எதுகையுடன் பொருந்தப் பாடுகிறார்கள் என்று பட்டு, அவர்களைப் பிடித்துவிட்டால், விஷயம் சுமாராக இருந்தாலும் பொறுமையோடு கேட்கிறார்கள். கவிஞர் அழகிய சொற்களும் கருத்துக்களும் இணைய எதுகை நயம், சந்தம் பிரமாதமாக அமையும் விதத்தில் பாடத் தொடங்கிவிட்டால் ஒரே கொம்மாளந்தான்.

எங்கள் முயற்சி தொடங்கிய சமயம் ஸார்டினியாவில் (பாட்டு முதலியவற்றைப் பதிவு செய்யும்) 'டேப்-ரிகார்டு' கருவிபற்றி ஏதும் தெரியாது. இந்நிலையில், இந்தச் சுருக்கெழுத்து யோசனை உடனடியாகப் பலித்து விட்டது. அதைத் தொடங்கிய நாளைப்பற்றி இன்னும் நினைவிருக்கிறது. மக்கள் திரள் திரளாக வந்தார்கள்; சிலர் ஜன்னல் வழியாகக் கூடக் குதித்து நுழைந்தார்கள்! இலவச வகுப்புத்தான்!

இப்படித்தான் அன்று 1951இல் நாங்கள் முதல் முதலாகப் பொது மக்களுடன் தொடர்பு கொண்டோம்; மதச் சார்பாகவோ அரசியல் காரணங்களுக்கோ நாங்கள் இப்படிச் செய்யவில்லை என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளும்படி நடந்துகொண்டோம். இப்படிக் கட்சிச் சார்பின்றி நாங்கள் இருக்கவே, ஊர் முழுவதும் எங்களிடம் நம்பிக்கையும் மதிப்பும் ஏற்பட்டன. பொதுப் பண்பாட்டுக் கேந்திரத்தில் நாங்கள் நடத்தும் இந்த வகுப்பில் சேர வரவர ஏராளமானபேர் குவியலானார்கள்.

நாங்கள் கல்விக்காக வகுத்த இந்தத் தந்திரத் திட்டத்தில் இப்படிச் சுருக்கெழுத்து வகுப்பு நடத்துவது முதல் பகுதியே என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்துதான் இருந்தது. அப்படியேதான் அதுவும் முடிந்தது. சில காலத்துக்கெல்லாம் நாங்கள் இந்தச் சுருக்கெழுத்து வகுப்புக்களைக் குறைத்து சரித்திரம், பூகோளம், கணிதம் போன்ற துறைகளை எங்கள் வாரப் பயிற்சித் திட்டத்தில் சேர்த்துக் கொண்டோம்.

எங்கள் ஊர்ப் பிரச்னைகளைக் குறித்த முயற்சிகளிலேயே முழுவதும் ஈடுபட்டு அவற்றை எந்த எந்த வழிகளில் சமாளிப்பது என்பதில் கவனம் செலுத்தினோம். நாங்கள் செய்த ஒவ்வோர் அலுவலும் சமுதாய வாழ்வுடன் நேரடியான தொடர்புள்ளதாக இருந்தது: தெளிவாக இல்லாத பிரச்னைகளிலே நாங்கள் தலையிடுவதில்லை. கொஞ்சங் கொஞ்சமாக எங்கள் கேந்திரம் உருவாகி வந்தது. ஆனால் பழைய ரீதியில் ஸார்டினியாவில் அமைந்திருந்த பள்ளிக் கூட அமைப்பினின்றும் அடியோடு மாறுபட்டு விளங்கியது அது. இன்ன மணி நேரத்திலேதான், இன்ன கால வரையறைக்குள்ளேதான் பாடம் நடக்கிறது என்பதெல்லாம் இல்லை. படிக்க வருவோர் தமக்குப் பிடித்த போது வரலாம்; அப்படியே திரும்பியும் போகலாம்; கேள்வி என்று கேட்கும் வழக்கமும் இல்லை. அநுமதி கேட்கவோ, இன்ன காரணத்தால் வரவில்லை என்று சொல்லிக்கொள்ளவோ தேவையில்லை.

# அழிவுக்கு வழிகாட்டிய வெற்றி

முதலில் நாங்கள் முதனிலைப்பள்ளியின் கீழ்ப்பகுதியிலே வகுப்பு நடத்தி வந்தோம். இந்த இடம் முன்னெல்லாம் சாமான்களை வைக்கும் உக்கிராணமாக இருந்தது. இதை நாங்கள் எங்கள் அலுவல்களுக்கு ஏற்றபடி மாற்றியமைத்துக் கொண்டோம். பிறகு நாங்கள், சீர்குலைந்த உடற்பயிற்சிக் கூடம் ஒன்றுக்கு மாறினோம். எங்களிடம் படிக்கவரும் முதிய மாணவர்கள், மற்றுமுள்ள ஆசிரியர்கள், எங்களுடன் பழகும் தோழர்கள் இப்படி எல்லாருமாகச் சேர்ந்து அந்த இடத்தைச் சீராகக் கட்டினோம்.

இவ்வாறு எட்டு ஆண்டுகளிலே நாலு ஆண்டுகள் முதனிலைப்பள்ளியின் அடிப் பகுதியிலும் நாலு ஆண்டுகள் உடற்பயிற்சிக் கூடத்திலும் கழித்தோம். பிறகு 1959-இல் 18-ஆம் நூற்றாண்டிலே கட்டிய அருமையான வீடு ஒன்றை விலைக்கு வாங்கினோம். எழுத்தறிவின்மையை எதிர்த்துப் போரிடும் தேசீய நிறுவனத்தார் கொடுத்துதவிய ஓரளவு தொகையைக் கொண்டும், அந்த வீட்டாரின் தயாள குணத்தினாலுமே அவர்கள் தானம் அளித்ததாகவே சொல்லவேண்டும்—அவ்வளவு குறைந்த விலைக்கு அதை நாங்கள் வாங்க முடிந்தது.

சுருக்கெழுத்துப் பயில இந்தக் கேந்திரத்தை நாடி வந்த முதியவர்கள் அப்படி அடியோடு எழுதப் படிக்கத் தெரியாத பாமரர்கள் அல்ல. தாம் ஓரளவுக்கு நன்றாகவே படித்தவர்கள் என்று உள்ளூற நம்பினவர்கள். 'நம்பினார்கள்' என்று ஏன் சொல்கிறேன் தெரியுமா? அவர்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் பள்ளியில் படித்தவர்கள் தாங்கள் வாழ்ந்த சூழ்நிலை காரணமாக எவ்வளவோ விஷயங்கள் அவர்களுக்குத் தெரியாமல் இருந்துவிட்டன. இப்போதுதான் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் உண்மை நிலை அவர்களுக்குப் புரிந்தது.

முற்றும் எழுத்தறிவே இல்லாதவர்கள் பின்னால்தான் வந்து சேர்ந்தார்கள். நேரில் போய் அவர்களைப் பார்த்துப் பழகி விவரம் அறிந்து எங்கள் வகுப்புக்களில் சேர வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டபின் வந்தவர்கள் இவர்கள். முதலில் பெண்களுக்கு நம்பிக்கையூட்டி இதில் சேர்த்துக் கொண்டோம். வெளிநாடுகளில் வாழும் தங்கள் மக்களுக்கு எழுத முடியும் என்று அவர்களுக்கு ஆர்வம் மூளும்படி செய்ததுதான் மூலக் காரணம்.

போதிக்க முன்வந்த ஆசிரியருக்கும் அந்தப் பெண்பிள்ளைகளுக்கும் நடந்த இந்தச் சம்பாஷணை இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

**ஆசிரியர்:** உங்களுக்கு எத்தனையோ பிள்ளைகள்; அவர்கள் வெளிநாட்டில் வாழ்கிறார்கள். அவர்களுக்குக் கடிதம் எழுதுவதென்றால் பிறத்தியானைக் கூப்பிட வேண்டியிருக்கிறதில்லையா? அப்போது உங்கள் குடும்ப ரகசியங்களை அந்த ஆளுக்கும் சொல்லியாக வேண்டியிருக்கிறதே; அந்த ஆள் உங்கள் வீட்டு விவகாரங்களையெல்லாம் ஊர் முழுவதும் பறையடித்தால் எப்படியிருக்கும் உங்களுக்கு? இப்படி நேரவேண்டுமென்றுதான் உங்களுக்கு விருப்பமா? சொல்லுங்கள்.

**தாய்:** அதற்கு நான் என்ன செய்வது? எனக்கோ வயதாகிவிட்டது. இனிமேல் போய் இந்த வயசிலே நான் படிக்கிறதென்றால் முடிகிற காரியமா?

**ஆசிரியர்:** வயசுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? வயசாகி விட்டதால் செத்துப் போய்விட்டதாகவா அர்த்தம்? இப்படிச் செத்த மாதிரி இருப்பானேன்? வாழ்வே தொலைந்து விட்டதா? எவ்வளவோ இன்பம் உலகத்தில் இல்லாமலா போய் விட்டது? அப்படியெல்லாம் எண்ணாதே! நாற்பது ஐம்பது—ஏன் அறுபது என்று வயசாகிவிட்டால் முதுமை வந்துவிட்டதென்றா நினைக்கிறாய்? அதெல்லாம் ஒன்றுமில்லை. இதைக்கேள்: 'நாமாகவே கடிதம் எழுத முடியவில்லையே!' என்று உனக்கே வருத்தமாயிருக்கிறதல்லவா? இப்படி உன்னை நீயே தாழ்த்திக்கொண்டது போதும்; பிறத்தியாருக்கு அடங்கிக் கிடக்க வேண்டியதில்லை இனி. ஆஸ்திரேலியாவிலும், அர்ஜண்டினாவிலும், ஸ்விட்ஜர்லாந்திலும் உன் பிள்ளைகள் இருக்கிறார்களே; நீயே நேராக அவர்களுக்குக் கடிதம் உன் கையெழுத்தில் எழுதி அனுப்பினால் அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் நீயே யோசித்துப்பார்.

பெண்பிள்ளைகளிடம் இப்படிப் பேச்சுக் கொடுத்ததில் உடனே எங்கள் யுக்தி பலித்துவிட்டது. ஆண்களிடமும் இந்த யுக்தி பலிக்கத்தான் செய்தது. ஆனால் இவர்களுக்கு நாங்கள் இன்னும் தெளிவான காரணம் ஒன்றைச் சொல்ல முடிந்தது; அதாவது, படிக்கத்தெரிந்த குடியானவன் என்றால் அவனுக்கு உள்ள நிலவுடைமை கொஞ்சமாகவே இருந்தாலும்—தன் பண்ணையைப் பின்னும் சிறப்பாக நடத்தி விளைச்சலைப் பெருக்கி மேலும் பணம் திரட்டும் வகையில் பல விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளலாமில்லையா?

எங்கள் போதனா முறையில் முக்கியமாக ஒன்றைப்பற்றிக் கவனம் செலுத்தினோம். முதியவர்களான இம்மாணவர்களுக்கு எந்த எந்தத் துறையில் அக்கறை உண்டு. அவரவர் தனிப் போக்கு எப்படி என்பதுதான் அது. சமுதாயம் என்ற முறையில் எல்லாரும் இணைந்து பழகும் ஆர்வத்தை நாங்கள் இந்தக் கேந்திரத்திலே வளர்த்ததால் இந்த முயற்சி பெரிதும் பயன் அளித்தது. எழுதப் படிக்கத் தெரியாத முதியவர் ஒருவர் எங்கள் வகுப்பில் சேர்ந்ததும் தாம் தன்னந்தனியாக இல்லை. தம்மைச் சமூகம் ஒதுக்கி வைத்துவிடவில்லை. என்பது அவருக்குப் புரிந்துவிடும். இப்படிக் கல்வி கற்க இவ்வகுப்பில் சேர்வதால் கேந்திரத்தின் திட்டங்களிலும் அதன் நடைமுறைகளிலும் தாமும் கலந்து கொள்ள முடிகிறது, என்பதும் அவருக்குத் தெரிந்தது.

அவர் எங்களுள் ஒருவராகிப் பண்பாட்டை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு. நாங்கள் சில இடங்களுக்குப் போய் வரும்போது எங்களோடு சேர்ந்துகொண்டார்; ஏற்கனவே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டவர்களோடும், ஆசிரியர்களோடும் அவருக்கு உதவியாக இருக்கும் சிலரோடும் பழகி நட்புறவு கொள்ள முடிந்தது. அவற்றையெல்லாம்விட அவர் இந்தக் கேந்திரத்தில் எல்லாரும் சரிசமமாக ஜனநாயக ரீதியில் அமைந்த 'முதிய மாணவர் சபை'யில் ஓர் உறுப்பினராகக் கலந்துகொள்ள முடிந்தது. எதிர்காலத்தில், குறிப்பிட்ட திட்டங்களை நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கும்போது அவரும் யோசனை சொல்ல வாய்ப்பு இருந்தது. நாளடைவில், 'ஜனநாயகத்தில் பயிற்சி' என்பது எங்கள் கேந்திர அலுவல்களுள் முக்கிய அம்சமாகிவிட்டது.

'கேந்திர உறுப்பினர் நாம்' என்ற பெருமை கொள்ளும் வகையில் அவர்கள் காட்டிய ஆர்வம் பிரமாதமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் முந்தி எங்களிடம் கற்ற இத்தகைய முதிய மாணவர்களிடமிருந்தும் வெளிநாடுகளிலிருந்தெல்லாம் ஏராளமான கடிதங்கள் வந்து குவியும். எங்கள் பயிற்சி முறை காரணமாக 1956-1957 வாக்கில் ஸாண்டுலூரஸார்கியூவில் எழுத்தறிவின்மை என்பது அடியோடு நீங்கி விட்டது.

ஆனால் ஏதோ பெருங்குறை நேர்ந்து விட்டது என்பதை உணரலானோம். விவரம் புரிந்ததும் இனியும், ''எங்கள் முயற்சி பலித்துவிட்டது என்று பெருமைப் படுத்திக் கொண்டு, அப்படி எழுத்தறிவிக்கும் பயிற்சி பண்பாட்டுத் திட்டம் என்றெல்லாம் மட்டும் நடத்தித் திருப்திப்படுவதற்கில்லை'' என்பதைக் கண்டு கொண்டு விழிப்படைந்தோம். என்னதான் (பிற்பகல் 2 மணி முதல் இரவு 2 அல்லது 3 மணி வரை வகுப்பை நடத்தி) நாங்கள் இந்த முயற்சியில் உள்ளூற ஈடுபட்டும் அதனால் விளைந்த விளைவு திருப்திகரமாக இல்லை.

தீர யோசித்து முடிவு செய்யும் சக்தியும் ஆய்ந்துணரும் திறனும் வளர வளர அவர்களுக்கு 'இதென்ன, நாம் இப்படிப் பிற்போக்கான ஒரு சூழ்நிலையில் இருக்கிறோமே!' என்பது புரிந்தது. அந்த எண்ணமே அவர்களை வாட்டி எடுக்கத் தொடங்கியது. உடனே, ''வெளிநாட்டுக்குப் போய்க் குடியேறிவிட வேண்டும்; இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தது போதும்'' என்று அவர்களுக்குப் பட்டுவிட்டது.

இப்படி ஓர் அதிருப்தியையும் கவலையையும் மூட்டியதால், மக்கள் வெளிநாட்டுக்குப் போய்க் குடியேறுவதை நாங்கள் ஊக்கிவிடும் நிலையே ஏற்பட்டுவிட்டது. தம் சொந்த நாட்டில் தாங்கள் எதிர்பார்க்கும் ஒன்று கிட்டவில்லை என்றால் மக்கள் இப்படிச் செய்வது நியாயந்தானே? இதனால் எங்கள் கேந்திரம் ஏதோ ரெயில் நிலையம்போல் ஆகிவிட்டது; அங்கிருந்து ஒவ்வொருவராக வெளியேறிக் கிளம்பத் தயாராகிற மாதிரி ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது.

இதைக் கண்டதும் நாங்கள் உடனடியாக எங்கள் நிலையத்தின் நோக்கங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறித்து மறுபரிசீலனை செய்தோம். என்ன செய்தால் இந்தச் சமூக—பொரு

(தொடர்ச்சி 33ம் பக்கம்)

# ஈரானிய இளவரசி அஷ்ராஃபுடன் ஒரு பேச்சு

**ஈரான் மன்னருடைய சகோதரியான இளவரசி அஷ்ரா:ப், எழுத்தறிவின்மைப் பிரச்னைகள் குறித்து யுனெஸ்கோ கூரியருக்கு ஒரு விசேஷப் பேட்டியளித்தார், எழுத்தறிவு இயக்கத்துக்கான யுனெஸ்கோவின் சர்வதேச ஆலோசனை-இணைப்புக் குழுவின் தலைவரான இளவரசி அஷ்ரா:ப் தன் நாட்டிலும் உலகின் வேறு பகுதிகளிலும் எழுத்தறிவின்மையைப் போக்கும் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளார்.**



Photo Unesco - Dominique Roger

இளவரசி அஷ்ராஃப் பஹ்லாவி (இடது) 1967 ஆண்டுக்கான மகமத் ரேஸா பஹ்லாவி பரிசை டான்ஸேனியப் பள்ளி மாணவியான ரோஸ் ஓமரிக்கு வழங்குகிறார். எழுத்தறிவூட்டும் துறையில் குறிப்பிடத்தக்க பணி புரிந்துள்ளவர்களுக்கு வழங்கப்படுவது இது. டபோரா பெண்கள் உயர் பள்ளி மாணவிகளுக்கு பாரிசிலுள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் பரிசு வழங்கப்பட்டது. இவர்கள் 400 முதியோர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தந்தனர்.



Photo Unesco - Dominique Roger

ஈரானின் அறிவுப் படை இப்போது உலகப் புகழ் பெற்றுவிட்டது. கிராமங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் இளம் போர் வீரர்களைக் கொண்ட படை இது. குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் பாரசீக மொழியைப் படிக்கவும் எழுதவும் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளவும் கற்றுத்தர ராணுவத்தில் புதிதாக சேருபவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். முதியோர்க்கான வகுப்பு முடியப்போகும் தருணத்தில் ஒரு சிறுவன் தன் வகுப்புக்கு நுழைவதைப் படம் காட்டுகிறது.

**கேள்வி: இளவரசியவர்களே, உலக எழுத்தறிவு இயக்கத்தில் நெடுநாட்களாகத் தாங்கள் முக்கிய சேவை செய்து வருகிறீர்கள். இதில் தாங்கள் ஈடுபட நேர்ந்தது எப்படி?**

பதில்: அது 25 ஆண்டுகளுக்கு முந்திய நிகழ்ச்சி. ஈரானின் சமூக, சுகாதாரப் பிரச்னைகளைப்பற்றி அறிய ஆவல் உண்டாயிற்று. அப்போது எழுத்தறிவின்மை இங்கு எல்லையற்று இருந்ததை அறிந்து கொண்டேன். இதற்காக அவ்வப்போது பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. சுமார் 9 ஆண்டுகளுக்குமுன் எழுத்தறிவு இயக்கம் பெரிய அளவில் உருவெடுக்கத் தொடங்கியது. 1965ல், எழுத்தறிவின்மையைப் பரிசீலனை செய்ய டெஹ்ரானில் மாநாடு கூடிற்றல்லவா? அதற்கு 4 ஆண்டுகளுக்கு முன் எங்களுடைய திட்டம் ஆரம்பமாயிற்று.

அம்மாநாட்டுக்குப் பிறகு எழுத்தறிவு இயக்கம் எங்கள் முக்கிய லட்சியங்களில் ஒன்றாயிற்று. இதற்காக தேசீயக் கமிட்டியொன்று நிறுவப்பட்டது. அரசி தலைவி, நான் உபதலைவி, இங்குள்ள பல பெரியோர் உறுப்பினராயிருக்கின்றனர். இத்துறையில் இதுவரை செய்துள்ளதை துவக்க வேலையாகவே கருதவேண்டும். எனவே எந்த அளவுக்கு எங்கள் நோக்கம் வெற்றி பெற்றிருக்கிறது என்று இப்போது கணக்கிடுவதற்கில்லை. ஈரான் பெரியநாடு. பலவித பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டது. இவற்றை மாற்றுவது சுலபமல்ல. ஏழ்மையும், பின்தங்கிய நிலையுமுள்ள பகுதிகளில் எழுத்தறிவிப்பது கஷ்டமாக இருக்கிறது. வயது வந்தவர்கள்—குறிப்பாக, பெண்கள்—பள்ளிகளுக்குப் போக விரும்புவதில்லை.

# கற்கும் இடத்துக்கருகில் கட்டப்படும் அணை



Photo KWPA, Iran

7000 ஆண்டுகளுக்கு முன்பு சிறப்புடன் திகழ்ந்த சூஸாவின் இடிபாடுகள் மேற்கு ஈரானிலுள்ள தேஸ் நதி அருகே உள்ளன. புராதன ஏலாம் பேரரசின் புகழை அதன் அரண்மனைகளும் நினைவுச் சின்னங்களும் நினைவுபடுத்துகின்றன. உலகின் மிகப் பழைய நகரங்களில் ஒன்றான சூஸா பல சந்தர்ப்பங்களில் அழிவுக்குள்ளாகியது. முதலாம் டரயசும் அர்டாக்ஸ்ஸெர்ஸஸும் மாபெரும் அரண்மனைகளை அங்கு எழுப்பி மகத்தான கலைப் படைப்புகளால் அழகு செய்தனர். டரயஸ் மன்னருடைய தர்பா மண்டபம் இரண்டரை ஏக்கர் பரப்புள்ளது. காலப் போக்கில் நகரைச் சுற்றியிருந்த வளமான நிலங்கள் வறண்டு போயின. தேஸ் நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள 650 அடி உயர அணையினால் நீர் வளம் பெற்று இன்று அப் பகுதியில் ஆண்டுக்கு ஏழு போகம் மணப் புல் வகை பயிரிடப்படுகிறது. உலக பாங்க் நிதியிலிருந்து கட்டப்படும் இந்த அணை ஸ்தல மக்களுக்கு எழுத்தறிவூட்டும் இயக்கத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரும் பொருளாதார திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

போகும்படி செய்வது கடினமான வேலை. ஆயினும் இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகளுக்குள் ஈரானில் எழுத்தறிவின்மை பிரச்னை தீர்ந்துவிடும். ஆனால் அது உலகத்தில் எங்கிருந்தாலும் சரி, அதை ஒழிக்கும்வரை போராட்டம் நடந்தே தீரும்.

**கேள்வி : உங்கள் நாட்டு 'அறிவுப் படை' நல்ல வேலை செய்திருக்கிறதென்று உலகம் போற்றுகிறதே!**

**பதில்:** உண்மைதான். செய்திருக்கிறது, செய்தும் வருகிறது. ஆனால் எங்களுடைய பிரச்னைகள் எல்லாம் இன்னும் தீரவில்லை. ஈரானில் 6 முதல் 12 வரை வயதுள்ள எல்லாக் குழந்தைகளும் பள்ளிகளுக்குச் சென்றாலொழிய, எழுத்தறிவிப்பு ஒரு பிரச்னையாகவே இருக்கும். அதை அடிப்படையாகத் தீர்க்க அவர்களை பள்ளிகளுக்கு அனுப்புவது ஒன்றே வழி.

வருமானத்தில் 30 முதல் 35 சதவிகிதம் வரை ஈரான் கல்விக்காக செலவிட்டு வருகிறது. இன்னும் 5 ஆண்டுகளில் பெரிய ஊர்களிலுள்ள குழந்தைகளில் 99% பள்ளிகளுக்குச் செல்வார்களாயினும் கிராமங்களில் 50%மட்டுமே போவார்கள். இப்போது ஏழு அல்லது எட்டு வயதுச் சிறுவர், சிறுமியர் நாளைக்கு எழுத்தறிவற்றவர்களாகவே இருப்பார்கள். இதற்காக எங்கள் கல்வி முறையை அடியோடு மாற்றியமைக்கத் தீர்மானித்திருக்கிறோம். பள்ளிகளையே எட்டிப்பார்க்காத 14 அல்லது 15 வயதுள்ளவர்களின் கல்விபற்றியும் எங்கள் கமிட்டி ஆலோசித்து வருகிறது.

**கேள்வி : தொழிலுக்கு ஏற்ற எழுத்தறிவு புகட்டும் திட்டத்தை உருவாக்குவதில் ஈரான் முக்கிய பங்கெடுத்துக் கொண்டது அல்லவா?**

**பதில்:** எழுத்தறிவு இருந்தால் நாடு முன்னேறிவிடுமென்று, மற்றவர்களைப் போல், ஈரானும் முதலில் நினைத்தது. அது அவ்வளவு சுலபமாக நடக்கவில்லை. ''எழுத்தறிவு எதற்காக?'' என்ற பிரச்னை எழுந்தது. ஒரு உதாரணம் கூறுகிறேன். மிக்க ஏழ்மை நிலையிலுள்ள ஒரு பகுதிக்கு எழுத்தறிவுத் திட்டம் வகுப்பதற்கு, கல்வியாளர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அப்பகுதியிலுள்ள பெண்களில் 97%க்கு எழுத்தறிவு இல்லை.

நேரில் பார்த்துக் கல்வித்திட்டம் வகுக்கச் சென்ற நாங்கள், அப் பகுதியைப் பரிசிலனை செய்துவிட்டு, எங்களிடமிருந்த பணத்தை அணைகட்டவும், சாலை அமைக்கவும் உபயோகிப்பதென்று முடிவு செய்தோம். பிறகே எழுத்தறிவு முயற்சி பலனளிக்குமென்று தெரிந்தது. அங்கு கூடாரங்களில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடம் எழுதப்படிக்கக்கற்குமாறு கூறியவுடன், நாங்கள் பைத்தியக்காரர்கள் என்று அவர்கள் நினைத்தனர். உணவோ, குடிதண்ணீரோ, குழந்தைகளுக்கு மருந்தோ இல்லை என்பதை எடுத்துரைத்தனர். எழுத்தறிவையும் பொருளாதார வளர்ச்சியையும் இணைத்தே வேலை செய்யவேண்டுமென்று தெரிந்தது.

**கேள்வி : ஈரானியப் பெண்கள் யூனியன் தலைவி என்ற முறையில், உங்கள் நாட்டுப் பெண்களுக்குப் பயிற்சியளிப்பது அதிகக் கஷ்டமாக இருக்கிறதென்று நினைக்கிறீர்களா? கல்வியிலும், புதிய வழிகளைத் தெரிந்து கொள்வதிலும் அவர்களுக்கு அக்கறை இருக்கிறதா?**

**பதில் :** பெண்கள் புதிய முறைகளை ஏற்பதில் கஷ்டமொன்றுமில்லை. சமீப காலம் வரை அவர்கள் விடுதலையடையவில்லை. கடந்த 40 ஆண்டுகளாகத்தான் அவர்கள் பள்ளிகளுக்கும், சர்வகலாசாலைகளுக்கும் போய் வருகிறார்கள். இன்றும் ஆண்களுடன் ஒப்பிட்டால் பெண்களுடைய நிலை மோசமாயிருக்கிறது. குறிப்பாக, கிராமங்களில் பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். ஆண்கள் ஆசிரியர்களாக இருந்தால், அவ்வகுப்புகளுக்குப் பெண்கள் இன்னும் போகமுடியாது.

ஆயினும் ஈரானியப் பெண்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. கல்வி கற்பதில் பாவம் எதுவுமில்லை என்பதை தந்தைக்கோ, கணவனுக்கோ எடுத்துரைத்து, அவர்களுடைய மனதை மாற்றும் திறமை அவர்களுக்கு உண்டு. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று குர்ஆன் கூறுகிறது. மக்கள் மனதிலுள்ள விருப்பு, வெறுப்புகளால் அந்நூலை எழுதிய தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக்கூட மக்கள் கடைப்பிடிக்கவில்லை. 'படி' என்ற ஒரு வார்த்தையுடன் அவர் தமது லட்சியத்தைத் தொடங்கினாரென்பது எங்கள் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆமாம். பெண்கள்தான் எங்கள் நாட்டின் மிகப்பெரிய சொத்து. தாங்களும் குழந்தைகளும் கற்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். எழுத்தறிவு இயக்கத்தின் நன்மை அவர்களுக்கு விளங்குகிறது. படித்த பெண்கள் இவ்வியக்கத்தை மிகவும் ஆதரிக்கிறார்கள் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. மற்ற பல நாடுகளில் உள்ளதைப்போல் ஈரானிலும் படித்த பெண்களில் 75 % பள்ளி ஆசிரியைத் தொழிலை மேற்கொள்ளுகின்றனர்.

**கேள்வி : ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எழுத்தறிவு எப்படி உதவுகிறது?**

**பதில் :** நாட்டின் முன்னேற்றம் என்ற லட்சியத்தை அடைய உதவும் ஏணியே எழுத்தறிவு. மக்களுடைய வளர்ச்சிக்குப் பயன்படவில்லையென்றால், பிறகு எழுத்தறிவு எதற்கு? அது மக்கள் நன்றாக வேலை செய்யவும், நல்வாழ்வு வாழவும் உதவவேண்டும். ஒருவர் சிறிது கல்வி கற்றாலும் போதும், அவருடைய வாழ்க்கையில் மாறுதல் உண்டாகிறது. தற்கால உலகத்துக்குப் பொருந்தாத வாழ்க்கையிலிருந்து மக்களும், சமுதாயமும் மாறவேண்டுமென்று எழுத்தறிவு இயக்கம் தூண்டுகிறது.

தமிழில்: பி. வி. சுப்பிரமணியன்

## பாதசாரிகளுக்கு கம்பள விரிப்பு

**பாரசிகம் என்றதும் அதன் புகழ் பெற்ற கம்பளங்கள் தான் யாருடைய நினைவுக்கும் வரும். பல நூற்றாண்டுகளாகத் தம் கைத்திறனைப் போற்றி வரும் அருமையான தொழிலாளர்கள் அவர்கள். கம்பளம் நன்கு அழுத்தப் படும்போதே அதன் தரம் உயர்கிறது. புதிதாக நெய்யப்பட்ட கம்பளங்கள் வீதிகளில் விரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு தெரியாதவர்கள் வியப்படையலாம். ஆனால் பலரும் நடந்து மிதித்து அழுத்தப்படுவதால் அதன் தரம் உயர்கிறது. (கீழேயுள்ள படம்) வலது : இஸ்பஹானிலுள்ள ஒரு நெசவாளிப் பெண். இங்கு நெசவுத் தொழிலிலுள்ள 26000 பேருக்கு யுனெஸ்கோ பரிட்சார்த்த எழுத்தறிவியக்கத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.**



Photos © Atlas Photo - C. Lénars



**நமது வழக்கமான மனப்போக்குகளை மாற்றிக் கொண்டு எழுத்தறிவின்மையைப் போக்குவதை, அதனை ஒரு லட்சியமாக மட்டும் கருதுவதுடன் நின்று விடாமல் உடனடியாக, எப்பாடுபட்டேனும் அடைய வேண்டிய ஒன்றாக எண்ணினால்தான் எழுத்தறிவின்மையை முழுவதுமாகப் போக்க முடியும். அது தான் நமக்குள்ள உண்மை பூர்வமான நம்பிக்கையாகும்.**

—சார்லஸ் ஜெ:ப்ரிஸ்

**சர். சார்லஸ் ஜெ:ப்ரிஸ் அண்மையில் எழுதியுள்ள "எழுத்தறிவின்மை ஓர் உலகப் பிரச்னை" என்ற நூலின் (பால்மால் பிரஸ், லண்டன், :பிரடரிக் ஏ. பிரேகர், நியூயார்க், 1967) இறுதி அத்தியாயத்தை இங்கு பிரசுரித்துள்ளோம். யுனெஸ்கோ இப்போது செய்து வருவதைவிட விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சர். சார்லஸ் கூறுகிறார். முக்கிய உலகிப் பிரமுகரான இவருடைய கருத்துக்கள் இன்று உலகில் பெருகிவரும் எழுத்தறிவற்றவர்களால் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையை உலகக் கருத்துக்கு உட்படுத்த உதவும் என்று 'யுனெஸ்கோ கூரியர்' கருதுகிறது.**

காப்பிரைட் © பால்மால் பிரஸ், யாரும் எடுத்தாளக் கூடாது

எழுத்தறிவின்மையை எதிர்த்துப் போரிடுவதற்கு பல ஸ்தாபனங்கள் தம்மைப் பணித்துக் கொண்டுள்ளன. அவற்றின் செய்திக் கடிதங்களும் அரசாங்க அறிக்கைகளும் சுவையானவை. நோக்கம் ஒன்றே; அதை அடைவதற்கு உலகின் பல பாகங்களில் நடைபெறும் முயற்சிகளும், சாதனைகளும் வியப்பூட்டுபவை; பரபரப்பை விளைவிக்கக் கூடியவை. இவையனைத்தையும் தொகுத்துக் கொடுக்க பல புத்தகங்கள் தேவைப்படும். இங்குமங்கும் சில உதாரணங்களையே நான் தருகிறேன். வடகிழக்கு பிரேஜிலில் எழுத்தறிவு இல்லாதவர்கள் 75 சதவிகிதத்தினர். அங்கு கையாளப்படும்முறை ஏ. பி. ஸி. இயக்கம் என்பது. அமெரிக்காவிலுள்ள பிரஸ்பிடிரியன் திருச்சபையின் ஆதரவுடன் அது பணியாற்றுகிறது. 1970ம் ஆண்டுக்குள் 10 லட்சம் முதியோர் எழுத்தறிவு உள்ளவர்களாக மாறவேண்டுமென்பது அதன் திட்டம். ஜாம்பியாவில் சமுதாய நல வளர்ச்சி அமைச்சகம் அதே மாதிரி ஒரு இலக்கை வைத்துக் கொண்டு பாடுபடுகிறது. பொலிவியாவில் ஆதாரப்பள்ளிகள் என்கிற கிராமியப் பாடசாலைகள் இருக்கின்றன. எழுத்தறிவின்மைக்கு எதிரான தீவிர இயக்கம் அங்கு நடைபெறுகிறது. இந்தியாவின் தலைநகராகிய டெல்லியில் எழுத்தறிவு இல்லாதவர்கள் இரண்டரை லட்சம் பேர். நகரில் முதியோர் கல்வி போர்டு பல மாலை வகுப்புகளை நடத்தி ஆயிரக் கணக்கான பேருக்கு எழுத்தறிவை வழங்குகிறது. இந்தியாவின் பிற பெரு நகரங்களிலும் இதேமாதிரி பணிகளைக் காணலாம். அமைதியான இந்தப் போராட்டத்தில் ஈரானில் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். கினியாவிலும், ஐவரி கோஸ்டிலும் டெலிவிஷனை இதற்காகப் பயன்படுத்துகிறார்கள். காமெரூன் நாட்டில் பகலில் குழந்தைகள் படிக்கிறார்கள். பள்ளி நேரத்துக்குப் பிறகு அவர்களது தாய்மார்கள் அங்கு கல்வி பயில்கிறார்கள். பல ஆயிரம் ஆசிரியர்கள் இதற்காக உழைக்கின்றனர். எல்லா இடங்களிலும் அரசாங்கங்கள், முனிஸிபாலிடிகள், சமூக சேவை ஸ்தாபனங்கள்,

---

**சர் சார்லஸ் ஜெ:ப்ரிஸ்:** பிரிட்டிஷ் சர்க்காரில் சிறப்பான பணியாற்றியவர். லண்டன் ரான்பர்லி லைப்ரரி சர்வீஸ் செயலாளராக இப்போது இருக்கிறார். போதுமான புத்தகங்கள் இல்லாததால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு இது நூல்களை இலவசமாக வழங்குகிறது. வேறு பல நூல்களையும் அவர் எழுதியிருக்கிறார்.



Photo Unesco - J.-C. Bois

**மின்சாரக் கம்பம் ஒன்றின் உச்சியில் இருந்துகொண்டு ஒரு மாலி தொழில் நுணுக்க அறிஞர் எழுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மேற்காப்பிரிக்கப் பகுதியில் மின்சாரப் பொறியியலார் பயன்படுத்தும் பம்பாரா மற்றும் பிரெஞ்சு சொற்களை விவரிக்கிருர். இப்போது மாலியில் நடைபெறும் எழுத்தறிவு இயக்கத்தில் இச் சொற்கள் கற்றுத் தரப்படுகின்றன. சர்க்காரில் பணியாற்றும் 6000 பேருக்கும் அரிசி, பருத்தி விவசாயத்திலுள்ள 100,000 பேருக்கும் கல்வி புகட்டும் திட்டம் இது**

தொழில் முறையினர்; பொழுது போக்காகச் சொல்லித் தருபவர்கள் போன்ற பல வகையினர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆயிரக் கணக்கில் ஆண்டுதோறும் மக்கள் படிக்கத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள். அரசாங்கப் புள்ளி விவரங்களைப் பார்ப்போம். 1962ல் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்ட முதியோரின் எண்ணிக்கை எதியோப்பியாவில் 1,91,273. மலாயாவில் 4,000, ரொடீசியாவில் 18,783. 1963ல் ஈரானில் கல்வியறிவு பெற்ற முதியோர் 4 லட்சம் பேர். மெக்ஸிகோவில், 1,16,000.

பல்வேறு அறிக்கைகளைப் படித்து உண்மையான சாதனைகளைத் தெரிந்து கொள்கையில் இவ்வளவு பேருக்கு நன்மை செய்கிறேம் என்ற தெம்பு ஏற்படுகிறது. பணியோ பிரமாதமானது. எனினும் கவிஞர் க்ளோவினின் ஒரு பாடலைப் பார்த்து நிம்மதியடையலாம்.

'ஓயாது கரையைத்தாக்கி அலுத்துப் போகின்றன அலைகள். ஒரு அங்குலமும் அவற்றினுல் ஏற்றம் காண முடியவில்லை. தொலை தூரத்தில் கழிமுகங்களில் அவை சந்தடியின்றி புகுந்து வெள்ளக்காடாக்குகின்றன. ஆசை மிகுதியாகத்தான் இருக்கிறது. ஆனுல் அது மட்டும் போதாது.' நான் இந்நூலை எழுதிக் கொண்டிருக்கையிலேயே உலக மக்களின் ஜனத்தொகை பிரிட்டிஷ் தீவின் ஜனத் தொகை அளவில் பெருகி விட்டது. 1961 முதல் 1966 வரையிலுள்ள 6 ஆண்டுகளில் எழுத்தறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கை உலகில் 20 கோடி அளவில் அதிகரித்துள்ளது. இந்த 6 ஆண்டுகளில் மக்களுக்கு வேண்டிய உணவு உற்பத்தியை உயர்த்துவதற்கான தகுதி எந்த அளவு கூடுதலாகியுள்ளதோ தெரியாது. நூறுகோடி மக்கள் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்களாக இருப்பது இதைப் பெரிதும் தடைப்படுத்துகிறதென்பது உறுதி.

எல்லோருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி கிடைப்பதன் விளைவாக எழுத்தறிவின்மைப் பிரச்சினை ஒன்று இரண்டு தலைமுறைகளில் தீர்ந்து விடலாமென்று இதுவரை பலர் நினைத்திருந்தனர். வளர்ச்சி கண்ட நாடுகளில் இம்மாதிரிதான் நிகழ்ந்திருக்கிறது.

''எழுத்தறிவின்மையுடன் இணைந்த பல்வேறு கலாச்சார, சமூக, பொருளாதார அம்சங்கள் இருக்கின்றன. இவற்றில் மிக முக்கியமானது ஆரம்ப பாடசாலைகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் போதனை. எந்த நாட்டிலும் பள்ளி வயதினரான குழந்தைகள் எல்

# 'நடக்க, பேச, உழ, சைக்கிள்விட, நீந்தக் கற்பது போல'

லோரும் போதிய காலம் படிப்பார்களாயின் இறுதியாக எழுத்தறிவில்லாத முதியோர்களே சமூகத்தில் இருக்க மாட்டார்கள். மனநிலைக் கோளாறு இருப்பவர்களும், எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்வதற்கு தகுதியில்லாதவர்களும் தான் படிப்பின்றியிருப்பர். எனவே எழுத்தறிவின்மையைத் தவிர்ப்பதற்கு மிகச் சிறந்த வழி எல்லா குழந்தைகளுக்கும் போதிய கல்வியறிவு கிடைக்கச் செய்வது தான்.'' 1957ல் வெளியான ஓர் அறிக்கையில் இது கூறப்பட்டது. 1964ல் காமன்வெல்த் கல்வி மகாநாடு நடைபெற்றது. அதன் கமிட்டி ஒன்று கூறியது: ''எழுத்தறிவின்மையை அடியோடு அகற்றுவதற்கான பிரதான நீண்ட கால முயற்சி, நடைபெற வேண்டிய இடம்பற்றித் தான் என்பது வெளிப்படை.''

வெளிப்படை என்ற சொல் அடிக்கடி வருகிறது. எனவே பொருள் படைத்ததாகிறது. ''வெளிப்படையின் பல தோற்றுவாய்கள்'' என்ற பகுதியில் பசப்பல் வார்த்தைகளை ''பஞ்ச்' பத்திரிகை நையாண்டி செய்ததுண்டு. இந்த அறிக்கைகளையெல்லாம் கேலி செய்ய நான் விரும்பவில்லை. இவை வெளிப்படையாகவே உண்மையாகவே இருக்கலாம். ஆனால் அவை அடிப்படையாகவே தெளிவாகிவிட்டது. ஐ.நா. புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு ஒரு வெளியீடு 1964 செப்டம்பர் 26ம் தேதி பிரசுரமாயிற்று. அதன்படி உலகில் பள்ளி வயதினரான குழந்தைகள் 37.3 கோடி. ஆனால் அவர்களில் 11.5 கோடி தான் 30 சதவிகிதத்தினர்தான் பள்ளிகளில் பயில்கின்றனர். அப்படி படிக்கிறவர்களிலும் மிகப் பெரும்பாலோர் தமது ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்ய மாட்டார்கள். எனவே அவர்கள் மீண்டும் எழுத்தறிவின்மையில் ஆழ்ந்து விடுவார்கள்.

கூடிய வரை முன்னேறிய நாடு என்று கருதப்படும் பிரேஜில் கூட ஆரம்பக் கல்வியில் ஈடுபடுகின்ற காலம் சராசரி இரண்டரை ஆண்டுகள்தான். இந்தியாவில் உள்ள பள்ளிக் குழந்தைளின் எண்ணிக்கை 550 லட்சம். அவர்களில் 400 லட்சம் ஆரம்பப் பள்ளிகளில் இருப்பவர்கள். 1325 லட்சம் பேர் முறைப்படி கல்வி பெருதவர்கள். இந்தியாவின் ஜனத்தொகை ஆண்டுக்கு 120 லட்சம் வீதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆசியா, ஆப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆகியவற்றின் விரிவான பகுதிகளில் இதே நிலைமைதான் இருந்து வருகிறது. உலகில் பிறக்கும் மொத்தக் குழந்தைகளில் 85 சதவிகிதத்தினர் வளர்ச்சி கண்டுவரும் பிரதேசங்கள் எனக் கருதப் படுபவைகளில் பிறக்கின்றவை. இந்த நாடுகள் பலவற்றில் மொத்த ஜனத்தொகையில் 21 வயதிற்குட்பட்டவர்கள் பாதிப்பேர்.

இவை தவிர்க்க முடியாத பச்சை உண்மைகள். எனவே சாதாரணக் கல்விக்கான வாய்ப்பை விரிவாக்குவதன் மூலம் எழுத்தறிவின்மையை ஒழித்து விட முடியும் என்று நினைப்பது நெருப்புக் கோழியின் அசட்டு நிம்மதியைப் போன்றது. வளர்ச்சி கண்ட நாடுகளின் பட்ஜெட்டுக்களில் 10 முதல் 15 சதம் வரை கல்விக்கு ஒதுக்கப் படுகிறது. வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தேசங்களில் இந்த விகிதாசாரம் சராசரி 15 முதல் 20 சதம் வரை இருக்கும். ஜனத்தொகை அதிகரிக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும் கூட உலகில் எல்லா குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி வசதியை உடனே அளிப்பதாயின் கல்வி பட்ஜெட்டுக்களை உடனடியாக இருமடங்கு அல்லது மும்மடங்கு பெருக்க வேண்டியிருக்கும். இது அனுபவ சாத்யம் அல்ல என்பது தெளிவு. இதில் இருக்கும் பிரச்னை பணக்கஷ்டம் மட்டுமே என்று கருதலாகாது. பள்ளிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். போதிய சிப்பந்திகளைத் திரட்ட வேண்டும். தற்காலிக ஏற்பாடாக கட்டிடத்தில் வேண்டுமானாலும் சொல்லித் தரலாம். ஆனால் ஆசிரியர்களை அம்மாதிரி தயாரித்து விட முடியாது. ஆசிரியப் பணிக்கு வேண்டிய தகுதியுள்ளோர் வளர்ச்சிப் பணி நாடுகளில் குறைவாகவே இருப்பர். வேலை சுலபமாகவும் ஊதியம் அதிகமாகவும் உள்ள சில துறைகளில் அவர்களுக்கு நிறைய கிராக்கி யிருக்கும். மேலும் ஆசிரியர்களாக வர விரும்புவோருக்குப் பயிற்சி தரவேண்டும். பயிற்சிப் பள்ளிகளை ஏற்பாடு செய்யவேண்டும். பயிற்சிக்கும் அவகாசம் ஆகும். இவற்றையெல்லாம் செய்வதற்குக் காலமாகும். இதற்கிடையே குழந்தைகள் அதிகமாகப் பிறந்து கொண்டுதான் இருக்கும். சிசுமரண விகிதம் குறைந்து கொண்டுதான் இருக்கும். தவிர பள்ளியில் பயிலும் குழந்தைகளில் கணிசமான பேர் நிலையான நன்மை அடையமாட்டார்கள். விரைவில் எழுத்தறிவில்லாத முதியோருடன் அவர்களும் சேர்ந்து விடுவர்.

இந்தப் போராட்டம் தோற்றுவிடும் போலவே தோன்றுகிறது. உலகில் எழுத்தறிவில்லாதவர்கள் இப்போது 100 கோடி பேர். இந்த நூற்றுண்டில் எஞ்சியிருக்கும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொண்டால் அதுவே பெரிய அதிருஷ்டம் என்று சொல்லலாம். ஜனத்தொகையில் எழுத்தறிவில்லாதவர்களின் விகிதாசாரம் குறையச்செய்தும் கூட இந்த விபரீதம் நிகழலாம். ஆனால் இந்தப் போரில் தோல்வி நிச்சயம் என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமா? இல்லை. நிலைமை மிஞ்சுவதற்கு முன் வழிமுறைகளையும் உபாயங்களையும் மாற்றிக்கொள்ள முடியுமானால் வெற்றி காணலாம். ஆனால் இம்மாதிரி மாற்றிக் கொள்வது மிகப்பெரிய விஷயம். எழுத்தறிவின்மையை ஒழித்துக் கட்டுவதற்கு ரஷ்யாவில் 20 ஆண்டு முதல் 40 ஆண்டு வரை ஆயிற்று. பிலிப்பைன்ஸ் நாட்டில் எழுத்தறிவு உள்ளவர்களின் விகிதாசாரம் 5 சதமாக இருந்ததை 75 சதமாக உயர்த்துவதற்கு 44 ஆண்டுகள் ஆயின. அதே நிலவரத்தில் அது நின்று விட்டது. எழுத்தறிவு பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை நாற்பது லட்சம் என்ற அளவில் அங்கு ஸ்திரப்பட்டுவிட்டது. எனவே பிலிப்பைன்ஸ் எழுத்தறிவில்லாத பகுதி என்ற ஜாபிதாவில் இடம் பெற வேண்டி நேரிட்டது.

தன்பாட்டில் எழுத்தறிவின்மை இருந்து போகட்டுமே; நாற்பது வருஷமானல் என்ன. 20 வருஷமானல் என்ற வாளாவிருக்க உலகினல் இயலாது. இந்த நூலுக்குத் திரட்டிய தகவலை வைத்துக்கொண்டு பார்க்கையில் இப்பிரச்சினையைத் தீர்க்க அரைகுறை ஏற்பாடுகள் போதமாட்டா என்று நான் திடமாக நம்புகிறேன். முழுமூச்சுடன் பாடு பட்டால்தான் எல்லோரையும் நூறுக்குநூறு அல்லது ஏறக்குறைய அந்த அளவில் எழுத்தறிவுள்ளவர்களாக ஆக்க முடியும். எல்லா தேசங்களிலும் உடனடியாக இதைச் செய்து பார்ப்பது அவசியம்.

எந்த எழுத்தறிவிப்பு இயக்கமும் கொஞ்சம் பேருக்கோ அல்லது பல நபர்களுக்கோ நன்மை பயக்கிறது. எனவே அதனல் நன்மைதான் விளையும். ஆனல் ஜனத்தொகையில் ஒரு விகிதாசாரத்தினர் மட்டுமே அதன்மூலம் எழுத்தறிவு உள்ளவர்களாகிருர்கள் என்ருல் ஒரு கட்டத்தில் மேற்கொண்டு அபிவிருத்தி இல்லாது போகிறது. அல்லது மெத்தனம் காணப்படுகிறது. இந்தக் கட்டம் தேசத்துக்குத் தேசம் வேறுபாடுடையதாக இருக்கிறது. உதாரணமாக எழுத்தறிவுடைமை ஒருநாட்டில் 25 சதவிகிதம் என்று வைத்துக் கொள்வோம். எழுத்தறிவுஉள்ளவர்களின்விகிதாசாரம் அதே நிலையில் நின்று விட்டால் என்னவாகும்? (பல பகுதிகளில் எழுத்தறிவின்மை 45 சதவிகிதங்கூட இருந்து இருக்கிறது). அத்தகைய தேக்க நிலையில் முதல் தரத்தினர், இரண்டாம் தரத்தினர் என்று மக்கள் இரு சமுதாயங்களாகப் பிரிந்து உள்நாட்டு நிலவரம் பல தீமைகள் நிறைந்ததாகிவிடும். எழுத்தறிவின்மையே இல்லாத நாடுகளுடன் ஒப்புநோக்கிப் பார்க்கையில் வெளிநாட்டு உறவு முறைகளில் பிரதிகூலமே நிகழும். பதட்டம் மிகுந்த இன்றைய உலக நிலையில் இத்தகைய பிரிவினை எவ்வளவு அபாயகரமானது என்று கண்ணுக்கு மெய்யாக ருசுப்பிக்க வேண்டிய அவசியமில்லை.



ஆல்ஜீரியாவின் பெரு நகரங்களில் உள்ள சிறு வர்த்தகர்களும், கைத் தொழில் வினைஞர்களும் போதிய வருவாயின்றிக் கஷ்டப்படுகின்றனர் தொழில், விவசாய வளர்ச்சிக்கு ஆல்ஜீரியாவில் நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. தன் பொருளாதாரத்தை மேம்படுத்த உறுதியுடன் பாடுபடுகிறது. ஆனல் பரவலாக நிலவும் எழுத்தறிவின்மையால் அதன் முயற்சிகள் தடைப்படுகின்றன. யுனெஸ்கோ உதவியுடன் இரண்டு தொழில் பிரதேசங்களில் தொடங்கப்பட்டுள்ள எழுத்தறிவு இயக்கமும் ஆல்ஜீரியாவுக்கு அவசியமாகத் தேவைப்படும் கல்வி கற்ற மனித சக்தியை வழங்க உதவுகின்றன.

Photo Dominique Roger

எல்லாரும் எழுத்தறிவுள்ளவர்களாக இருந்தால் மட்டும் உலகம் இப்போது இருப்பதை விடச் சிறந்ததாகவும் வளமுடையதாகவும் அதிக சாந்தி உள்ளதாகவும் ஆகிவிடாது. இவை கைகூடுவது மக்களைப் பொருத்தது. எழுத்தறிவு என்பது ஒரு கருவி. மக்கள் அதை எப்படிப் பயன் படுத்துகிறார்கள் என்பதுதான் முக்கியம். ஆனல் எழுத்தறிவு இருப்பதன் விளைவாக மக்களுக்கு ஒரு வசதி வாய்ப்பு ஏற்படுகிறது. நமது உலகின் கொந்தளிப்புக்குப் புறம்பாக எளிய வாழ்க்கை மக்கள் நடத்தும்படி விட்டால் அவர்கள் அதிக சந்தோஷமுடையவர்களாக வாழ்வார்களா என்பது சர்ச்சைக்குரிய விஷயம். ஆனல் அது பயனற்ற சர்ச்சை. நாம் இன்று வாழும் உலகம் ஓர் ஐக்கிய உலகம். மக்கள் எல்லோரும் அதில் சேர விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் ஒன்று சேர்ந்து ஈடுகொடுக்க வேண்டியவர்கள். இந்த உண்மையை மதித்து உலகம் எவ்வாறு இருக்கிறதோ அதை ஒப்புக் கொண்டு காலம் தள்ள வேண்டியது தான். முழுமூச்சுடன் முயன்ருக வேண்டும் என்று ஒத்துக் கொள்ளும் பட்சத்தில் முதற்கண்ணுக எழுத்தறிவுக்கும் கல்விக்குமுள்ள உறவுமுறை தெளிவு படவேண்டும். எழுத்தறிவின்மையை ஒழிப்பது கல்விப் பிரச்சினை என்று கொள்வது கொள்கையளவில் சரியாக இருக்கலாம். ஆனல் நடைமுறையை நோக்குங்கால் மிகச் சிறந்தது என்று நாம் கருதுவதே நன்மையின் பகையாக மாறுகிறது.

எழுதவும் படிக்கவும் மக்களுக்குச் சொல்லித் தருவது கட்டும் கல்வியாகாது. கல்வியென்பதில் இன்னும் எவ்வளவோ அடங்கியிருக்கிறது. இது தான் இதில் உள்ள முழு விவகாரமும். இன்னும் செய்யவேண்டியிருப்பது எவ்வளவோ என்று சொல்லுகிறோமே அது தான் உலகின் சக்தியை மீறியதாக இருக்கிறது. ஒரு முதியவன் அல்லது குழந்தை எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்வது கல்வியாகாது. அது ஒரு தொழிலை திறனை சம்பாதிப்பதாகும். நடக்க, பேச, சமைக்க, விதை விதைக்க களை வெட்ட, சைக்கிள் விட, நீந்தப் பயில்வதைப் போன்றது அது. இவையெல்லாம் கல்வியென்று எவரும் நினைப்பதில்லை. மக்களாக வாழ்வதற்கு தேவைப்படுகின்ற திறன்கள் என்றே இவை மதிக்கப்படுகின்றன. குடும்பத்தினரும், அண்டை அயலாரும் இவற்றைப் போதிக்கின்றனர். இவற்றைக் கற்றறிந்தவர்கள் பிறருக்கும் போதிக்க இயலும். இதற்குக் கட்டுப்பாடான ஒரு அமைப்பு முறை தேவையில்லை.

எழுத்தறிவின்மைப் பிரச்சினையைப் பற்றிய இந்த கருத்தை ராஜீய வாதிகளும் திட்டப்பணியாளரும், நிர்வாகத்தினரும் ஒப்புக் கொள்வாராயின் தீர்வு காண்பதற்கு எளிமையான, முற்றிலும் புதிதான வழிமுறை கிடைக்கக்கூடும். கல்வித்திட்டங்கள் இயன்ற வேகத்தில் பெருகி வளரட்டும். அவற்றின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்க அறிவுள்ளவனெவனும் விரும்பமாட்டான். நாம் இங்கு அக்கறை கொள்வது இந்தக் கல்வித் திட்டங்களின் மூலம் நன்மையை அடைகின்றவர்களின் விஷயம் அல்ல. பள்ளிக்கே எக்காலத்திலும் போக் மாட்டார்கள் என்ற நிலையிலுள்ள கோடிக் கணக்கான குழந்தைகளையும், பள்ளிக்கே ஒருகாலும் போவதற்கான வாய்ப்பு பெற்றதில்லை என்ற கோடிக் கணக்கான முதியவர்களையும் மட்டும் கருத்தில் கொண்டு நாம் உழைக்க வேண்டும். கல்வித் துறையினருக்கும் அவர்களுடைய பணிக்கும் நான் முதன்மையாக மதிப்புத் தருகிறவன். ஆனல் எழுத்தறிவின்மைப் பிரச்னை கல்வி இலாகாவின் வேலையில் ஒரு பகுதி என்ற எண்ணம் தான் உண்மையில் பிரச்சினையை மூடி மறைக்கிறது. எழுத்தறிவின்மையை அகற்றி விடுவது மட்டுமே ஒரு தனி இலக்காக இருக்க முடியாது. குழந்தைக் கல்வி முதியோர் கல்வி ஆகியவற்றுக்கான வேலைத் திட்டங்களுடன் அது பிணைக்கப்படுவது அவசியம் என்று உலகக் கல்வி மந்திரிகளின் காங்கிரஸ் 1965ல் டெஹ்ரானில் கூடியபோது தெரிவிக்கப்பட்டது. மற்ற அரசாங்க அமைப்புக்களும் அதே கருத்துக்களைக் தெரிவித்துள்ளன.

அந்த காங்கிரஸில் வேறு விதமாக முடிவு எடுப்பார்கள் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. ஆனல் இன்றைய உலகின் பிரத்தியட்ச நிலைமையில் இது அடிப்படையான தவறு. வழிவழியாக வந்த மனப்பான்மை மாற வேண்டும். எழுத்தறிவின்மையை அகற்றுவதே தனி நோக்கமாகக் கருதப்படவேண்டும். அப்பொழுதுதான் உண்மையில் இதைச் செய்து முடிப்போம் என நம்பிக்கை கொள்ள இயலும்.

# ‘உலகம் தன் மக்கள் கல்வியறிவு பெற வேண்டுமென்று விரும்பினால் அதனை அடைய முடியும்’

கல்வித் திட்டத்தை அவசியமுள்ள அளவுக்கு விரிவு படுத்துவதில் வெற்றி காணும் நம்பிக்கை இதையே பொறுத்துள்ளது. கல்வித்துறையில் இப்போது செலவாகும் பணத்தில் பெருமளவு வீணாகிறது. அதையும் இதன் மூலம் தவிர்க்கலாம்.

ஒரு சமுதாயத்தில் எல்லோரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் வளமான கல்விமுறை அமுலானாலும் சரி இல்லாவிட்டாலும் சரி இன்றைய உலகச் சூழ்நிலையில் தலை நிமிர்ந்து நின்று தன் நிலைமையை மேலும் சீர்திருத்திக் கொள்வதற்கான வாய்ப்புக் கொஞ்சம் பேரே எழுதப் படிக்கத் தெரிந்த சமுதாயத்தை விட படித்தோர் அதிகமுள்ள சமுதாயத்தில் மிகச் சிறந்ததாக இருக்கும். எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அவசியமான பிரசுரங்களைப் படித்து தமது கல்வியறிவை வளர்த்துக் கொள்ளலாம். எழுத்தறிவு தருகின்ற வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு நன்மையடைய எல்லோராலும் முடியாது. ஆனால் பலர் நன்மையடைவர். முதியோர் விஷயத்திலும் சிறியோர் விஷயத்திலும் இது ஒருங்கே பொருந்தும். எழுத்தறிவில்லாத சூழ்நிலைக்குத் திரும்பும் குழந்தைகளின் கதி தொடர்ந்து பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஏற்படாது. எனவே எழுத்தறிவின்மையை அகற்றுவதன் மூலம் சுபிட்சம் முழு அளவில் விருத்தியடையும். முறைப்படியான கல்விக்குச் செலவிட அதிக ரொக்க வசதி கிடைக்கும். கல்வியறிவுள்ள சமுதாயம் என்ற லட்சிய நிலையை நோக்கிய முன்னேற்றம் துரிதப்படும். எனவே குழந்தைகள் பள்ளிக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி அவர்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தரவேண்டும். பேசவும் நடக்கவும் பழகுவது போல இவற்றை அவை பயில வேண்டும். முழு மூச்சுடன் இதில் ஈடுபடுவதற்கு சமூகம் தன்னைப் பழகிக் கொள்ள வேண்டும். எழுத்தறிவு பெறும் முதியோர் தங்கள் திறனை குடும்பத்தினருக்கும் குழந்தைகளுக்கும் அளிப்பதன் அவசியத்தை உணர்த்த வேண்டும். தந்தை படித்தவனாக இருந்து குழந்தைகள் படிக்காதவர்களாக இருந்தால் அது பெரிய சமூக அவக்கேடு என்று மதிப்பிடப்படவேண்டும். ஆனால் இதன் மூலம் மட்டும் பிரச்னை அனைத்திற்கும் தீர்வு காண முடியாது. இப்போதைய தலைமுறையைச் சேர்ந்த முதியவர்களில் பெரும்பாலோர் விரைவில் எழுத்தறிவு பெறுவதற்கான வாய்ப்பில்லாத சமுதாயங்கள் பல இருக்கின்றன. அவற்றில் எழுத்தறிவு பொறுப்பை எடுத்து விட்டால் அதைக் கவனிக்கக்கூடியவர்கள் யார்? வளர்ச்சி காணும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாட்டில் பிரதமராக நான் இருப்பேனாகில் எழுத்தறிவிப்புக்கு என்று ஒரு அமைச்சகத்தை நிறுவுவேன். அந்த மந்திரிக்கு பெரிய அமைச்சருக்குள்ள அந்தஸ்தைத் தருவேன். வேறு எந்தப் பொறுப்பையும் அவர்மீது சுமத்தமாட்டேன். இதற்கு வேறு வழி எதுவும் இருப்பதாகத் தோன்றியதில்லை. இதுவரை செலவழித்ததை விட எழுத்தறிவுப் பணிக்காக நிறைய செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்கு வேண்டிய பணத்தை மேலந்துஸ்க்களில் சண்டை போட்டுப் பெற வேண்டியிருக்கும். இது மிக முக்கியமான பணி. மற்ற வகைக் கல்வித் திட்டங்களுக்கு செலவழிப்பதைக் குறைத்துக் கொண்டு இதைத் திருப்பி விடவேண்டும், என்று வாதிக்க இயலும். ஆனால் அதற்கு இசைவு கிடைப்பது அரிது. இப்பொழுது செலவழிப்பதை விட அதிகமாகக் கிடைத்து வரச்செய்தால் போதும் என்பதுடன் திருப்தியடைய வேண்டும். நான் கூறுகின்ற கருத்தின் அடிப்படை இதுதான். எழுத்தறிவைப் போதிப்பதற்கு விசேஷத் திறன்களும் தகுதிகளும் தேவையில்லை. சாதாரணத் திறமையும், மதிநுட்பமும் உள்ள எவருக்கும் இதற்கான பயிற்சி தரமுடியும். மற்ற வகைக் கல்வி, சமூக நடவடிக்கைகளுடன் இதைச் சேர்த்துக் குழப்பலாகாது. இதை உறுதி செய்துவிட்டால் எழுத்தறிவிப்புப் போதனைப் பணியை பெற்றோர்கள், உறவினர் பொது சேவா உணர்வு உள்ள தொண்டர்கள் ஆகியோரிடம் ஒப்படைக்கலாம். அமைப்பு முறைப் பணிகளுக்கும், நிர்வாகத்துக்கும் தான் சம்பள ஊழியர் தேவைப்படுவர். ஆரம்ப வகுப்புக்களுக்கான நூல்கள், போதனைக்கான சாதனங்கள் பல்வேறு கட்டங்களில் படிப்பதற்கான விஷயங்கள் முதலியவை அவசியம். பிரதான செலவும் இவைகளுக்கே செய்ய வேண்டியிருக்கும். ஏற்கனவே பள்ளியிலும் முதியோர்க் கல்வித் திட்டங்களிலும் பயன்படுவதற்காக தயாரித்துள்ள புத்தகங்களை இன்னும் அதிகமாக அச்சிட வேண்டியிருக்கும்.

பத்தாண்டுகளில் முப்பத்து மூன்று கோடி முதியோரை எழுத்தறிவு உள்ளவர்களாக ஆக்குவதற்கு எழுபது கோடி பவுன் செலவாகும் என்று 1963ல் யுனெஸ்கோ மதிப்பிட்டது. குழந்தைகளுக்கும் எழுத்தறிவைப் புகட்டுவதற்கு இதைப்போல் இருமடங்கு செலவாகும். போகப்போக விலைவாசி உயரும் காரணமாக இத்தொகையில் மேலும் பாதிக் கூடுதலாகத் தேவைப்படலாம். மொத்தத்தில் 200 கோடி பவுன் 1560 கோடி டாலர் எழுத்தறிவின்மையைப் போக்குவதற்குச் செலவாகும். இது தோராயமான கணக்கீடு தான். எனினும் நியாயமானது. 200 கோடி பவுன் ஒரு பெரிய தொகையாகத் தோன்றலாம். ஆனால் இது வருஷம் 20 கோடி பவுன்வீதம் 10 ஆண்டுகளுக்குச் செலவிடப்படும் என்பதை நினைவில் கொண்டால் அது அவ்வளவு பிரமாதமான தொகையாகத் தோன்றாது. தேவைப்படும் 70 கோடி பவுனில் முக்கால் பகுதியை, அதாவது 50 கோடி பவுனை வளர்ச்சிப் பணி நாடுகள் தாமே திரட்டக்கூடும் என்று 1963ல் மதிப்பிட்டார்கள். ஆனால் தமது சொந்த வசதிகளினின்று அவ்வளவு பெரிய தொகையைச் செலுத்த முடியாமற் போய்விட்டது. 1963 திட்டத்தை நடத்தி வைக்க முடியாமற் போனதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று. எனினும் ஆண்டு தோறும் சராசரி 5 கோடி பவுனைத் திரட்ட அவற்றால் முடியும். அந்நிலையில் உலகம் இதற்காக மொத்தமாகத் தரவேண்டிய தொகை 15 கோடி பவுனாகக் குறையும். இவ்வளவு பெரிய தொகையில் கணிசமானப் பகுதியை தர்மஸ்தாபனங்களிடமிருந்து பெறுவதற்கு நல்ல வாய்ப்பு உண்டு. இது வரை சமய ஸ்தாபனங்கள் தாம் திருச்சபையினரின் ஆதரவுடன். இத்தகைய வசூலை நடத்தி வந்துள்ளன, பணக்கார நாடுகளில் மத சம்பந்தமான பணிகளுக்காக நிதி திரட்டுவதை எதிர்க்கிறார்கள் அல்லது அவ்விஷயத்தில் அலட்சியத்தைக் காட்டுகிறார்கள். ஆனால் பொது நலன், பரந்த மனிதாபிமானம் ஆகியவற்றின் தேவையை எடுத்துக் காட்டி அணுகினால் ஆதரவு கிடைப்பது திண்ணம்.

சர்வதேச ஏற்பாடாக, அல்லது இரு தேசங்களினிடையே நேர்வழி முறையாகத்தான் சர்க்கார்களின் மூலம் நிதிவசதிகள் பெருமளவு கிடைக்க வேண்டியிருக்கும். இது நிலவு வேண்டுமென கேட்டு அழுவது போன்றது என்று சொல்லப்படலாம். ‘‘மக்கள் மக்களாக வாழ்ந்து வளமடைவதற்கு நாம் துணை புரிய வேண்டாமா? இதை விட சந்திரனை அடைகின்ற நோக்கம் அவ்வளவு முக்கியமானதா என்று உலகத்திருச்சபை கவுன்ஸிலின் முன்னாள் காரியதரிசி வில்ஸர் டீ ஹிப்ட் கேட்கிறார்.

விண்வெளி ஆராய்ச்சிக்கும் பயணத்துக்குமாக உலகம் எவ்வளவு செலவு செய்கிறது என்பதை நான் அறியேன். சர்வநாச ஆயுதங்களின் தயாரிப்புக்கான செலவுகள் வேறு இருக்கின்றன. அந்த ஆயுதங்களை உபயோகிக்க நேரிடின் மனித சமூகத்தின் பிரதான நோக்கங்கள் தவிடுபொடியாகிவிடும். உலகில் எழுத்தறிவை வளர்ப்பதற்காக விண்வெளி பாதுகாப்புச் செலவுகளை குறைத்துக் கொள்வது விரும்பத்தக்கது தான். ஆனால் பெரிய வல்லரசுகள் அவ்வாறு செய்யும் என நினைப்பது மதியீனம். இவை ஒன்றுக் கொன்று மாற்றாக உள்ள செலவினங்கள் என்று கருதுவதே சரியாகாது. எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கு ஆகும் செலவை பணக்கார நாடுகள் பகிர்ந்து கொண்டால் ஒவ்வொன்றின் பங்கும் அற்பத் தொகையாகத் தான் இருக்கும். உலக மக்கள் எழுத்தறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற விருப்பமிருந்தால் அதுவும் கைகூடும். சந்திரனை அடைய முடியும். மேலும் ஒரு தடவை இப்பணியைச் செம்மையாகச் செய்துவிட்டால் மீண்டும் செய்ய வேண்டியிராது. இது திரும்பத் திரும்ப வரும் செலவினம் அல்ல.



Photo Unesco - Dominique Roger

டெஹ்ரானிலுள்ள செனட் கட்டிடம். இங்குதான் கல்வி மந்திரிகளின் உலக மாநாடு 1965 செப்டம்பர் 8 முதல் 19 வரை யுனெஸ்கோவால் நடத்தப்பட்டது. 88 நாடுகளின் பிரதிநிதிகள் இப்போதுள்ள பரிட்சார்த்த எழுத்தறிவுத் திட்டங்கள் உருவாக வழி வகுத்தனர். ஒவ்வோராண்டும் செப்டம்பர் 8ந் தேதி சர்வதேச எழுத்தறிவு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

எங்கும் எழுத்தறிவு பரவியிருந்தால் நிலவரத்தில் விஞ்ஞான, மதிநுட்பப்பணிகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் வேண்டிய ஆள் பலம் பிரமாதமாகப் பெருகி விடும். உலக ஜனத்தொகை கூடுதலாகி வருவதால் எழும் பிரச்னைகளுக்கும் சுலபமாகத் தீர்வு காணலாம். ஜனத்தொகை உயர்வும் குறைவான வாழ்க்கைத் தரமும் ஒன்றோடொன்று இணைந்தவை. எழுத்தறிவின்மை அதிகமாக இருப்பதற்கும், ஜனத்தொகையின் உயர்வுக்கும் தொடர்பு உண்டு.

குடிபெயர்வதன் காரணமாக மக்களின் எண்ணிக்கை உயர்வதை நீக்கிப் பார்த்தால் எழுத்தறிவு அதிகமாக உள்ள நாடுகளில் ஜனத்தொகை வளர்ச்சிக் குறைவாகக் காணப்படும். இப்புவியினின்று அறியாமை என்ற பெருங் தீங்கை அடியோடு அகற்றுவது நமது தலைமுறைக்கு உள்ள ஒரு பெருங் கடமை என்பது 1965ல் நடைபெற்ற டெஹ்ரான் மாநாட்டின் திட்டமான நம்பிக்கை. அம்மாநாடு தனது சிபாரிசுகளைப் பின்வருமாறு முடித்தது.

## "ஒரு புனிதமான அவசர வேண்டுகோள்"

ஐ. நா வுக்கும் அதன் விசேஷ அமைப்புகளுக்கும் முதற்கண்ணாக யுனெஸ்கோவுக்கும்;

வளர்ச்சிப் பணிகளில் பொதுவாகவும் கல்வி விஷயத்தில் குறிப்பாகவும் ஈடுபட்டுள்ள பிராந்திய ஸ்தாபனங்களுக்கும்;

நேரிடையாகவும் மறைமுகமாகவும் கல்விக்கு உதவி புரிகின்ற தனிப்பட்டோர் ஸ்தாபனங்களுக்கும்,

சமய, சமுதாய, கலாசார கழகங்களுக்கும்;

தேசிய, சர்வதேசிய அறக்கட்டளைகள் அனைத்துக்கும்;

கல்வித் துறையினர், விஞ்ஞானிகள், அறிவாளிகள் பொருளாதாரத் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட நல்லெண்ணமுள்ள எல்லா மனிதர்களுக்கும் விடுக்கின்ற வேண்டுகோள்;

எழுத்தறிவின்மையை உலகெங்கும் ஒழிப்பதற்கான இயக்கத்தைத் தீவிரமாக்கி விரிவுபடுத்துவதற்கு இசைவாக பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவும் பொறுப்புள்ள தலைவர்கள் இவ்விஷயத்தில் தமது செல்வாக்கை உபயோகிக்கவும் என்று அவர்களை வேண்டுகிறோம்.

எழுத்தறிவின்மை அதிகமாக இருக்கின்ற நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களில் எழுத்தறிவிப்புப் பணியானது, ஒருங்கிணைந்த அம்சமாக இருக்கும்படி உறுதி செய்யுங்கள்.

கூடியவரை தொகைகள் வரவர அதிகமாக எழுத்தறிவிப்புப்பணிக்கு தேசீய, சர்வதேசீய ரொக்க வசதிகளிலிருந்து கிடைக்கச் செய்யுங்கள்.

வளர்ச்சிக்குப் பொதுப்படையாகவும் எழுத்தறிவிப்புக்குக் குறிப்பாகவும் அதிக ரொக்க வசதி கிடைப்பதற்காக ராணுவச் செலவைக் குறைப்பதற்கு முயலுங்கள்.

எல்லா பிரசார வசதிகளையும் முதியோரின் எழுத்தறிவுக்காக முழு அளவில் பயன்படுத்துங்கள்.

சமாதானத்தை பெருமளவில் அச்சுறுத்துகின்ற பீடைகள் பசி, பிணி, அறியாமை ஆகியவையே. ஆனால் எழுத்தறிவின்மையை ஒழிப்பது அடிப்படையான முக்கியத்துவம் உள்ளது. முன்னுரிமையுடன் அதற்கு நிதி ஒதுக்கும்படி உறுதி செய்யுங்கள்.

பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டுவதுதான் அடிப்படை விஷயம். இது ஜனநாயக சகாப்தம், சாமானிய மனிதன் நூற்றாண்டு என்றெல்லாம் சொல்வதுண்டு. ஆனால் தனது வாழ்வையும், க்ஷேம நலனையும் பாதிக்கின்ற பிரச்னை விஷயத்தில் அவன் போதிய அக்கறை காட்டுவதில்லை. சில சமயம் எதிர்ப்பு உணர்ச்சி காட்டுபவனாகவும் இருக்கிறான். இது ஒரு விசித்திரமான நிலைமை.

தெளிவாக பயனுள்ள வகையில் வழங்குகின்ற நல்லறிவை அடிப்படையாகக் கொண்டிருந்தால்தான் மக்களது ஆற்றல் செல்வாக்குள்ளதாக இருக்கும். எழுத்தறிவற்ற மக்கள் அறிவில்லாதவர்கள். தங்கள் விருப்பங்களை உருவாக்கி முடிவு காண்கின்ற இடங்களில் இந்த வேண்டுகோள் மதிப்புப் பெறச் செய்வதற்கான தகுதி அவர்களுக்கு இராது. எழுத்தறிவின்மை என்ற முறையின் காரணமாகத்தான் அநாவசியமாகத் தாங்கள் நஷ்டப்பட வேண்டியிருக்கிறதென்பதை ஒரு முறை உலக மக்கள் உணர்ந்துவிட்டால், உண்மை அவர்களுக்குப் புலப்படும். மற்ற வகை அடிமை நிலைகளைப் போலவே எழுத்தறிவின்மை மனதை அடிமைப்படுத்துகிறது. எனவே அது அகற்றப்பட வேண்டுமென்று மாநாட்டையொட்டி கோரிக்கையை அவர்களே செய்வர். உண்மையில் அரசினர் பாடுபட்டால் அதை நிரந்தரமாக அகற்றிவிட இயலும். ஒரு நியாயமான கால வரம்புக்குள் அதிகச் செலவில்லாமல் இது கைகூடவல்லது என்று தெரிந்தால், உடனடியாக, உறுதியுடன், பயனுள்ள நடவடிக்கை வேண்டுமென மக்கள் கோருவர். அதற்கான பணத்தையும் ஆள்பலத்தையும் தருவதற்குத் தயாராவார்.

தமிழில்: ஏ.ஜி. வெங்கடாச்சாரி

மனித உரிமைகளுக்கான
சர்வதேச ஆண்டு

# ரெனி மாஹ்ஹயூ

டைரக்டர் ஜெனரல் யுனெஸ்கோ

# வழங்கும் செய்தி

இது மனித உரிமை ஆண்டு. மனிதகுலம் முழுவதும் ஏற்கவேண்டிய நீதி முறையொன்று, முதன் முதலில் உலகப் பிரகடனமாக 20 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டதையொட்டி, இது கொண்டாடப்படுகிறது. வாழ்க்கைத்தரங்களும், முறைகளும் அடிக்கடி மாறுகின்றன. முன்னேற்றமும், ஏழ்மையும் உலகத்தில், சதுரங்கக் கட்டங்களைப்போல் அடுத்தடுத்து இருக்கின்றன. பயங்கர சக்திகள் நிலவுகின்றன. இவைகளுக்கிடையில் ஒழுங்கு, ஒற்றுமையை உலகம் விரும்புகிறது.

ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லையென்று நாடுகள் தனித்திருந்த காலம் மலையேறிவிட்டது. இன்று மனித குலம் ஓர் உலக சமுதாயம், பிறப்பு, பண்பாடு, மதம், பொருளாதார வளர்ச்சி முதலிய துறைகளில் வெவ்வேறு நிலைகளிலுள்ள கோடானு கோடி மக்கள் இன்று சுதந்திரம் அடைந்திருக்கின்றனர். அரசியல் அரங்கில் அவர்களும் தோன்றியிருக்கிறார்கள்; நீதியையும், இன்றையச் சட்டங்களையும் விரிவாக அமுல் நடத்தச் செய்வதில் பங்கெடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

ஒருநாட்டைப் பொறுத்தவரை, மக்களின் உரிமைகளையும், கடமைகளையும் அது தனது அரசியல் சட்டத்திலும், மற்ற சட்டங்களிலும் தெளிவாக்கிவிடுகிறது. தத்துவ, மதத் துறைகளில் மக்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக்களைப் பின்பற்றுகிறார்கள். உலகப் பிரகடனமோ மனித குலம் முழுவதற்கும் பொதுவானது. மனிதர்கள் எல்லோரும் சம கௌரவத்துடன் வாழவேண்டுமென்று அது கூறுகிறது.

அது எல்லா மனிதர்களும் இனம், நிறம், மொழி, மதம், ஆண்-பெண் முதலியவற்றைப் போன்ற ப்ாகுபாடுகளினால் கஷ்டத்திற்கு உள்ளாகாமல், பிரகடனத்திலுள்ள எல்லா உரிமைகளையும், சுதந்திரங்களையும் அனுபவிக்கலாமென்று கூறுகிறது. இதனால் எல்லோரும் தங்கள் தங்களுடைய இஷ்டம் போல் வாழவும், சிந்திக்கவும், உலகத்தை உருவாக்கவும் இடமுண்டாகிறது.

ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ உரிமையுண்டு என்று பொதுப்படையாகக் கூறுவதைத் தவிர இப்பிரகடனம் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. மாறிவரும் இவ்வுலகத்தில், நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு கோட்பாடு, மனிதனை செயல்படத்தூண்டவும், பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட மக்களையும், நாடுகளையும் ஒன்று சேர்க்கவும் செய்யக்கூடியது இவ்வளவுதான். ஆனால் சுய கௌரவத்தையும், மற்றவர்களுடைய கௌரவத்தையும் அடிப்படையாகக் கொண்ட சுதந்திரத்தை நடைமுறையில் கடைப் பிடிக்கும்போது, நாம் சில வரம்புகளுக்குள் இருக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் உலகப் பிரகடனத்தில் சில உரிமைகள் குறிப்பாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, எவரையும் பலவந்தத்திற்கு உட்படுத்தக் கூடாது. அத்துடன் அவருக்கு அடிப்படைத்தேவைகள் அளிக்கப்படவேண்டும். ஒவ்வொருவரும் தமது நலனுக்கும், ஆரோக்கியத்துக்கும் தேவையான வாழ்க்கைத் தரத்தைப்பெற உரிமை பெற்றவர்கள் என்று இதிலிருந்தே தெரியும். விஞ்ஞான, தொழிலறிவு, முன்னேற்றங்களின் பலன்களை அடையவும், அம்முன்னேற்றங்களுக்குத் தன்னால் இயன்றதைச் செய்யவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. சுதந்திரத்தைப்பற்றி சரியாக அறிந்துகொண்டு, பொறுப்பான முறையில் அதை அனுபவிப்பதற்கு போதிய ‍க்ல்விவேண்டும். அப்பொழுதே ஒருவருக்குத் தாம் வாழும் உலகத்தை சரியாகப் புரிந்து கொள்ளும் அறிவும், பண்பாடும் கிடைக்கும்.

ஒருநாட்டின் சட்டங்களைவிட உலகப்பிரகடனம் ஒருவிதத்தில் பலம் வாய்ந்ததென்று நினைக்க இடமிருக்கிறதென்றாலும், ஒருவிதத்தில் பலக்குறைவானதென்றும் கூறலாம். எல்லா மனிதர்களின் கடமைகளையும் அது எடுத்துரைக்கிறது. எல்லா நாடுகளின் நடவடிக்கைகளையும் உலக அபிப்பிராயம் என்ற நீதி மன்றத்தின் முன் வைக்கிறது. தனிமனிதனின் உரிமைகளை குறிப்பிடுவதன் மூலம், தவறு செய்பவர்களைத் தடுப்பதற்கு உலக மக்களுக்கு உள்ள சக்தியை இப்பிரகடனம் பலப்படுத்துகிறது. மனித சமுதாயத்தின் மனச்சாட்சி லட்சக்கணக்கான வருஷ அனுபவங்களின் மூலம் முதிர்ச்சி பெற்றிருக்கிறது. மற்றவர்களுக்கும் தனக்குமுள்ள உறவுகளை அறிந்து கொள்வதன் மூலம், அதை வளர்க்கலாம். அம்மனச்சாட்சி எந்த அளவுக்கு பெருகி, முதிர்ச்சிபெற்று இருக்கிறதோ அந்த அளவுக்கு உலகப் பிரகடனத்தினால் நன்மை உண்டாகும்.

உலகத்தின் பல பகுதிகளில் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. 70 கோடி மக்கள் எழுத்தறிவின்றி இருக்கின்றனர். உலகப் பிரகடனம் இவர்களைப் போன்றவர்களுக்கு வெறும் வார்த்தைக்கோவையாகவே இருக்கிறது. விஞ்ஞானமும், தொழிலறிவும் பெருகிவரும் இக்காலத்தில், அதில் கூறியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கஷ்டமல்ல. மனிதனின் முழு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் முன்னேற்பாடாக, படிப்பு, விஞ்ஞானம், பண்பாடு ஆகியவற்றை எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது நமது கடமை.

இந்த அள்வில்தான் ஐ.நா. துவக்கிய பணியை யுனெஸ்கோ செய்து வருகிறது.

ஐ. நா. ஆதரவில் டெஹ்ரானில் துவங்கும் சர்வதேச மக்கள் உரிமை மாநாடு பழைய தவறுகளைத் திருத்தி, மனித கௌரவத்தை உயர்த்தும் பணியில் தனது உறுதியை உலகத்துக்கு எடுத்துக் காட்டுமென்று நம்புகிறேன்.

# எழுத்துக்கு அப்பால் (8ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால் அவர்கள் படிப்பதற்குரிய நூல்களைத் தெரிந்தெடுக்கும் வேலை மிக முக்கியமானது. அந்நூல்களில் காணும் செய்திகள் வயது வந்தோர் செய்கின்ற வேலைகளோடு தொடர்புடையவையாக இருக்கவேண்டும். நடையும் எளிதாகவும் கவர்ச்சியாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் தொடர்ந்து படிப்பதில் அவர்களுக்குச் சுவையேற்படும்.

வயது வந்தோர் பல்வேறு நூல்களைப் படிக்க உதவுவதுதான் எழுத்தறிவுத் திட்டத்தின் நோக்கம். அறிவு வளர்ச்சிக்காகவோ பொழுது போக்குக்காகவோ இன்ப நுகர்வுக்காகவோ வயது வந்தோர் படிக்க விரும்புவர். அவ்வாறு படிக்கவேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டாவிட்டால் எழுத்தறிவு பயனற்றதாகிவிடும்.

புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் ஏதோ கிடைக்கின்ற செய்தித்தாள்களையும் நூல்களையும் படிப்பார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது. இப்போதிருக்கின்ற செய்தித்தாள்களையும் நூல்களையும் படித்துப் புரிந்து கொள்வதற்கேற்ற அறிவு அவர்களுக் கில்லை. ஆகவே அவர்களுக்கென்றே எழுதப்பட்ட நூல்கள் தேவைப்படுகின்றன. அவற்றைப் படிப்பதன் மூலம் அவர்கள் அறிவு சிறிது சிறிதாக வளரும். நாளடைவில் அவர்கள் உயர்ந்த நூல்களைப் படிக்கும் திறனைப் பெறுவார்கள். ஆதலால் வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் இது மிக முக்கியமான கூறுகிறது. புதிதாக எழுத்தறிவு பெற்றவனுடைய எதிர்கால முன்னேற்றம் முழுதும் அவன் படிப்பதற்குக் கிடைக்கும் நூல்களைப் பொறுத்திருக்கிறது.

எழுத்தறிவுத் திட்டம் மிகச் சிக்கலான ஒரு பிரச்சினை: இது நாட்டு மக்கள் அனைவரது கவனத்தையும் ஈர்க்க வேண்டிய திட்டம். ஆதலால் இதைப்பற்றி எல்லாருக்கும் தெளிவான கருத்துக்கள் இருக்கவேண்டும். எ ழு த் த றி வு த் திட்டத்துக்கேயுரிய அமைப்பு நுணுக்கங்கள் இருக்கின்றன. இவற்றை ஓரளவேனும் மக்களுக்கு விளக்கவேண்டும்.

ஓரிடத்தில் எழுத்தறிவுத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் மக்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய சொற்றொடர்கள், சுலோகங்கள் தொடர் உருவக விளக்கப்படங்கள் ஆகியவற்றைக் கொண்ட சுவரொட்டிகளை ஆங்காங்கு ஒட்டிவைப்பது வழக்கமாக இருக்கிறது. ஆனால் எழுத்தறி வில்லாதவர்கள் இவற்றைப் படிக்க முடியாததால் இவை பயனற்றுப் போகின்றன. எழுத்தறிவுத் திட்டத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டியவர் சிலர் இருக்கிறார்கள். தொழிலதிபர்கள், நிறுவன இயக்குநர்கள், பொறுப்பான பதவிகளை வகிக்கும் ஏனைய பெரியவர்கள், சுருங்கச் சொன்னால் நாட்டு முன்னேற்றத்தில் நேரடியாகப் பங்குகொள்கிற அனைவரும் எழுத்தறிவுத் திட்டத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் பத்திரிகைகளும் பொதுமக்கள் தொடர்புக்கான ஏனைய சாதனங்களும் எழுத்தறிவுத் திட்டத்தில் மிக முக்கிய இடம் பெறுகின்றன.

பல மொழிகள் வழங்குகின்ற நாடுகளில் எந்த மொழியை எழுத்தறிவுப் பயிற்சிக்குப் பயன்படுத்தவேண்டும் என்பதை அந்தந்த நாட்டின் அரசுக்கு விட்டுவிடலாம். ஆனால் இதுவரையில் எழுத்தறிவுப் பயிற்சியைப்பற்றி நடந்த கூட்டங்கள் மாநாடுகள் அனைத்திலும் எழுத்தறிவுப் பயிற்சியின் தொடக்கம் தாய்மொழியில் தான் இருக்கவேண்டும் என்ற கருத்தை அனைவரும் ஒருமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அப்படியிருந்தால் தான் வயது வந்தவர்கள் விரும்பிப் படிப்பார்கள், படிப்பது அவர்களுக்கு விளங்கும், விளங்கியது அவர்கள் மனத்தில் ஆழமாகப் பதியும்.

வயது வந்தோர்க்கு எழுத்தறிவூட்டும் வேலையைச் செய்யப் பலவகைப்பட்ட தொண்டர்கள் தேவை. முதலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் வேண்டும். அவர்கள் வேலையிலிருப்பவராயினும் சரி, ஓய்வுபெற்றவராயினும் சரி, வேறு தொழில்களைச் செய்பவர்களும் தேவையே. ஆனால் அவர்கள் நன்றாகப் படித்தவர்களாக இருக்கவேண்டும். உழவு கைப்பணி போன்ற வேலை செய்கின்ற தொழில் நுட்ப வல்லுநரும் வேண்டும். குழுத்தலைவர்கள், விவாதத்தில் வழிகாட்டுபவர்கள். காட்சி கேள்விக்கல்விக் கருவிகளை இயக்குபவர்கள் முதலியவரும் வேண்டும். இப்படி ஏராளமான பேர்வேண்டும். அவர்கள் முழுநேரமும் எழுத்தறிவு வேலையில் ஈடுபடுபவர்களாகவோ பகுதி நேரப் பணியாளர்களாகவோ இருக்கலாம்.

வயது வந்தோர் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களிற் பெரும்பாலோர் அவ்வேலைக்கு முழுத்தகுதி பெற்றவர்களல்லர். அவர்களுட் பலர் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவதற்குப் பயிற்சி பெற்றவர்கள். ஏனையோர் ஆசிரியப்பயிற்சி பெறாதவர்கள். இந்த வேலைக்காக அவர்களுக்குத் தனிப்பயிற்சி தரவேண்டியது அவசியம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் எழுத்தறிவுத் திட்டத்தைத் தொடங்குமுன் அங்கு வாழும் மக்களுடைய வாழ்க்கை முறை முழுவதையும் ஆராயவேண்டும். அப்படிச் செய்தால் அவர்களுடைய பிரச்சினைகள் என்னென்ன என்பதை அறிந்துகொள்ளலாம். அ த ன் பி ன் வயதுவந்தோர் தங்களுடைய பிரச்சினைகளைப்பற்றிச் சிந்திக்கவும், அவற்றைச் சமாளிக்கவும் எழுத்தறிவுப் பயிற்சியை ஒரு நல்ல வாய்ப்பாகவும் கருவியாகவும் பயன்படுத்தலாம்.

வயதுவந்தோர் கல்வி என்று பேசும்போது ''கல்வி'' என்ற சொல்லை மிகப்பரந்த பொருளில் நாம் பயன்படுத்துகிறோம். மனிதன் முழுவளர்ச்சி பெறுதலையே கல்வியென்று இங்கே குறிப்பிடுகிறோம். எழுத்தறிவு பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால் அது மனித வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். அதனால்தான் ''வளர்ச்சியொடு பிணைந்த எழுத்தறிவு'' என்று நாம் அடிக்கடி பேசுகிறோம். இந்த வளர்ச்சி சமுதாயம், பொருளாதாரம் பண்பாடு, ஒழுக்கம் எல்லாத் துறை துறைகளிலும் ஏற்படும் வளர்ச்சியாக இருக்கவேண்டு மென்பதை நாம் தெளிவுபடுத்துவது அவசியம்.

வயதுவந்தோர் கல்வியில் எழுத்தறிவு என்பது மனித வாழ்க்கையின் முன்னேற்றக்கூறுகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் கருவியாக இருக்கவேண்டும்.

தமிழில் : மு. ரா. பெருமாள் முதலியார்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கலான திட்டங்களைக்கூட சமாளிக்கும் வழிகள் நமக்குப் புலப்படும். துவக்க காலத்தில் ஆழ்ந்த பரிசீலனை ஆராய்ச்சி முதலியவை அவசியம். பள்ளிக்கு வெளியில் அளிக்கப்பட வேண்டிய கல்விக்கு எப்படித் திட்டம் வகுப்பது? அக்கல்வி கற்பிக்கும் முறைகள் யாவை? எந்த இடத்தில் அம்முறைகளை அமுல் நடத்தினால் நல்ல வெற்றி கிடைக்கும்? இத்திட்டங்களில் என்னென்ன பாடங்கள் இருக்க வேண்டும்?. இப்பிரச்னைகளுக்குக் கிடைக்கும் பதில்கள், எழுத்தறிவின்மையை ஒழிக்கும் முயற்சியில் நமக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

**கேள்வி: வேறு என்ன திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன ?**

**பதில்:** சுமார் 50 நாடுகள் யுனெஸ்கோ உதவி கோரியிருக்கின்றன. யுனெஸ்கோ குழுக்கள் அவற்றில் 31 நாடுகளுக்கு சென்று பார்வையிட்டிருக்கின்றன. ஜாம்பியா, சூடான் மடகாஸ்கர், பிரசீல், பெரு, இந்தியா முதலிய நாடுகளுக்குப் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் இத்திட்டம் உணவு உற்பத்திப் பெருக்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஓராண்டு காலத்தில், உணவு உற்பத்தி, அங்கு ஆச்சரியகரமாக முன்னேறியிருக்கிறது. இந்தியாவுக்கு வகுக்கப்பட்டுள்ள திட்டம், வயது வந்த ஏழரை லட்சம் மக்களுக்கு தொழிலுக்கேற்ற எழுத்தறிவு அளிக்கும் ஐந்தாண்டுத்திட்டம். ஒவ்வொரு திட்டமும் தனித்தனியானது என்றும், குறிப்பிட்ட நோக்கத்துடன் வகுக்கப்படுவது என்றும் முன்னரே கூறியிருக்கிறேன். நேபாளப் பொருளாதார நிலை, சுய தேவைப் பூர்த்திக்கும், ஏற்றுமதி செய்யும் தகுதிக்கும் இடையிலிருக்கிறது. இந்த இடைநிலைக்குத் தகுந்தவாறு புதிய எழுத்தறிவு இயக்கம் அங்கு நிறுவப்பட்டு வருகிறது.

**கேள்வி: மக்கள் புதிதாக எழுத்தறிவு பெற்றவுடன், பல புதிய பிரச்னைகளும், உண்டாகின்றன. அவர்கள் தங்களுடைய பழைய வாழ்க்கை முறைகளை வெறுத்து, ஆடம்பர வாழ்வு கோருவதாகக் கூறுகிறார்களே, அது உண்மையா ?**

**பதில்:** மனிதன் மேலும் மேலும் தன்னை உயர்த்திக் கொள்ள முயற்சித்து வந்திருக்கிறான். இது ஊக்கமளிக்கவேண்டிய நல்ல முயற்சி, நகரங்களில் வேலை செய்யும் வாய்ப்புக் கிடைத்தால், கிராம மக்கள் அங்குதான் போவார்கள். கிராமங்களில் மின்சாரம், போக்குவரத்து, மற்ற நவீன வசதிகள் எதுவுமில்லை. இவை வேண்டுமென்ற ஆவலைத் தடுப்பதன் மூலம் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. நமது திட்டங்கள், நடைமுறைக்கு ஏற்ற வகையில், பிரச்னையைத் தீர்க்க உதவுகின்றன என்று நினைக்கிறேன். நம்முடைய திட்டம் ஒவ்வொன்றும், அந்தந்த நாட்டுக் கல்வி முறைகள் மட்டுமின்றி, அவற்றின் அரசியல், பொருளாதார அமைப்பையும் ஊன்றிப் பரிசீலனை செய்த பிறகே நிறுவப்படவேண்டும். அதாவது நமது முயற்சி வெற்றிபெற வேண்டுமானால், அது அந்தந்த நாட்டு அரசியல், பொருளாதார, நீதி உணர்வுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும்.

தமிழில் : பி. வி. சுப்பிரமணியம்

# மாபெரும் மாற்றம் (22ம் பக்கத் தொடர்ச்சி)

ளாதாரப் பிரச்னைகளைச் சமாளிக்க முடியும் என்பதைப் பற்றி ஆராய்ந்தோம்: எங்கள் முயற்சி சொந்த நாட்டிலே வளங் காண்பதாகவே அமைய வேண்டும். உலகில் அங்கங்கே வசதியான இடங்களில் மக்கள் குடியேறுவதை ஊக்குவதாக அது முடியக் கூடாது. இதுதான் முக்கியம்.

ஆனால் எங்கள் கேந்திரம் இதற்காக என்ன முயற்சி எடுப்பது? ஆசிரியர்களாகவும் உள்ளூரிலேயே ஓரளவு நல்ல நிலையில் அமைந்தவர்களாகவும் இங்கே வாழ்பவர்கள் நாங்கள். இந்த நிலையில் இந்தக் கல்வி நிலயத்தையே எங்களிடம் படித்த இத்தகைய மாணவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் அலுவலகமாக்குவது எப்படி? இது நடக்காதே! ஏதாவது அற்புதத்தினால்தான் இதைச் சாதிக்க முடியும். ஆனாலும் இப்படி ஒரு பிரச்னை—சிக்கல்—இருக்கிறது என்பதை உணர்ந்ததே ஓர் அற்புதமாயிற்றே!

படித்தவர்கள் எப்போதுமே தங்கள் சொந்த அலுவல்களில் ஈடுபட்டுத் தங்கள் நலன்களில் மட்டுமே அக்கறை காட்டுவதுதான் வழக்கம். மற்ற எதையும் அவர்கள் கவனிப்பதில்லை. இங்கேயோ அப்படி இருக்க முடியவில்லை, மற்ற ஒன்றையும் கவனித்தாக வேண்டியிருந்தது. ஆகவே, எங்கள் அலுவல்கள், எண்ணங்கள், அவை சம்பந்தமான முயற்சிகள் இவை ஒருபுறம் இருந்தாலும், நடைமுறையில் பயன் அளிக்கும்படி ஏதாவது முயற்சியில் ஈடுபட்டே ஆகவேண்டும் என்பதைக் கண்டுகொண்டோம்.

*1957-1958* இந்த ஆண்டுவாக்கில் ஸாண்டுலூஸுர்கியூவில் பெண்கள் வேலை வாய்ப்பின்றித் திண்டாடும் நிலை ஏற்பட்டுவிட்டது. எங்கள் ஊரில் வாழும் பெண்களை இருவகையாகப் பிரிக்கலாம்; மணமானவர்கள்; கணவன்மார் குடும்பத்தை நடத்த, அவர்களுக்கு அடங்கி வாழவேண்டியவர்கள் இவர்கள். மணமாகாத பெண்கள் (பெரும்பாலோர் மணம்செய்து கொள்வதேயில்லை): இவர்கள் தம் பெற்றோர், உடன் பிறந்தார் ஆகியோரை அண்டி வாழவேண்டியவர்கள்.

நாங்கள் ஒரு புதுவிதச் சோதனையில் ஈடுபடுவதென்று தீர்மானித்தோம்—உள்ளூர்க் கைத்தொழில்களை வளர்ப்பது தான் அது. ஸார்டினியாவில் வெகு காலமாக நடைபெறுவது கைத்தறி நெசவு (கம்பளம், ஜவுளி உற்பத்தி) இதைப் பெருத்த அளவில் ஒரு வியாபாரத் தொழிலாக நடத்துவது—அதாவது, ஏதோ வயிற்றுக்கும் வாய்க்கும் போதும் என்று இருந்த பொருளாதாரத்தை, பொருளுற்பத்தியினால் வளர்ச்சிபெறும் பொருளாதாரமாக மாற்றுவது.

இதை எப்படிச் செய்வது என்பது தான் பிரச்னை. எங்கள் பழைய கைத்தறிகளெல்லாம் நெசவுத்தொழில் ஆதியில் தொடங்கிய அதே நிலையில் சாமானியமானமுறையில் அமைந்தவை. இவற்றை வைத்துக்கொண்டு, குறைந்த விலைக்கு மற்ற ஜவுளிகளுடன் போட்டியிடும்படி அவ்வளவு வேகத்தில் எங்களால் ஏதும் செய்ய இயலாது. இதற்கு ஒரேவழி, இந்தப் பழைய தறிகளைப் பயன்படுத்துவதை அடியோடு கைவிட்டு 'ஜாக்கர்டுதறி' போன்றவற்றைக் கையாளுவதுதான். ஏற்கனவே பழைய முறையில் தலைமுறை தலைமுறையாக நெய்து பழகியவர்கள் இங்குள்ள பெண்மக்கள். அவர்கள் எங்கள் யோசனையை எவ்வளவு எதிர்த்திருப்பார்கள் என்று பாருங்கள்! முடிவில் எங்கள் விடாமுயற்சி வெற்றியளித்தது. தறியில் தகுந்த மாறுதல்களையெல்லாம் செய்தோம்; இருந்தாலும், பலருக்கு மனதில் அதிருப்தியும், 'ஐயையோ! இப்படியும் நடக்குமா?' என்ற பாவமுந்தான் இருந்தன.

இளம்பெண்கள் சிலரை அழைத்து முதல் முதலாகக் கூட்டுறவு முறையில் நாங்கள் நெசவுத்தொழில் நடத்தத் தொடங்கியபோது பலவிதமான ஐயங்கள் ஏற்பட்டன; இன்னும் அதெல்லாம் நினைவில் இருக்கிறது. இப்படி ஓர் ஆண்டுக்காலம் முழுவதும் என்ன விளைவு நேரப் போகிறதென்று விளங்காமல் இந்தத் தொழில் முயற்சி நடந்தது; 'விளைவை அறியும் ஆவலுடன் அவர்கள் உடலில் ஒருவித நடுக்கம் காண அதை எதிர் பார்த்து நின்றிருந்தார்கள். 'அவர்கள் முயற்சி பலித்து விட்டது; அதனால் லாபமே கிட்டியிருக்கிறது' என்ற செய்தி எட்டியது! மாதிரித் துணி முதலியவை தயாரித்து அங்கங்கே விநியோகிக்கவும், ஜவுளி வியாபாரத்தின் போக்கை ஆராயவும் வேண்டியிருந்தது. முதல் முதலாக எங்கள் ஜவுளிக்கு வரும் 'ஆர்டர்'களைச் சமாளிக்க ஏற்பாடெல்லாம் செய்ய வேண்டியிருந்தது.

எங்கள் ஊர்ப் பெண்களுக்கெல்லாம் எங்கள் கேந்திரத்தில் உள்ளூற நம்பிக்கை இருந்தது. இத்தனை ஆண்டுகளாக அவர்களுக்கு உதவி வருகிறதல்லவா? அதனால்தான் கடைசியில் வெற்றி கிட்டிவிட்டது. இதைப் பார்த்ததும் உடனடியாக ஊரில் இருந்த முதியவர்களின் பழம்போக்கே மாறிவிட்டது.

சாதாரணத் தொழிலாளியாக ஏதோ ஊதியம் பெறுவது என்றால் அது ஒரு விஷயம் : இப்படி கூட்டுறவு முயற்சியில் பங்குகொண்டு அதன் நிர்வாகத்திலும் பொறுப்புத் தங்களுக்கு உண்டு என்றால் அது வேறுதானே? ஒவ்வொருவரும் குறிப்பிட்ட அளவுக்குமேல் முயற்சி எடுத்துக்கொண்டாக வேண்டியிருந்தது. பத்துப்பேரோடு பழகுவதும் வியாபாரம் பெருகும்படி ஆராய்வதும், விலை அமைப்பதும், தாம் விற்கும் பொருளைப் பின்னும் நன்றாக அமைப்பதும் ஆக இப்படிப் பல துறைகளிலும் கவனம் செலுத்தவேண்டியிருந்தது. இந்தப் புதுவகை யோசனைகளுக்கு ஏற்றபடி புதிய ஊக்கமும், புதிய அறிவு, அநுபவம் இவற்றைக்கொண்டு புது முறையில் நடத்தும் போக்கும் அமைய வேண்டியிருந்தது.

கேந்திரத்தில் படிக்கும் மாணவர் தொகை பெருகப் பெருக இன்னும் பல துறைகளில் பயிற்சி பெற வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று பலர் விண்ணப்பித்துக் கொண்டார்கள்: பொருளாதாரம், கணக்குவழக்குகளைக் கவனித்தல், கலைபற்றிய வரலாறு இப்படிப் பல விஷயங்களைக் குறித்து வகுப்புக்கள் நடத்த வேண்டும் என்றார்கள் இவர்கள். எழுத்தறிவின்மை என்பது இப்போது பிரச்னையாக இல்லை; புதிய முயற்சிகளில் எங்கள் ஊரார் ஈடுபடும் போது அவர்களுக்கு என்ன என்ன தெரிந்திருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதுதான் பெரும் பிரச்னையாகிவிட்டது.

நாம் எங்கே வாழ்பவர்களாக இருந்தாலும் சரி, இன்றைய வாழ்க்கை முறையின் துரிதமான போக்குக் கேற்றபடி நடந்து சமாளித்ததாக வேண்டியிருக்கிறது. மாறிவரும் இந்த உலகில் அண்மையில் நிகழ்ந்த முன்னேற்றம் பற்றியெல்லாம் அறிந்தாக வேண்டியிக்கிறது. மற்றவற்றையெல்லாம்விட இந்த மனப்பான்மைதான் ''நிலைபெற்ற கல்விப் பயிற்சி வேண்டும்'' என்னும் இன்றைய கோட்பாட்டுக்கு அடிப்படியாகும்.

இன்று ஸாண்டுலூஸுர்கியூவில் ஐந்து கூட்டுறவுத் தொழில்கள் நடைபெறுகின்றன; 1. நெசவு; 2. பனியன், காலுறை போன்றவை பின்னுதல் 3. கையுறை தயாரித்தல் (இது ஏராளமான அளவிலும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் முறையிலும் அமைந்தது); 4. பீரோ போன்ற மரவேலையும், செதுக்கு வேலையும்; 5. ஆடு மாடு வளர்ப்பு. இது அண்மையில் 127 உறுப்பினர்களைக் கொண்டு அமைந்தது. இவையெல்லாம் வெறும் வியாபார நிறுவனங்களல்ல; முழுவதும் கூட்டுறவு முறையிலே நடப்பவை; எங்கள் பண்பாட்டு அலுவல்களின் விளைவாகத் தோன்றி, இந்தப் பண்பாட்டு முயற்சிக்கு ஆக்கம் அளிப்பவை.

இப்படிப் பதினாறு ஆண்டு முயற்சிக்குப்பின், ''எங்கள் நிலயத்தார் மீண்டும் மீண்டும் யோசித்து அவ்வப்போது மாற்றியமைத்துத் திட்டங்களை முடிவு செய்ததால்தான் இம்மாதிரி உற்பத்தி முறைகளைக் கையாண்டோம். அவையே கல்விப் பயிற்சி முறையாகவும் பயன்பட்டன'' என்று சொல்லத் தோன்றுகிறது.

இன்னும் சொல்லப்போனால், உள்ளூர் அமைப்புக்கு ஏற்ற வகையில் எழுத்தறிவின்மையைத் தாக்கிப் போக்கியதால்தான் நாங்கள் முதியோர் பயிற்சியில் ஒரு தரத்தை அடைய வாய்ப்பு ஏற்பட்டது; தற்கால வியாபார முயற்சியின் அடிப்படையில் இப்படிப் பல நிறுவனங்களை அமைக்கவும் முடிந்தது. இவையே எங்கள் பிராந்தியத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தன. தலைமுறை தலைமுறையாக நாங்கள் உழன்று வந்த வறுமை நிலையிலிருந்து இந்த முயற்சிகளே எங்களை மீட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

**"Propos recueillis par Lucio Attinelli"**

தமிழில்: த. நா. சேனாபதி


Edited and published by S. Govindarajulu for the Southern Languages Book Trust, 441, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.




## 1968 இதழ்களுக்கு கட்டுமான அட்டை

உங்கள் யுனெஸ்கோ கூரியர் 1968 இதழ்களுக்கான கட்டுமான அட்டைக்கு ஏற்பாடு செய்து விட்டீர்களா? சந்தாதாரர்களுக்கு அழகான, வசதியான கட்டுமான அட்டை தருகிறோம். சிவப்புத் துணியில் தயாரிக்கப்பட்டுள்ள இது ஓராண்டு இதழ்களை வைக்க வசதியானது.

$ 4.00

கிடைக்குமிடம்: யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் கமிஷன் புது டில்லி.

## அயல்நாட்டில் விடுமுறை காலக் கல்வி

1968-1969
1969-1970

17வது இதழின் மறுபதிப்பு




52 நாடுகளில் 512 தேசிய அமைப்புக்களும் 10 சர்வதேச ஸ்தாபனங்களும் நடத்தும் வகுப்புகள், கருத்தரங்குகள் கோடைப்பள்ளிகள் பற்றிய விவரங்களைத் தருகிறது. மும்மொழி ஆங்கிலம் - பிரெஞ்சு-ஸ்பானிஷ் 71 பக்கங்கள் $ 1-00 6 stg. 3.50 F

★

## அயல்நாட்டில் கல்வி

விடுமுறை கால கல்வி உட்பட

இதழ் 17 1968-1969
1969-1970

சர்வதேச உதவித் தொகைகள்
கல்வி பரிமாற்றம்

மும்மொழி ஆங்கிலம்-பிரெஞ்சு-ஸ்பானிஷ்
683 பக்கங்கள் $5-00 25 stg. 17.50 F

# வாசகர்களுக்கு

யுனெஸ்கோ கூரியரின் தமிழ்ப்பதிப்பு இதுவரை பத்து இதழ்கள் வெளி வந்துள்ளன. ஒவ்வோர் இதழும் தனி சிறப்புடன் திகழ்ந்து வாசகர்களின் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஜூலை இதழில் தென்னுப்பிரிக்கா அரசாங்கம் கடைப்பிடித்து வரும் இன ஒதுக்கல் கொள்கையின் கேடுகள் நன்கு விளக்கப்பட்டிருந்தது. எழுதும் கலை தோன்றி வளர்ந்த வரலாற்றை முழுவதுமாக ஆராயும் அரிய கட்டுரைகளையும் படங்களையும் கொண்டதாக ஆகஸ்ட் இதழ் அமைந்தது. பண்டை வரலாற்றுச் சிறப்பைக் காட்டும் கட்டுரைகள் செப்டம்பர் இதழில் இடம் பெற்றன. அக்டோபர்-நவம்பருக்கான விசேஷ இரட்டை இதழ் போரினுல் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கி உலகில் அமைதி நிலவ வேண்டியதன் அத்தியாவசியத் தேவையை உள்ளத்தைத் தொடும் விதத்தில் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

சோவியத் யூனியன் அக்டோபர் புரட்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதையொட்டி கல்வி, விஞ்ஞானம், கலாசாரத் துறைகளில் அந்நாடு அடைந்துள்ள சாதனைகளை விளக்குவதாக டிசம்பர் இதழ் வெளி வந்தது.

பாரத நாட்டின் மாபெரும் இதிகாசங்களான ராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டைப் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளையும் அழகான படங்களையும் கொண்டதாக ஜனவரி இதழ் வெளிவந்தது. 12 பக்க வண்ணப் படங்கள் இதன் சிறப்பு அம்சமாகும்.

பிப்ரவரி இதழில் மனித உரிமைகளைப் பற்றிய அரிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. விஞ்ஞானம் ஒரு பண்பாடு என்பதை மார்ச் இதழ் விளக்கியது. 'நமது வருங்கால ஆரோக்கியம்' பற்றிய கட்டுரைகளைக் கொண்டதாக ஏப்ரல் இதழ் வெளிவந்தது.

பல துறைகளிலும் அக்கறையுள்ளவர்களுக்கு அரிய கருத்துக்களை வழங்கும், சர்வதேச உணர்வை வளர்க்கப் பாடுபடும் 'யுனெஸ்கோ கூரியர்' எல்லோர்க்கும் ஏற்றதொரு வெளியீடாகும். உலகைக் காண விரும்பும் அறிவுத் தாகம் கொண்டோர்க்கும் கல்வி நிலையங்களுக்கும் பெரிதும் பயன்படும் பத்திரிகை. சர்வ தேசத் தரத்துக்கு சற்றும் குறையாத விதத்தில் கண்கவர் அமைப்புடன் சிறப்பாக வெளியிடப்படுகிறது.

சந்தா செலுத்தி மாதந்தோறும் வீடு தேடி வர ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50 கல்வி நிலையங்களுக்கு 9-50.

யுனெஸ்கோ கூரியர்

441, பூந்தமல்லி நெடுஞ்சாலை
கீழ்ப்பாக்கம் சென்னை-10.

REGD. NO. M. 827



## எழுத்தறிவு பெற விரைதல்

இந்தியா தன் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுடன் இணைந்த மாபெரும் எழுத்தறிவூட்டும் இயக்கத்தின் மூலம் ஐந்தாண்டுகளுக்கு 750,000 பேருக்குக் கல்விபுகட்ட திட்டமிட்டுள்ளது. இந்திய நகரமொன்றின் போக்கு வரத்து மிக்க பகுதியைப் படத்தில் காண்கிறோம்.